# பணமோ பணம்

சமூக நாடகம்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY
BG/6

எழுதியவர்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை B. A.

சரஸ்வதி நாடகமன்ற வெளியீடு
1977

முதற் பதிப்பு 1977

★ பதிப்புரிமை உடையது.

★ இந் நாடகத்தை நடிக்க விரும்புவோர் ஆசிரியரிட மிருந்து அனுமதி பெறவேண்டும்.

★ இந் நாடகத்தில் வரும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனை; எவரையும் சுட்டுவன அல்ல

விலை ரூபா 2·50

## ஆசிரியரின் பிற நூல்கள்

1. பொலிடோலே கதி நாடகம்
2. முகமூடிகள் ,, (அச்சில்)

இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாகத்
தமிழ்த்துறைத் தலைவரும், தமிழ்ப் பேராசிரியருமாகிய
**கலாநிதி சு. வித்தியானந்தன் M.A. (Cey.), Ph.D.(Lond.)**
வழங்கிய

# அணிந்துரை

திரு. ந. சுந்தரம்பிள்ளை அவர்கள் இலங்கைப் பல்கலைக் கழகப் பேராதனை வளாகத்திற் பயின்ற காலத்தில் ஆர்வமும் நடிப்பும் உள்ள ஓர் இளைஞராகத் தம்மை இனங் காட்டிக் கொண்டவர். விவாத மேடைகளில் அவர் கேட்டோரைக் கவரும் பேச்சாளராகத் தோன்றினர்.

காலஞ் சென்ற பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களினல் எழுதப்பட்டு எம்மால் தயாரிக்கப்பட்ட, 'சுந்தரம் எங்கே,' 'துரோகிகள்' ஆகிய நாடகங்களில் அவர் பங்கேற்ற வேளையில் அவரது நடிப்புத் திறனைக் கண்டு மகிழ்ந்தோம். பள்ளிப்பருவ முதற்கொண்டே அவர் தமிழ் நாடகத் துறையில் ஈடுபாடுள்ளவராக இருந்து வந்திருக்கிறர். அவ்வார்வம் இன்னும் அருகிவிடாதிருப்பது எமக்குப் பேருவகையினை அளிக்கிறது.

நல்ல கருத்துக்களையும் சீரிய உணர்வுகளையும் மக்களிடையே பரப்ப நாடகம் மிக உசிதமான ஊடகமாகும். வீணே பொழுதைக் கழிக்கவும், ஆபாசச் சேட்டைகள் மூலம் மக்களைக் கவர்ந்து பணமும் புகழும் சம்பாதிக்கவும் அக்கலையினைக் கையாளல் விரும்பத்தக்கதன்று. நாடகக் கலையார்வத்துடனும் சமூக நோக்குடனும் நாடகங்களை ஆக்கும் திரு. சுந்தரம்பிள்ளை பாராட்டுக்குரியவர். அக்காரணத்தினலேதான் நாடகத்துறையில் தாம் கொண்ட ஆர்வத்தைத் திரு. சுந்தரம்பிள்ளை துறந்துவிடாது தொடர்ந்து பல நாடகங்களை எழுதி அரங்கேற்றி வருகின்றர்.

'பணமோ பணம்' என்ற இந்த நாடகம் இலங்கை வரலாற்றில் இந் நூற்றுண்டின் ஆருவது தசாப்தப் பிற்பாதியைத் தன் பகைப்புலமாகக் கொண்டிருக்கின்றது. பணத்திலும் புகழிலும் கொண்ட மோகத்தினுல் மனிதர் எவ்வளவு கீழ்த்தரமாக நாணயம், மனிதாபிமானம் முதலிய பண்புகளைப் புறக்கணிக்கத் துணிகின்றனர் என்பதனை இந் நாடகம் காட்டுகின்றது.

பணத்துக்காகவும் அந்தஸ்துக்காகவும் மாலை மரியாதைக்காகவும் மனிதர் போடும் போலி வேஷங்களையும், காட்டும் புரட்டு நியாயங்களையும் மக்கள் சபைமுன் அம்பலப்படுத்துவது ஆசிரியரின் நோக்கமாகும்.

வெகுஜனங்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் அமைந்த காரணத்தினுலேதான் இந்த நாடகம் பல தடவை அரங்கேற்றப்பட்டதென்பது சொல்லாமலே போதரும். தெரிந்தெடுத்த சில பார்வையாளரை நம்பியிராது சாதாரண பொதுமக்களை நோக்கிச் சென்ற திரு. சுந்தரம்பிள்ளை, அம்மக்களுக்குச் சீரிய கருத்துக்களைக் காட்டி அவர்களிடை பேர்பெற்ற ஒரு நாடகத் தயாரிப்பாளராக விளங்குவது புலனுகின்றது. அவரது எதிர்கால முயற்சிகளும் வெற்றிகண்டு நன்மைதர வாழ்த்துகிறேன்.

21-6-77 சு. வித்தியானந்தன்

EARL... WEST CHUNNAKAM LIBRARY

# என்னுரை

நான் இந் நாடகத்தை எழுதி, முதன் முதலாக 1963-ம் ஆண்டு 'வெட்கமில்லை' என்ற பெயரில் அரங்கேற்றினேன். அதன் பின்பு இது பலரால் பல இடங்களில் மேடையேற்றப்பட்டுள்ளது. 'பணமோ பணம்' என்ற பெயர் மட்டுவில் மகா வித்தியாலய மாணவர்களால் நடிக்கப்பட்ட பொழுது, சூட்டப்பட்டது. அப்பெயரே முன்னைய பெயரிலும் பொருத்தமாக இருந்ததால், நிலைத்து விட்டது.

இன்றைய உலகில் பணமே சர்வவல்லமை உடைய சக்தியாகத் திகழ்கிறது. மனிதர்களுக்கிடையிலுள்ள உறவுகளையும் அதுவே பெருமளவு தீர்மானிக்கின்றது. ஒருவரிடத்துச் செல்வம் வந்துற்றவழி, உறவினர்களும், நண்பர்களும் அவரை வலியச் சென்றடைந்து கொண்டாடுவதும், அவர் அதை இழந்தவிடத்து, 'அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல்' அதே மனிதர்கள் அவரைப் பிரிந்து ஓடுவதும், அன்றாடம் உலகில் நாம் காணும் சர்வசாதாரண நிகழ்ச்சிகள்.

ஆனால், இப் பொது விதிக்கு அமையாது பணத்தின் வலிமைக்கு அடிபணிய மறுத்து, என்றும் ஒரே நீர்மையராய், அன்பு, நற்பண்பு, நேர்மை, மனிதாபிமானம் ஆகிய சீரிய பண்புகளைக் கடைப்பிடித்து வாழ்வோரும், உலகில் அருகியேனும் காணப்படுகின்றனர். 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்' என்ற தமிழ் மறைவின் கூற்றுக்கு ஒப்ப இத்தகைய மேன் மக்களாலேயே உலகம் நிலைபெற்று விளங்குகிறது. இச் சீரிய பண்புகள் மேலும் வளர்வதால், சமுதாய வாழ்வு சிறக்கும். இதுவே நாடகத்தின் மையக்கரு.

நாடகத்தின் கதை இலங்கையில் இந் நூற்றாண்டின் ஐம்பதுகளில் நடைபெற்றதாகப் புனையப்பட்டுள்ளது. வாசகர்கள் இதைத் தாமே கண்டு கொள்வர். பல்கலைக் கழகக்

கல்வி கற்பதற்கு. நாடகத்தின் கதாநாயகன் திருநாதனை விடக் கூடிய துன்பம் அனுபவித்தவர்கள் பலரை நான் என் பல்கலைக் கழக வாழ்க்கைக் காலத்தில் கண்கூடாகக் கண்டிருக்கிறேன்; சந்தித்துப் பழகியிருக்கிறேன். பல்கலைக் கழகக் கல்வி கற்ற, கற்கின்ற, வறிய மாணவர்கள் பலர், திருநாதனில் தம்மைக் காண்பர். திறமை இருந்தும் பணமின்மையால் திறமையை வெளிக்காட்ட முடியாது குமுறும் எழுத்தாளர்கள், கலைஞர்கள் உலகில் நிறைய உள்ளனர். அவர்களுக்கு மணாளன் ஒரு பிரதிநிதி. நாடகத்தின் ஏனைய பாத்திரங்களையும் இயற்கையாகவே படைக்க முயன்றுள்ளேன்.

இலங்கைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் நாடகத்திற்கு அணிந்துரை வழங்கியுள்ளார்கள். நாடகத் துறைக்கு அவர் ஆற்றியுள்ள சேவை இந்த நாடறியும். அத்தகைய பெருமகனது அணிந்துரை கிடைக்கப் பெற்றமையைப் பெரும் பாக்கியமாகவே கருதுகின்றேன்! அவருக்கு என் நன்றி! நாடகத்திற்கு முன்னுரை எழுதி உதவிய ஆசிரிய ஆலோசகர் திரு. கி. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் எனது நன்றி!

சென்ற ஆண்டு 'பொலிடோலே கதி' என்ற ஓரங்க நாடகத்தை முதன் முதலாக வெளியிட்டேன். அந் நாடகத்திற்கு வாசகர்களிடமிருந்து கிடைத்த ஆதரவே இந் நாடகத்தையும் வெளியிட வேண்டும் என்ற ஆர்வத்தை எனக்களித்தது. இந் நாடகமும் உங்களது ஆதரவைப் பெறும் என்பது எனது திடமான நம்பிக்கை. நாடகத்தைப் பற்றிய உங்களது கருத்துக்களை வரவேற்கின்றேன்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை,
20-7-77

ந. சுந்தரம்பிள்ளை

# முன்னுரை

## திரு. இ. சிவசுப்பிரமணியம் B. A., Dip. in Ed.

சமூகக்கல்வி ஆசிரிய ஆலோசகர்

தமிழில் நாடகத்துறை போதிய வளர்ச்சி அடைய வில்லை. காரணம், எழுத்தாளர்கள் நாடகங்களை எழுதத் தயங்குவதே. நாடகங்கள் தமக்கெனச் சில குறிப்பிட்ட இலட்சணங்களையும், அமைப்புக்களையும் உடையன. இயல் பாகவும், அனுபவ ஆராய்ச்சிகளினாலும் சில கலை நுணுக்கங் கள் கைவரப் பெற்றவர்களே நல்ல நாடகங்களை இயற்ற முடியும்.

'பணமோ பணம்' ஒரு தரமான நாடகம். ஒரு பல் கலைக் கழக மாணவனது வாழ்க்கையின் ஓர் உணர்ச்சி மயமான கட்டத்தில் ஆரம்பமாகிறது நாடகத்தின் கதை. அதிலிருந்து நாடகத்தின் உச்சக் கட்டம் வரை, விறு விறுப்பு ஏறிக் கொண்டே செல்கிறது. அதே நேரத்தில் நாடகத்திற்குப் பகைப்புலமாக எடுத்துக் கொண்ட காலச் சூழ்நிலையையும் ஆசிரியர் திறமையாகப் படம் பிடித்துக் காட்டுகிறார். பாற் பாயசத்தைப் பருகும்போது இடையி டையே வந்து சுவையை அதிகரிக்கும் முந்திரி வற்றல்கள் போல, நாடகம் முழுவதிலும் உயர்ந்த கருத்துக்கள் பரவ லாகக் கிடைக்கின்றன. நமது சமூகத்தின் குறைபாடுகள் பலவற்றை ஆசிரியர் நகைச்சுவையுடனே சுட்டிக் காட்டு வது அழகு!

நாடக பாத்திரங்கள் அன்றாட வாழ்வில் நாம் காணும் மனிதர்கள்! அசாதாரண சம்பவங்கள், முரண்பாடான கதைத் திருப்பங்கள் நாடகத்தில் இல்லை!

பல முறை மேடையேற்றப்பட்ட இந்நாடகம், இப் பொழுது வாசகர்களுக்கும் விருந்தாக வருகிறது!

திரு. ந. சுந்தரம்பிள்ளை இன்னும் பல நல்ல நாட கங்களை ஆக்கித் தமிழுலகிற்கு அளிக்க வேண்டும்!

கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

இ. சிவசுப்பிரமணியம்
1-7-77

## நாடகப் பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| 1. முத்துவேலர் | — | ஒரு ஏழைக் கமக்காரன். |
| 2. சிங்காரவேலர் | — | முத்துவேலரின் அண்ணன். |
| 3. மங்களம் | — | அவர்களது சகோதரி. |
| 4. சண்முகம்பிள்ளை | — | மங்களத்தின் கணவன். |
| 5. திருநாதன் | — | முத்துவேலரின் மூத்த மகன், பல்கலைக் கழக மாணவன். |
| 6. மணாளன் | — | முத்துவேலரின் இரண்டாவது மகன். எழுத்தாளன். |
| 7. தயாளன் | — | சிங்காரவேலரது மகன். |
| 8. வசந்தி | — | சண்முகம்பிள்ளை, மங்களம் தம்பதிகளின் ஒரே மகள். |
| 9. மலர் | — | திருநாதனது காதலி. |
| 10. மணிவண்ணன் | — | திருநாதனது நண்பன்; எழுது வினைஞன். |
| 11. சுப்பரம்மான் | — | மணிவண்ணன், மலர், இளங்கோ ஆகியோரின் தந்தை. |
| 12. பண்டா | — | மங்களம் வீட்டு வேலைக் காரன். |
| 13. இளங்கோ | — | சுப்பரம்மானின் இரண்டாவது மகன். |
| 13. ரவி | — | வசந்தியின் சினேகிதன். |

நாடக நிகழ்ச்சிகள் யாவும்
மூன்றரை ஆண்டுகளில் நடந்து முடிகின்றன.

## நாடகத்தின் அரங்கேற்றம்பற்றிய விபரங்கள்

1. அராலி வாணிவிலாச சபையின் பொன்விழா — 1963
2. அராலி சரஸ்வதி நாடக மன்றம் — 1963
3. வலிகாமம் மேற்கு கலை கலாச்சார விழா — 1963
4. மட்டுவில் மகாவித்தியாலய மாணவர்கள் 1971
5. சரசாலை சிறீகணேசன் கலாமன்றம் — 1973

# பணமோ பணம்

## உறுப்பு 1

### காட்சி 1

இடம்: யாழ்ப்பாணம், முத்துவேலர் வீடு.

[வீட்டின் தோற்றம் குடும்பத்தின் ஏழ்மை நிலையைப் பிரதிபலிக்கின்றது. தலைவாசலின் ஒரு மூலையில் ஒரு கதிரையும் மேசையும் இருக்கின்றன. மணாளன் கதிரையில் இருந்து, மேசைமேல் ஒரு கட்டுக் காகிதங்களை வைத்து வேகமாக எழுதிக் கொண்டிருக்கிறான். முத்துவேலர் கையில் ஒரு பேப்பருடன் வருகிறார். அவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடுகின்றது.]

முத்:- தப்பி! மணாளன்!

மணா:- (எழுதிக்கொண்டே) என்னப்பா?

முத்:- சந்தோஷமான செய்தியடா!

மணா:- (எழுதியபடி) என்ன சந்தோஷமா?

முத்:- (மகிழ்ச்சி ததும்ப) ஓமடா! ஓமடா! சந்தோஷ சமாச்சாரம்!

மணா:- (நிமிர்ந்து பாராது அலட்சியமாக) ஆ அப்படியானால் சந்தோஷப்படுங்கள்!

முத்:- டேய்! காலமை பேப்பர் பாத்தனியே?

மணா:- (நிமிர்ந்து பார்த்து) பத்திரிகை வாசிப்பது வேலையற்ற வீணர்களின் பொழுதுபோக்கு! (எழுதுகிறான்)

முத்:- இந்தப் பேப்பரைப் பாரடா, என்ன போட்டிருக்கிறாங்களெண்டு. (பத்திரிகையை நீட்டுகிறார்).

[மணாளன் எழுந்து நின்று, கையைக் காட்டி, அபிநயித்து, இங்கும் அங்கும் திரிந்து பேசுகிறான்.]

மணா:- பத்திரிகையில் அப்படி என்ன புதுமையாகப் போட்டிருக்கப் போகிறார்கள்?...... ''அந்த மந்திரி அங்கே ஒரு அடிக்கல் நாட்டினார்; இந்த மந்திரி இங்கே ஒரு கூட்டத்தில் இப்படிப் பேசினார்...... பாராளுமன்றத்தில் எம்பீக்கள் மோதல்! .......... கழுத்தில் கத்தியால் குத்தப்பட்ட காளை ஒருவன் துடிதுடித்து மாண்ட பரிதாப சம்பவம்! ..... பட்டப் பகலில் பயங்கரக் கொள்ளை! ........... ஐந்து பிள்ளைகளின் தாய் அடுத்த வீட்டு வாலிபனுடன் ஓட்டம்!... காதலில் தோல்வி; கன்னியும் காதலனும் நஞ்சிடம் தஞ்சம்!''......... இவை தானே அப்பா புதினங்கள்! இவற்றை வாசிப்பதே வீண்வேலை!

முத்:- ஒரு கருமம் பாக்கிறபிள்ளை, இதுகளை வீண் வேலை எண்டாப் பறவாயில்லை. நீ என்ன செய்யிறு? ''கதை எழுதுறன்; கதை எழுதுறன்'' எண்டு வீண் வேலைதானே பாக்கிறாய்!

மணா:- (உணர்ச்சிவசப்பட்டு) கதை எழுதுவது வீண் வேலையா? நான் செய்யும் வேலையின் மகத்துவம் உங்களுக்கு விளங்கவில்லை! உங்களுக்கு மட்டுமல்ல......... ஒருவருக்குமே விளங்கவில்லை! சரி, விளங்கா விட்டாற் போகிறது. எனக்கு நீங்கள் ஒரு உதவியும் செய்யவேண்டாம்; கறைச்சலாவது கொடுக்காமலிருந்தாற் போதும்!

முத்:- இப்ப உனக்கு என்ன கரைச்சலைத் தாறன்? விடிஞ்சாப் பொழுதுபட்டா, வேறை ஒரு பிராக்கும் பாராமை, எழுதி எழுதிக் கிழிச்சுக் கிழிச்சுக் குப்பைக் கூடையை நிரப்பூறாய்!

மணா: ஒரு நல்ல, 'ஐடியா' வந்திருக்கிறதே என்று, எழுத உட்கார்ந்தால் நிம்மதியாக எழுத விடுகிறீர்களா? வந்து குழப்புகிறீர்களே, சிவபூசையிற் கரடி புகுந்தது போல!

முத்:- சரி, நீ நல்ல நிம்மதியா எழுது. இப்ப இந்தப் பேப்பரைப்பார். (பேப்பரை நீட்டி) சோதினை மறுமளி

யல்லே போட்டிருக்கிறுங்கள். (மகிழ்ச்சியால் முகம் மலர) கொண்ணன் சோதினே பாஸ் பண்ணீட்டான்! இன்ரவியூ இல்லாமலே எடுக்கிறுங்கள்!

மணு:- ஓ! அப்ப அண்ணரும் பல்கலேக்கழகம் சென்று கல்வி கற்கப் போகிறுர்.

முத்:- ஓமடா, என்ரை பிள்ளேயும் யூனிவேசிட்டிக்குப் போய்ப் படிக்கப் போருன்! காசுக்காறன் வீட்டுப் பிள்ளே யள் மட்டும் யூனிவேசிட்டியிலே படிக்கிறதில்லே. (மகிழ்ச்சி பொங்க) என்ரை பிள்ளே, இந்த ஏழைக் கமக்காறன்ரை பிள்ளேயும், போப்போருன்ரா! சர்வகலாசாலேலே படிச்சு, பீ. ஏ., எம். ஏ. எண்டு பட்டம் வாங்கப் போருன்!

மணு:- (எதையோ யோசித்தபடி) அண்ணர் பட்டதாரியாவது எனக்கும் மகிழ்ச்சிதான்.

முத்:- என்னடா, எந்தப் பெரிய விஷயத்தை வந்து சொல்லூறன் ...... சர்வசாதாரணமாக் கேக்கிறியே! ஒரு ஆச்சரியம், ஒரு சந்தோசம், ஒண்டுமில்லே! உனக்கென்னடா தெரியும்......? நான் எத்தினே நாளாக் கண்ட கனவு இது?

மணு:- அண்ணர் பல்கலேக்கழகத்திற்குச் செல்ல வேண் டும் என்று விரும்பினர்; கவனமாகப் படித்தார்; பரீட்சையிற் சித்தியடைந்தார். அதற்கு என்னே என்ன செய்யச் சொல் கிறீர்கள்? நான் துள்ளி மிதித்துக் கூத்தாடவா?

முத்:- நீ ஏன்ரா கூத்தாடுரு? இப்ப இருக்கிற புழுகத் துக்கு எனக்கல்லோ, கூத்தாட வேணும் போலே இருக்கு!

மணு:- அப்படியானல், கூத்தை ஆடுவது தானே! என்னே எதற்காக வந்து குழப்புகிறீர்கள்? நான் என்ன அந்தக் கூத்திற்கு மத்தளம் அடிக்கவா?

முத்:- டேய்! உனக்கிப்ப நான் இதைச் சொல்லூறது என்னத்துக்கு? நீயும் உந்தக் கதை எழுதுற தெண்டி வீண்

வேலையை விட்டுட்டுக், கவனமாப் படிச்சு, ஏதாவது சோதினையைப் பாஸ் பண்ணப் பார்.

மணு:- அப்பா! நீங்கள் என்னை வெறும் புத்தகப் புழுவாகச் சொல்கிறீர்களா? பரீட்சைக்குப் படிப்பதெல்லாம் போலிப்படிப்பு! வெறும் கண் துடைப்பு! நான் விழைவது உண்மையான அறிவு வளர்ச்சியை!

முத்:- கதை எழுதுவதுதான் உண்மையான படிப்பு! டேய்! உனக்கென்ன விசரே? சும்மா போவன். கதை எழுதி அறிவு வளக்கிறுராம்!

[இந்த இடத்திலிருந்து இக் காட்சி முழுவதிலும் மணுளன் உணர்ச்சிவசப்பட்டே பேசுகிறுன்.]

மணு:- அப்பா! எழுத்தாளனது சக்தியைப்பற்றி உங்களுக்குத் தெரியாது! எழுத்தாளனல் உலகை ஆக்கவும் முடியும்; அழிக்கவும் முடியும்! உலகத்திலே ஏற்பட்ட பெரும் பெரும் மாற்றங்களுக்கு, பிரான்ஸ், ரஸ்யா, போன்ற நாடுகளிலே ஏற்பட்ட புரட்சிகளுக்கெல்லாம் வித்து, எழுத்துத்தான்!...... பேரறிஞர்கள் சிந்தித்தார்கள்; தங்கள் சிந்தனைகளை எழுத்திலே வடித்தார்கள்; அக் கருத்துக்கள் மக்களது உள்ளங்களிற் பதிந்து அவர்களை உணர்ச்சி வசமாக்கின. அவர்கள் ஆக்கவேலையில் இறங்கினர்; புதிய உலகம் பிறந்தது!

முத்:- ஏன்ரா அப்பா, உதைச் சும்மா தமிழிலை சொல்லன். ஏன் அவசரமில்லாமல் முக்கூருய்?

மணு - நான் ஒன்றும் முக்கவில்லை; எழுத்தின் சக்தியை உங்களுக்கு விளக்கினேன்! அவ்வளவுதான்! இப்பொழுது இருக்கும் சமுதாய அமைப்பை மாற்றி, புதிய அமைப்பை ஏற்படுத்தும் சக்தி எழுத்தாளனுக்கு உண்டு.

முத்:- இவ்வளவு காலமும் எழுதூரு, எழுதூரு, நீ எழுதினதிலை ஒரு கதையாவது, கட்டுரையாவது ஒரு பத்திரிகேலை வந்திருக்குதா? சொல்லு பாப்பம்! இந்த லட்சணத்திலை உலகத்தை மாத்த வெளிக்கிட்டிருக்கிருய்!

மணு:- அப்பா! பத்திரிகைகள் தனிப்பட்டவர்களின் சொத்து. கேவலம் பணத்திற்காக நடத்தப்படுபவை! அவர்கள் தங்களுக்குப் பிடித்த கருத்துள்ளவற்றைத்தான் போடுவார்கள். பத்திரிகைகளைக் கொண்டு ஒரு மனிதனுடைய அறிவை அளவிட முயல்வது, உலோபி ஒருவன் கொடுக்கும் சோற்றைக் கொண்டு, பிச்சைக்காரனுடைய பசியை அளவிடுவதுபோல!

முத்:- என்ரை பிள்ளையை எனக்கு விளங்காமல், பத்திரிகைக்காறனைக் கேட்டுக்கொண்டு வரட்டே?.........

மணு:- உங்களைப் போலத்தான், அவர்களுக்கும் இப்பொழுது என் எழுத்தின் ஆற்றல் விளங்கவில்லை. ஒரு கதை மட்டும் அச்சுவாகனம் ஏறட்டும்......... அதன் பின்பு, என் மதிப்பு எப்படி உயர்கிறது என்பதை, இருந்து பாருங்கள்! இன்று என் கதைகளைப் போட மறுக்கும் அதே பத்திரிகைகள், என் கருவூலங்களைப் பெறுவதற்காகப் போட்டி போடப் போகின்றன! அப் பத்திரிகைகளின் பிரதிநிதிகள் எல்லாம் என் வீட்டுக்கு வந்து தவங்கிடக்கப் போகிறார்கள், கதைகளுக்காகவும், கட்டுரைகளுக்காகவும்!

முத்:- கனவு காணுறு!......... நானும் ஒரு கனவு காணுறன்; நீயும் ஒரு கனவு காணுறு!

மணு: ''இதோ ஈழத்திருநாட்டிலே ஒரு பெர்னாட்ஷா! தமிழ்நாட்டுக் கதை மன்னன் கல்கியின் வாரிசு! நாவல் இலக்கியத்தின் சிகரத்தைக் கண்ட, பெருமகன் டால்ஸ்டாயின் அவதாரம்!'' என்றெல்லாம் விமர்சகர்கள் புகழ்மாலை சூட்டப் போகிறார்கள்!......... ''சிந்தனைச் சிற்பி! தத்துவ ஞானி! வரப் போகும் புதிய உலகின் உதய தாரகை! அறிவுலக மேதை!'' என்றெல்லாம் அறிஞர்களுடைய பாராட்டுக்கள் வந்து குவியப் போகின்றன!.........

[சுப்பரம்மான் வருகிறார்]

சுப்:- என்ன, தம்பி இண்டைக்குக் கொஞ்சம் காரசாரமாப் பேசுறார்!

முத்:- ஓ சுப்பரம்மானே? வாருங்கோ, வாருங்கோ! உவன் உப்பிடித்தான்; எண்டைக்குக் கதை எழுதத் தொடங்கிஞனே, அண்டேலை இருந்து வசனம் பேசத் தொடங்கிட்டான்........ அது சரி; ஏது இந்தப் பக்கம்?........

[மணுளன் காகிதக் கட்டுக்களையும் தூக்கிக் கொண்டு வேகமாக உள்ளே போகிருன்..முத்து வேலரும் சுப்பரம்மானும் வாங்கில் இருக்கின்றனர்]

சுப்:- உந்தக் கடைக்கு வந்தனுன், சுறுட்டு வாங்க. இந்தச் சுறுட்டுக் குடிக்கிற பழக்கத்தைப் பழகினதாலை, பெரிய தொல்லையாப் போச்சு. ஆரைக் கொலை செய்தெண்டா என்ன அந்தந்த நேரத்துக்கு ஒண்டு புகைச்சுப் போட வேணும்.

முத்:- இப்பென்ன சுறுட்டு வாங்கீட்டியளோ? ——

சுப்:- ஓ, ஓ, வாங்கீட்டன்.

முத்:- அதிருக்க; காலமை பேப்பர் பாத்தனீங்களே?

சுப்:- ஏன் கேக்கிறு? என்ன விஷயம்?

முத்:- வேறை ஒண்டுமில்லை. சோதினை மறுமளி போட்டிருக்கிறுங்கள்! (மகிழ்ச்சியுடன்) தம்பி சோதினை பாஸ் பண்ணிப் போட்டான்! யூனிவேசிட்டிக்குப் போப்போருன்!

சுப்:- ஆர், தம்பி திருநாதனே? நல்லது! நல்லது! எனக்கு அப்பவே தெரியும், அவன் தம்பி ஒரு மேல் நிலைக்கு வருவனெண்டு. ஏன் நான் உனக்குச் சொல்லேல்லையே ''உன்னுடைய மூத்த மேன் கொஞ்சம் விவேகி'' எண்டு?

முத்:- சொன்னனீங்கள், சொன்னனீங்கள்! இதென்ன உங்களுக்குத் தெரியாதே? இவ்வளவு அனுபவப்பட்ட ஆளுக்கு?

சுப்:- என்ரை மூத்தமேனும் அவனும் ஒண்டாயல்லே படிச்சவங்கள். மணிவண்ணன் இருக்கேக்கை, அடிக்கடி எங்கவீட்டை வாறவன்.

முத்:- ஓ! அவங்கள் நல்ல சினேகிதம்;

சுப்:- அது சரி; இப்ப சிலவுக்கு என்ன செய்யப் போருய்? ஆயிரக் கணக்கிலே வரப்போகுதே.

முத்:- ஆயிரமோ? மூண்டு வரியத்துக்கும் குறைஞ்சது ஐயாயிரம் ரூபாயாவது வேணும். ஏதோ கிடக்கிறதை வித்துச் சுட்டெண்டாவது படிப்பிக்கத்தானே வேணும். உங்கை எத்தினை பேர் காசையும் வைச்சுக்கொண்டு, பிள்ளை படிக்கேல்லையே எண்டு அழுருங்கள்.

சுப்: இஞ்சா முத்து! நான் சொல்லூறத்தைக் கேள். உனக்கு இப்ப விக்க என்ன கிடக்கு? இருக்கிற வீடு வளவு தானே! அதையும் வித்துப்போட்டு, என்ன நீயும் பிள்ளை யளும் தெருவிலை நிக்கப் போறியளே? பேசாமை கொண்ண ரிட்டைப் போ; அவரிட்டை வேண்டியது கிடக்கு. இந்த உதவி செய்யிறது அவருக்குப் பெரிய காரியமில்லை.

முத்:- அவருக்கது பெரிய காரியமில்லை. ஆனு, நான் இவ்வளவு காலமும் முட்டுப்பட்டுட்டன் எண்டு சொல்லிச் சொந்தக் காறரிட்டையோ, பிறத்தியாரிட்டையோ கை நீட்டி ஒரு சதம் வாங்காமல், மானத்தோட சீவிச்சுப் போட்டன். இப்ப இதுக்காக அண்ணரிட்டைப் போய்க் கை நீட்டுற தெண்டா, எனக்கொரு மாதிரி இருக்கு—......

சுப்:- அதொரு மாதிரியுமில்லை. வேறை ஆரிட்டைப் போருர? உன்ரை கொண்ணரிட்டைத் தானே! அவற்றை பொடியனும் படிக்கேல்லை. இனித் தம்பியாற்றை பிள்ளை படிச்சு நல்லா வந்தா, அவருக்கும் பெருமைதானே!

முத்:- அண்ணர் இப்ப உதவி செய்வரெண்டே நான் நினைக்கேல்லை. இவ்வளவு காலமும் கோயில், குளம், இலெக்சன் எண்டு எவ்வளவைச் சிலவழிச்சார்? நான் கூடப்பிறந்த தம்பி கஸ்டப்படுறனெண்டு, ஒரு சதம் தரேல்லை.

சுப்:- நீ எப்பவாவது கொண்ணரிட்டைப் போய் உதவி கேட்டியோ? கேட்டாத்தானே தர. இந்த விஷயத் துக்கு அந்தாள் ஒருக்காலும் மறுப்புச் சொல்லாது.

முத்;- என்னவோ அம்மான், நீங்கள் சொல்லூறியள்; எனக்கு மனம் வரேல்லே; வீண் கடமைப்பாடு.

சுப்:- இதிலே ஒரு கடமைப்பாடுமில்லே இது ஒரு நல்ல விஷயம். கடமைப் பட்டாலும், பறவாயில்லே. தகப்பனிட்டைக் காசில்லாட்டாப், பெரிய தகப்பன், சிறிய தகப்பன் குடுக்கக் கூடாதே? அப்பிடி உனக்கது கடமைப்பாடுபோலே இருந்தா, நாளைக்கு அவன் படிச்சு உத்தியோகம் எடுத்த உடனே, அவற்றை காசை எறிஞ்சு போட்டுப் போவன்.

முத்: நீங்களும் ஒரேயடியாப் பிடிக்கிறியள். அதுக்கென்ன, ஒருக்காக் கேட்டுப் பாப்பம். அப்ப, அம்மான், நீங்களும் வாருங்கோ என்னோடை.

சுப்:- சாச்சா; இரண்டு பேரும் கூடிக்கொண்டு போகக் கூடாது. அப்பிடிப் போனா, ஏதோ திட்டம் போட்டு வாறமெண்டு அந்தாளுக்குச் சந்தேகம் வந்துடும்.

முத்:- ஓ! ஓ! காசுக்காறருக்குச் சந்தேகம் அதிகம்.

சுப்:- நான் நேரத்தோடையே போய், சிங்காரவேலரோடை கதைச்சுக்கொண்டு நிக்கிறன்; நீ பிறகு வா. ஏதோ தற்செயலாச் சந்திககிறதுபோலே சந்திப்பம்.

முத்;- சரி, அப்ப எப்ப போவம்?

சுப்:- ஏன் பிற்போடுவான்? நாளைப் பின்னேரமே போவம்.

முத்:- நீங்கள் அங்கை போகேக்கை, இஞ்சை வந்திட்டுப் போங்கோ. நான் பின்னாலே வாறன்.

சுப்:- சரி, சரி. முத்து, நீ ஒண்டுக்கும் யோசியாதை! சிங்காரவேலரை நானல்லோ சரிப்பண்ணித் தாறது!

திரை

## காட்சி 2

இடம்: யாழ்ப்பாணம், சுப்பரம்மான் வீடு.

[ஒரு சிறிய மண்வீட்டின் முன் திண்ணை. மலர் ஒரு பாட்டை மெல்லிய குரலில் பாடியபடி, சுளகில் உள்ள அரிசியில் நெல்லுப் பொறுக்கிக் கொண்டிருக்கிறாள். திருநாதன் வருகிறான். அவனைக் கண்டதும் பாட்டு நிற்கிறது.]

திரு:- பாட்டு வலு பிரமாதம்! ஏன் நிற்பாட்டிப் போட்டாய் என்னைக் கண்டதும்?

மல:- (எழுந்து நின்று) உங்களைக் கண்டதும் ஏன் நிற்பாட்ட வேணும்? நீங்கள் என்ன சிங்கமா, புலியா பாத்துப் பயப்பிட?

திரு:- பின்னை ஏன் நிறுத்தினை? இன்னும் கொஞ்சம் பாடன்; நல்லா இருக்கு!

மல:- பாட்டு முடிஞ்சுது; நிற்பாட்டிப் போட்டன்...... அதுசரி; பெரிய வெற்றிச் செய்தியெல்லாம் கேள்விப் பட்டன். அதைச் சொல்லக்கூட ஒருக்கா இந்தப் பக்கம் வரேல்லையே! நான் வேறை ஆரோ சொல்லித்தான் கேள்விப்பட்டன்.

திரு:- நேற்றுத்தானே 'றிசல்ற்' வந்தது. இண்டைக்குக் காலமை வந்திருக்கிறன். இதிற் பாக்கச் செதியா எப்பிடி வாறது? தந்தி அடிச்ச மாதிரி வந்திருக்க வேணுமா?

மல:- (கொஞ்சலாக) அப்பிடி வந்தாத்தான் என்னவாம்?

திரு:- மலர்! நீ என்ன, ஒண்டும் விளங்காதது மாதிரிக் கதைக்கிறு. திடீரெண்டு எப்பிடி வாறது? வீட்டிலை ஆக்கள் இல்லாத நேரம் பாத்துத் தானே வரவேணும். மணிவண்ணன் இருந்தானெண்டா வேறை கதை. அவனைப் பாக்க வாற சாட்டிலை எப்பவும் வரலாம்.

மல:- இப்ப ஆக்களில்லை எண்டு உங்களுக்கு எப்பிடித் தெரியும்?

திரு:- இளங்கோ பள்ளிக்கூடம் போயிருப்பன். சுப்பரம்மான் ஊர் சுத்தப் போற நேரம்.

மல:- அப்பா இருந்தா ——— ?

திரு:- (பதட்டமடைந்து) இருக்கிறாரா?

மல:- (குறும்புச் சிரிப்புடன்) இருக்கிறர்.

திரு:- (போக அடி எடுத்து வைத்து) அப்ப நான் போட்டுப் பிறகு வாறன்.

மல:- கொஞ்சம் நில்லுங்கோ! எங்கை, வேட்டை நாயைக் கண்ட முயல் மாதிரிப் பாஞ்சு விழுந்து ஓடுறியள்? (சிரிக்கிறள்.)

திரு:- பின்னை என்ன? தகப்பன் வீட்டுக்கை இருக்க, நான் திண்ணையிலை மகளோடை காதல் வசனம் பேசிக் கொண்டிருந்தா, அவர் என்ன நினைப்பர்?

மல;- என்ன நினைக்கிறது? (குறும்பாக) ரண்டு பேருக்கும் கெதியாக் கலியாணம் பண்ணி வைக்க வேணும் எண்டு நினைப்பர்.

திரு:- (புன்முறுவல் பூத்து) ஓஹோ! அப்பிடியா சங்கதி? எனக்கு விளங்குது!

மல:- என்ன விளங்குது?

திரு:- பொய் பேசியா பழகுறு? என்ன, ஒரு விஞடிலை ஆளைப் பதற வைச்சுட்டியே! இப்பிடிப் பொய் சொல்லுறத்துக்கு உனக்கு— ……— (அடிக்கக் கையை ஓங்குகிறுன்; மலர் விலகுகிறுள்.)

மல:- நானென்ன இருக்கிறுரெண்டுதானே சொன்னன். வீட்டிலை இருக்கிறு ரெண்டா சொன்னன்? "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பிசாசு" எண்ட மாதிரி……— நீங்களெல்லோ வீணு………………

திரு:- பயந்துட்டனு?

மல:- யூனிவேசிற்றிக்குப் போற வீரன் இப்பிடிப் பயப்பிடலாமா?

திரு:- "அஞ்சுவது அஞ்சாமை பேதமை"!

மல:- உந்தத் தமிழெல்லாம் எனக்கு விளங்காது' உதென்ன யூனிவேசிற்றித் தமிழா?

திரு:- இல்லே, யூனிவேசிற்றிக்கு இன்னும் போகேல்லே இது வாசிற்றிக்குப் போற தமிழ்!

மல:- 'றிசல்ட்' வந்த உடனேயே உந்தத் தமிழ் வந்துட்டுது! இனி வாசிற்றிக்குப் போய்ப் படிச்சிட்டு வந்தா, என்னென்ன தமிழெல்லாப் பேசுவியளோ....! அகராதி பாத்துத்தான் கருத்துக் கண்டுபிடிக்க வேணும்!

திரு:- நான் வாசிற்றீலே தமிழ் படிக்கப் போறதில்லே. இங்கிலீசிலேதான் எல்லாப் படிப்பும்!

மல:- தமிழே விளங்காதாம். பேந்து இங்கிலீசும் சேந்துட்டாப், பேசத்தேவையில்லே! அப்ப தமிழ் இங்கிலிஸ் இரண்டு அகராதியும் கொண்டு திரிய வேண்டியது தான்!

திரு:- உனக்கு என்ன பிராக்கு? சும்மா வீட்டிலே தானே இருக்கிறுய்; நல்லாப் பிரட்டிப் பிரட்டிப் பார் அகராதியளே!

மல:- என்ன, சும்மா இருக்கிறனு? வீட்டுப் பிராக்கு முழுக்க நான் தானே பாக்கிறன்.

திரு:- அப்பிடியா? நல்ல விஷயம்; நல்லாச் செய் வேலேயளே!

மல:- பெரிய சந்தோசப் படுறியள்! நான் கஸ்டப் படுறதிலே, அப்பிடி உங்களுக்கு என்ன மகிழ்ச்சி?

திரு:- (குறும்பாகச் சிரித்து) நீ இப்பவே வீட்டு வேலே எல்லாத்தையும் செய்து பழகீட்டி யெண்டாப், பிறகு எனக்குத் தொல்லே இல்லே.

மல:- (நாணி) போங்கோ! (மறுபக்கம் திரும்புகிறாள்.)

திரு:- (கேலியாக) கோபமா? அல்லது ..—— வெட்கமா?

மல - (அவன் பக்கம் திரும்பி) அதிருக்கட்டும்; ஏன் கனநாளா இந்தப் பக்கம் தலைகாட்டேல்லே?

திரு:- என்ன கனநாளெண்டு குற்றப் பத்திரிகை வாசிக்கிறு? ஆக ஒரு கிழமைதானே!

மல:- ஒரு கிழமை எண்டாக் கொஞ்சமா? ......— ஏழு நாட்கள்!

திரு:- (கேலியாக), ஆ! அப்பிடியா? சரியாச் சொல்லீட்டியே; கெட்டிக்காறி!

மல:- உங்களுக்கு என்னிலை உண்மையான அன்பிருந்தா இப்பிடி வராமல் இருந்திருப்பியளா?

திரு - மலர்! வாழ்க்கை எண்டா என்ன, மலர் மஞ்சமா? எத்தினை கருமங்கள்! எத்தினை பிரச்சினையள்! தினமும் காதற் கீதம் பாடிக்கொண்டிருக்க முடியுமா?

மல:- (பொய்க் கோபத்துடன்) சரி, போய் உங்களுடைய கருமங்கள் எல்லாத்தையும் பிழை விடாமற் பாருங்கோ!

திரு:- கோபத்தைப் பாரன்! மின்னல் வேகத்திலையல்லே வருது! இஞ்சை பார் மலர்! நான் அடிக்கடி இந்தப் பக்கம் வந்தா, அனாவசியமா மற்றவேன்ரை சந்தேகத்தைத் தூண்டவேண்டி வரும்.. எங்களைப் பற்றி, நாலுபேர் நாலு விதமாப் பேசுவினம். ஊரிலை இதுக்கெண்டே ஒரு கூட்டம் இருக்குது. சந்தி வழியை இருந்து வம்பு பேசுற சோம்பேறிக் கூட்டம்! எங்களுடைய கதையைக் கேள்விப்பட்டா, 'வெறும் வாயை மெல்லுறவனுக்கு அவல் கிடைச்ச மாதிரி,' இருக்கும் அவங்களுக்கு. வீண் கதைக்கு ஏன் இடம் குடுப்பான் எண்டு தான்......

மல;- ஓம், ஓம்! அது சரிதான். நான் உங்களை ஒவ்வொரு நாளும் கண்டா என்ன எண்ட ஆசேலே, சும்மா சொன்னன்.

திரு:- சரி, அப்ப நான் போட்டு வரட்டா?

மல!- ஏன் அவசரப்பட்டு ஓடுறியள்?

திரு!- நான் இந்தச் சோதினை பாஸ் பண்ணின விஷயத்தைச் சொல்லத்தான் வந்தனான்.

மல!- அண்ணைக்கு அறிவிச்சிட்டியளா?

திரு:- அவர் பேப்பரிலே பாத்திருப்பர் தானே! கொழும்பிலே முதல் நாளே போட்டிருப்பங்கள். எல்லாத்துக்கும் நீயே எழுதிவிடன்.

மல;- நான் எழுதினா அவர் ஏதும் நினைச்சாலும் நினைப்பர். நீங்களே எழுதி விடுங்கோ.

திரு:- சரி, நானே எழுதி விடுறன்.

மல!- அண்ணை அறிஞ்சா நல்ல சந்தோசப்படுவர்.

திரு;- மணிவண்ணனும் தொடர்ந்து படிச்சிருந்தா, வாசிற்றிக்கு எடுபட்டிருப்பன்.

மல:- அப்பா எங்களை எஸ். எஸ். சி. வரையும் படிப்பிச்சதே பெரிய காரியம்.........!

திரு:- சரி வரட்டே? பிறகு வாறன் ஆறுதலாய்க் கதைக்க.

மல:- இனி எங்கை நேரம் வரப் போகுது உங்களுக்கு? - .......– இப்ப மிச்சம் பெரியாளாயிட்டியள்! இனி பி. ஏ., எம். ஏ. எண்டு எடுத்திட்டா, பெரிய பெரிய இடங்களிலே இருந்தெல்லாம் கலியாணங்கள் பேசி வரும்.....— பேந்து இந்த மலர் இருக்கிறளோ, செத்துப்போனளோ? எண்டது கூட, ஞாபகம் வராது!

திரு:- நீ உப்பிடிச் சொன்னா, நான் யூனிவேசிட்டிக்குப் போகாமலே விட்டுடுறன்.

மல;- (கொஞ்சலாக) ஐயையோ! நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னன்: உங்களைக் கொஞ்ச நாளைக் குப் பிரிஞ்சிருக்க வேணுமே எண்ட ஏக்கத்திலே! நீங்கள் கட்டாயம் யூனிவேசிட்டிக்குப் போக வேணும்! படிச்சுப் பட்டம் வாங்க வேணும்!

திரு:- நான் எங்கை போனுலென்ன, எந்தப் பட்டம் பெற்றுலென்ன, எனக்கு என்றைக்கும் வேண்டியது என் மலர்தான். (செல்லமாக அவள் கன்னத்தில் தட்டு கிருன்)

திரை

## காட்சி 3

**இடம்: யாழ்ப்பாணம், சிங்காரவேலர் வீடு.**

[ஒரு பெரிய கல்வீட்டின் முன் விருந்தை. வீட்டின் தோற்றமும், அதில் உள்ள தளபாடங்களும் அதன் சொந்தக்காரரின் செல்வ நிலையை புலப் படுத்துகின்றன. **சுப்பரம்மான்** கதிரையில் இருக் கிருர். **சிங்காரவேலர்** உலாவி உலாவிப் பேசுகிருர்.]

சிங்:- அம்மான், இந்த முறை, அம்மன் கோவில்லே என்ரை திருவிழாவை எழுப்பிக் காட்டுறன் பாருங்கோ!

சுப்;- ஏன், என்ன விஷேசம் இந்த முறை?

சிங்:- யாழ்ப்பாணம் வந்திருக்கிற, திறம் இந்தியா மேளம் அத்தினையும் வருது.

சுப்:- ஆரார்? சண்முகசுந்தரம்... ......

சிங்:- சண்முகசுந்தரம், தங்கவேல், முத்துவீர், ராம தாஸ் நாலு செற்றும் வருது. போனமுறை பாருங்கோ, நான் திறம் மேளமெண்டு மூண்டு கூட்டத்தைப் பிடிச்சுப்

போட்டு விட, அவங்கள் ஏழாந் திருவிழாக்காறர் நாலு கூட்டம் பிடிச்சுட்டாங்கள். எனக்கதிலே சின்னத் தோல்வியாப் போச்சு. இந்தமுறை சுக்கிப் பாக்கட்டு! இந்தச் சிங்காரவேலனுடையல்லே போட்டி போட வெளிக்கிட்டிருக்கினம்!

சுப்:- இப்ப மேளங்களுக்கு மட்டுமே, காசு ஆயிரத்துக்கு மேலே வரப்போகுதே!

சிங்:- உது மட்டுமே? ரண்டு சிகரம், மூண்டு லைற் மெசின் ... ... ... ...

சுப்:- அப்ப ரண்டாயிரத்தைத் தாண்டப் போகுது!

சிங்:- காசை வைச்சிருந்து என்னம்மான் செய்யிறது? இந்த ஊருக்குக் காட்ட வேண்டாமே, சிங்காரவேலனிட்டை எவ்வளவு இருக்கெண்டு?

[சிங்காரவேலர் கதிரையில் இருக்கிறார்]

சுப்:- ஓ! அது சரி, அது சரி; காட்டத்தான் வேணும். அப்பதான் இவங்களுக்கு விளங்கும், உங்களைப் பற்றி.

[தயாளன் வருகிறான்.]

தயா:- ஆரன், ஏழை பரதேசிகள் பசிக்குதெண்டு கேட்டா, ரண்டு ரூபா குடாயினம். இப்ப, திருவிழாவுக்கு ரண்டாயிரம் சிலவாகுது!

சிங்:- (குரலை உயர்த்தி) ரண்டாயிரம் இல்லையடா மூவாயிரம் முடியப் போகுது! அதுக்கு உனக்கென்ன?

தயா:- எனக்கொண்டுமில்லை. இதெல்லாம் வெறும் போலி வேலை எண்டு சொல்லுறன்.

சிங்:- பாருங்கோவனம்மான், இவன்ரை கதையை! இவங்களுக்கு இப்ப சமய அறிவே இல்லை. நாங்கள் பழைய ஆக்களாவது ஒரு வழிபாட்டைத், தான தருமத்தைச் செய்வமெண்டா விடுதுகளே?

தயா:- இப்ப தானதருமமே செய்யப் போறியள்? வழிபடுற தெண்டா, உப்பிடிக் காசைக் கொட்டி டாம்பீகச் சிலவு செய்துதானு வழிபட வேணும்?

சிங்:- ஏன்ரா, காசைச் சிலவளிச்சா என்னடா? அம்மாளாச்சிக்குத் தானே!

தயா:- ஏன் அம்மாளாச்சி கனவிலே வந்து கேட்டவவா, உப்பிடி எல்லாம் கூத்தடிக்கச் சொல்லி? எல்லாம் தற்பெருமைக்காகவும், புகழுக்காகவும் நடக்குது!

சிங்:- இப்பிடி யொரு நன்மையான தரும காரியத்தைச் செய்யப் போகேக்கை, கூடமாட ஒத்தாசையா நிப்பமெண்டில்லே...... ஒரு குதர்க்கப் பேச்சு!...... பகிடி!...... இதுகள் எப்பிடி அம்மான் உருப்படுறது?

சுப்:- உதுக்குத் தம்பியைக் குறை சொல்லாதேங்கோ காலத்தின்ரை கோலமது. அது கிடக்க........ உங்களுக்கு விஷயம் தெரியுமோ?

சிங்:- என்ன? சொல்லுங்கோவன்.

சுப்:- முத்துவேலற்றை மூத்த மேனல்லே சோதினை பாஸ் பண்ணிப் போட்டானும்; யூனிவேசிட்டிக்குப் போப் போறுனும்.

சிங்:- (குரல் இறங்குகிறது) எண்டுதான் நானும் கேள்வி. இஞ்சை பாருங்கோவன்! இதுக்குமல்லே காசை அள்ளி இறைச்சன் படிப்பிக்க எண்டு சொல்லி. யாழ்ப்பாணத்திலே இவன் படிக்காத பள்ளிக்கூடமில்லே. என்ன சுகம்? கடைசிலே இந்த எஸ். எஸ். சி.யைக் கூடப் பாஸ் பண்ணேல்லே. அவன் சும்மா இருக்க, அவன்ரை பொடியன் இப்ப யூனிவேசிட்டிக்குப் போப்போறுன்.

சுப்:- சும்மா இருந்ததெண்டு சொல்லாதேங்கோ. அந்தாளும் மகன்ரை படிப்புக்காக நல்லாக் கஷ்டப்பட்டது.

சிங்:- என்ன, நான் இவனுக்குச் சிலவளிச்சளவு, முத்துவேலர் சிலவளிச்சவரோ மேனுக்கு?

[தயாளன் வீட்டினுட் செல்கிறுன்]

சுப்: சாச்சா! உங்களளவு காசு சிலவளிக்கேல்லே. கிடந்தாத்தானே அவரும் சிலவளிக்க. ஆறு, அவனுக்காக நல்லாக் கஷ்டப்பட்டது மனிசன்.

சிங்:- (சோகமாக) இதுதான் காலம்! எல்லாம் தலை கீழா நடக்குது! உள்ளவன் நல்லா இருக்கிறவன் வீட்டுப் பிள்ளை படிக்குதில்லை. ஒண்டும் இல்லாதவன் வீட்டுப்பிள்ளை படிச்சு முன்னுக்கு வருது!

சுப்:- உதுக்கேன் கவலைப் படுறியள்? உங்கடை மேன் படிக்கேல்லை. திருநாதன் ஆர்? உங்கடை தம்பீன்ரை பிள்ளைதானே! தயாளன்ரை பங்கையும் சேத்து அவனைப் படிப்பிச்சு விடுங்கோவன்.

சிங்:- (உரத்த குரலில்) என்ன சொல்லுறியள்? நான் படிப்பிக்கிறதோ அவனை? ஏன் அவன் தேப்பன் காற னுக்கென்ன?

சுப்:- முத்தரிட்டை என்ன கிடக்கு? இருக்கிற வீடு வளவுதானே! இனி நீங்கள்தானே இருக்கிற நீங்கள் பாத்துப் படிப்பிக்க வேணும்.

சிங்:- (ஆத்திரப்பட்டு) எனக்கும் உதுக்கும் அலுவ லில்லை. ஏன் என்னைக் கேட்டுக்கொண்டே யூனிவேசிட்டிக் குப் படிக்க விட்டவர்? இந்த எஸ். எஸ். சி. படிச்சாப் போதாதாக்கும். பி. ஏ., பி. எஸ். சி. எண்டு யூனிவேசிட் டிக்குப் போய்ப் படிக்க வேணும்!

சுப்:- அந்தாளும் தன்னிலை இயல்பில்லாட்டியும் ஏதோ ஆசைப் பாட்டிலை, படிக்க விட்டுட்டுது. உங்கடை தம்பி யின்ரை பிள்ளை தானே! (கெஞ்சலாக) நீங்கள் பாத்து உதவி பண்ணுட்டா, அந்தாள் வேறை ஆரிட்டைப் போறது?

சிங்:- சும்மா போங்கோ அம்மான். ஆரன் பிறத்தி யான் ஊர்'வனுக்கு உதவி செய்யலாம்; சொந்தக்காறனுக்கு உதவி செய்யக் கூடாது.

3

சுப்:- நீங்கள் சும்மா குடுக்கத் தேவையில்லை. அவன் பொடியன் படிச்சு, ஒரு உத்தியோகத்தை எடுத்திட்டா உங்களுடைய காசை ரண்டு வரியத்திலே உழைச்சுத் தந் திடுவன்.

சிங்:- உவங்களல்லோ —...... தந்திட்டுத்தான் மற்ற லுவற் பாப்பங்கள். அவன் படிச்சுச் சோதினையைப் பாஸ் பண்ணின உடனே உத்தியோகம் வரும். ஒரு லட்சம் சீத னத்தோடை பொம்பிளை வரும். கலியாணத்தைக் கட்டிக் கொண்டு அவன் தன்ரைபாட்டிலே போயிடுவன்.

சுப்:- எண்டாலும் அவன் படிச்சபிள்ளை. தேப்பனில் லாட்டாலும், அவனெண்டா என்ன செய்த உதவிக்கு நன்றியா யிருப்பன்.

சிங்:- உவங்களுக்குக் குடுக்கிற காசுக்கு, சோத்தை அவிச் சுப்போட்டு ஊரில் நாயளுக்குப் போட்டா, அதுகள் நன் றியா இருக்குங்கள், உவங்களிற் பார்க்க. படிச்சு முடிஞ்சு போனு ''பெரியப்பாவல்லோ எனக்கு உதவி செய்தது படிக்க'' எண்டு ஒருக்காத்தன்னும் வாயாலே சொல்லாங் கள், அவமானமெண்டு.

சுப்:- அவன் படிச்சு நாளைக்கு ஒரு பெரியவனு வந்தா, உங்களுக்கும் அதையிட்டுப் பெருமைதானே!

சிங்:- (பெருமையாக) அவராலே எனக்கொரு பெரு மையும் வரத் தேவையில்லை! இப்ப இருக்கிற பெருமையே எனக்குப் போதும். [முத்துவேலர் வருகிறுர்]

சுப்:- ஓ! முத்துவேலரும் வந்திட்டார். வாருங்கோ! வாருங்கோ!! உங்களுக்கு வயசு நூறு! உங்கடை மேன்ரை கதைதான் பேசிக் கொண்டிருந்தனுங்கள். அண்ணருக்கும் வலு சந்தோசம் தம்பி சோதினை பாஸ் பண்ணினது!

சிங்:- ஓ! எனக்கு வலு சந்தோசம், வலு சந்தோசம்! பின்னை, எங்கடை குடும்பத்திலே இருந்து, முதல் முதலா ஒரு பிள்ளை யூனிவேசிட்டிக்குப் போறதெண்டா —...... உதிலே இரன். (முத்துவேலர் வாங்கில் இருக்கிறுர்)

முத்:- அண்ணை! நான் சுத்தி வளைச்சுப் பேசாமை, வந்த நோக்கத்தை நேரடியாகவே சொல்லிவிடுறன். என்னுடைய நிலைவரம் உனக்குத் தெரியும் தானே! அதுதான் அவனைப் படிப்பிக்கிறதுக்கு, உன்னிடத்திலை ஒரு சின்ன உதவியை எதிர்பார்த்து வந்திருக்கிறன்.

சிவ:- உதைப் பற்றித் தான் இப்ப அம்மானும் பேசினவர். ஆறு, சொல்லிப் போட்டன்; உந்தக் கதைலை ஒரு பிரயோசனமும் இல்லை! சோதினை பாஸ் பண்ணின சந்தோசமெல்லாம் மனத்தளவிலை இருக்க வேணும்; கையைக் கடிக்கக் கூடாது!

முத்:- (உருக்கமாக) அண்ணை! ஆச்சி, அப்பு எங்கள் ரண்டு பேருக்கும் சமமாத்தான் சொத்துப் பத்தை வைச்சிட்டுச் செத்தவை. படிச்சது ஆருந் தரம் எண்டாலும், நீ ஓவசியராச் சேந்தா; நல்லா வந்திட்டா. நான் என்ரை பங்கிலை ஒரு பகுதியை வித்துத் தங்கச்சிக்குக் குடுத்தன் சீதணமாக மிச்சத்தை வைச்சுக் கமம் செய்தன் ரண்டொரு வருசம் வெள்ளாமையும் சரியில்லை. வருத்தம், துன்பமும் வந்து, கடன்பட வேண்டியதாப் போச்சு; முட்டுப் பட்டுப் போனன்.

சிங்:- உதை எல்லாம் ஏன் இப்ப சொல்லுறு?

முத்:- ஏன் சொல்லுற னெண்டா ......... கஷ்டப் படுறனெண்டு இதுவரேலை உன்னிட்டை வந்து, கை நீட்டி ஒரு சதம் கேக்கேல்லை; இப்பேன் வந்திருக்கிறன்? (இரக்கமாக) என்ரை பிள்ளையையும் படிப்பிச்சு ஒரு பெரியவனுக்க வேணு மெண்ட ஆசேலை! என்ரை ஆசேலை மண்ணைக் கிள்ளிப் போட்டுடாதை!

சிங்:- என்னை என்ன செய்யச் சொல் லுறு? என்னிட்டை இப்ப காசில்லைத் தாறதுக்கு. போன வரியம் இலெச்சனுக்குப் பட்ட கடனே இன்னும் குடுக்கேல்லை.

முத்:- நீ சும்மா தர வேண்டாமண்ணை; கடனாகத் தா.

சிங்:- என்ன பொறுப்பை வைச்சுக் கடன் தாறது?

முத்:- என்னிட்டை என்ன இருக்கு பொறுப்புத் தாற துக்கு? இருக்கிற வீடு வளவு தான்! அதை ஈட்டுக்கு எடுத் துக் கொண்டு, நாலாயிரம் ரூபா தா.

சிங்:- இந்தக் காலத்திலே வீடு வளவுக்கும் ஆரன் ஈடு குடுப்பனே! நினைச்ச நேரம் காசு வாங்கேலாது. கோட் டுக்குப் போனாலும் வீண் சிலவு.

சுப்:- நீங்கள் ஒண்டுக்கை ஒண்டு; அண்ணன் தம்பி; ஒரு ரத்தம்! உதெல்லாம் பாக்கிறதே?

சிங்:- அம்மான்! சொந்தக்காறருக்குக் குடுத்தா 'டபிள் கரைச்சல். இருக்கிற உறவும் கெட்டுப் போம். தாயும் பிள்ளையு மெண்டாலும், வாயும் வயிறும் வேறை! நான் ஊர் விட்டு ஊர் போய், காடுவளியை கிடந்து உழைச் சந்த காசின்ரை அருமை எனக்கல்லோ தெரியும்!

சுப்:- இப்ப என்ன சொல்லுறியள்? பொடியன் எடு பட்டுட்டான். இனி எப்பிடியோ படிப்பிக்க வேணுமே?

சிங்:- (ஏளனமாக) உந்தக் கேள்வியை என்னிட்டை ஏன் கேக்கிறியள்? தேப்பனிட்டைக் கேளும்! அப்பிடி வழி இல்லாதவருக்கு என்ன பி. ஏ., எம். ஏ. படிப்பு?

முத்:- (எழுந்து நின்று, ரோசமாக) உந்த மறு மொழி கேக்க நான் இஞ்சை வரேல்லை! என்ரை பிள்ளையைப் படிப்பிக்க எனக்குத் தெரியும். நான் அவனைப் படிப் பியாமலும் விடப் போறதில்லை!

சிங்:- பின்னை ஏன் இஞ்சை வந்தனி?

[தயாளன் வீட்டினுள் இருந்து வந்து பின்னால் நின்று நடப்பவற்றைக் கவனிக்கிறான்]

முத்:- நான் இஞ்சை வாறதெண்டே நினைச்சிருக்கேல்லை எனக்குத் தெரியும் நீ என்ன சொல்லுவா எண்டு. இடேலை நிண்டவை சொல்லிச்சினம் "கொண்ணரிட்டையே போ" எண்டு. பிறகு நீயும் நாளைக்குக் கேக்க இடம் வைக்கக்

கூடாது, ''என்னை ஒரு சொல்லுக் கேட்டியோ?'' எண்டு. அது தான் வந்தனுன். சரி, நான் கேட்ட குற்றத்தை மன்னிச்சுக்கொள் அண்ணை! நான் வாறன்!

சுப்:- (எழுத்து முத்துவேலருக்குக் குறுக்கே நின்று) ஏன் அவசரப்படுறு முத்து? எல்லாம் சரிப்பண்ணலாம். கொஞ்சம் பொறு.

சிங்:- அம்மான்! நீங்கள் என்னைக் குறை நினைச்சாலும் பறவாயில்லை. என்னுலை ஒண்டும் செய்யேலாது!

தயா:- (முன்னுக்கு வந்து) இலெக்சனுக்குச் சிலவளிக்க ஆயிரம், ரண்டாயிரம் எண்டு கிடக்கு. வாற மாதம் திருவிழாவிலை முடியப் போகுது ஒரு தொகை. உதுகளுக்கெல்லாம் காசிருக்கு; தம்பிக்குப் படிக்கக் குடுக்கத்தான் இல்லை.

சிங்:- (எழுந்து நின்று மகனைப் பார்த்துக் கோபமாக) போடா போ! உனக்கென்ன தெரியும்? எல்லாம் தேவையோடைதான், நான் காசு சிலவளிச்சுக் கொண்டுவாறன். என்ரை வீட்டிலை என்ன காசு விளையுதே?

முத்:- எனக்காக நீங்களேன் தேப்பனும் பிள்ளையும் சண்டை பிடிக்கிறியள்? நான் வாறன்! (வேகமாகப் போகிறுர்)

சுப்: (பெருமூச்சு விட்டு) ம்...... உலகத்திலை எல்லாத் தருமத்தையும் விடப் பெரிய தருமம், எழுத்தறிவிக்கிறதெண்டு சொல்லுவங்கள்!

தயா:- நான் ''படிக்கேல்லை, படிக்கேல்லை'' எண்டு கத்தூறியள். தம்பி, படிச்சு யூனிவேசிட்டிக்குப் போறவனுக்கு உதவி செய்ய விருப்பமில்லை. உங்களுக்கு உவ்வளவு தாராள மனப்பான்மை இருக்கேக்கை, உங்கடை பிள்ளைக்கு எப்பிடிப் படிப்பு வரும்?

சிங்:- தான் படிக்காமை விட்டதுக்கு இப்ப சாட்டுச் சொல்லூருன்;

தயா:- அப்பா, படிப்பிலே நான் உங்களை விடக் கெட்டிக்காறன்! நீங்கள் ஆறும் வகுப்பு; நான் ஒன்பதாம் வகுப்பு!

சிங்.- (ஏளனமாக) அவற்றை பெருமையைப் பார்! ஒன்பதாம் வகுப்பு! ......... டேய்! படிக்கிறதுக்கு உனக்கிருந்த வசதி, அந்தக் காலத்திலே எங்களுக்கு இருந்ததே?

தயா;- அப்பா! நான் படியாததுகூட என்ரை குற்றமில்லே; உங்கடை குற்றம் தான்! நீங்கள் பி. டபிள்யூ. டி.லே ஓவசியராச் சேர்ந்து, ரோட்டுகளுக்குக் "கல்லுப் போடுறம், கல்லுப் போடுறம்" என்டு சொல்லி வெறும் மண்ணைப் போட்டுப், பொதுப் பணத்தை சுறுட்டினியள்! உங்கடை பிள்ளேன்ரை படிப்பிலே மண் விழுந்திட்டுது! கல்லைப் போட்டிருந்தா எனக்கும் கல்வி வந்திருக்கும்!

சிங்:- போடா, போடா! என்ரை ஆத்திரத்தைக் கிளப்பாமல்.

சுப்;- உங்களுக்கு உது பெரிய காசல்ல! முழுவதையும் குடுக்காட்டாலும், அரைக்கரை வாசியை, ஆயிரம் ரண்டாயிரத்தையாவது குடுத்திருக்கலாம்.

தயா:- நான் சொன்னனே அம்மான்; எல்லாம் பேருக்கும் புகழுக்கும் நடக்குது! எங்கையாலும் மாலே போடகை தட்ட இடமிருந்தா, அங்கை குடுப்பர் காசு; இதுகளுக்குக் குடுக்கிருரே?

சுப்:- இன்னும் ஏதோ யோசிச்சுச் செய்யுங்கோ?

சிங்:- இனி யோசிக்க என்ன இருக்கு? எல்லாம் யோசிச்சுத் தீர்மானிச்சு முடிஞ்சுது.

தயா:- யோசிக்காமலே தீர்மானிச்சாச்சு!

திரை

## காட்சி 4

இடம்: யாழ்ப்பாணம், முத்துவேலர் வீடு.

[தலைவாசலில் முத்துவேலரும் திருநாதனும் பேசிக்கொண்டிருக்கின்றனர்]

திரு:- எங்களிட்டைக் காசிருந்தாப் படிக்கிறது. இல்லாட்டா பேசாமை இருக்கிறது! உங்களை ஆரப்பா அங்கை போகச் சொன்னது? போயும் நடந்த தென்ன? பல்லைக் காட்டி இளிச்சு, உள்ள மரியாதையையும் கெடுத்தது தானே மிச்சம்!

முத்:- இப்பென்ன கெட்டுப் போச்சு? நான் ஆரிட்டைப் போனனான்? என்னுடைய அண்ணரிட்டைத் தானே! உங்கடை பெரியப்பா!

திரு:- அப்பிடிப் பெரியப்பா எண்ட உறவு முறையெண்டா அவர் எங்களோடை பழகுறார்? அவற்றை பணமும், பெருமையும் அவரோடை! எங்களுடைய நிலைமை அவருக்குத் தெரியும். அப்பிடி உதவி செய்ய விருப்பமுள்ளவ ரெண்டா நான் சோதினை பாஸ் பண்ணிப் போட்டன் எண்டு தெரிஞ்ச உடனை, தானாகவே வந்து கேளாரே, "ஏதாவது உதவி செய்ய வேணுமோ?" எண்டு?

முத்:- ஓ, அதுகும் சரி தான்! அம்மானும் நிண்டாடினார். "வா, வா" எண்டு; நானும் போட்டன்.

மணு:- (வீட்டினுள்ளேயிருந்துவந்துகொண்டே) காக் காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் திரும்பி வராது!

முத்:- இஞ்சை வந்திட்டான் என்ரை ரோசக் குட்டி!

மணு:- அப்பா! என்னை இழக்கமாகப் பேசுவதே உங்களுக்கு வழக்கமாகப் போய்விட்டது! ஏன், எனது ரோசத்திக்கு என்ன குறைச்சல்?

முத்:- ரோசமிருந்தாக் 'கதை எழுதூறன், கதை எழுதூறன்' எண்டு சொல்லி வீண்பொழுது போக்குவியே?

மணு:- கதை எழுதுவதென்ருல், ஏதோ இலேசான வேலை என்ற நினைவு, உங்கள் எல்லோருக்கும்! அப்பிடியானுல் நீங்களும் ஒன்று எழுதுங்கள் பார்க்கலாம்! ---...-- எனக்கும் ஒரு காலம் வரும்! " எழுத்தாளன் மணுளன் " என்று எனது பெயர் தமிழ் நாடு முழுவதும் அடிபடும் காலம்! அப்பொழுது தெரிய வரும் உங்களுக்கு நான் செய்யும் வேலையின் மகத்துவம்!

முத்:- அது நல்லா வரட்டு; வாற காலம் பாத்துக் கொள்ளுவம். ... ...

மணு:- அது சரி; இப்பொழுது இந்த மானக் கேட்டைப் போக்குவதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்?

முத்:- தம்பியவை! நான் சொல்லூறதைக் கேளுங்கோ! உங்களுக்கு இளம் ரத்தம் துடிக்குது. உலகத்திலை பணம் உள்ளவன், வசதி உள்ளவன் ரோசம் பேசலாம்; எங்களைப் போல ஏழைகள் பேசேலாது. விட்டுக் குடுக்க வேண்டிய இடத்திலை விட்டுக் குடுக்கத் தான் வேணும்; நசிஞ்சு போக வேண்டிய இடத்திலை நசிஞ்சு போகத்தான் வேணும். எல்லாம் வாழ்க்கேலை அனுபவப் பட்டாத்தான் விளங்கும்.

திரு:- அந்த மாதிரி மரியாதை கெட்டு முன்னேறுகிறத்தை விட, இப்ப இருக்கிற மாதிரியே, இருக்கலாம். இப்பவும் என்ன சொல்லுங்கோ! (ரோசத்துடன்) இந்த பி. ஏ., பி. எஸ். ஸீ. ப் படிப்பொண்டும் வேண்டாம்! ஏதாவது ஒரு உத்தியோகம் தேடுறன்!

முத்:- (கெஞ்சலாக) டேய்! அந்த வேலை மட்டும் செய்து போடாதையடா! இவனும் படிப்பைக் குழப்பிப் போட்டுக், 'கதை எழுதூறன்' எண்டு கொண்டு திரியிருன். நீ யெண்டாஎன்ன படிச்சு முன்னுக்கு வா. என்னுடைய பிள்ளையளிலை ஒருதனுவது படிச்சுப் பெரியவனு வர வேணுமெண்டதுதான் என்ரை ஒரே ஆசை! என்ரை ஆசையை நிறைவேற்றிப் போடடா!

திரு:- கையிலே காசில்லே. இப்ப என்ன செய்பிறது சொல்லுங்கோ?

மூத்:- காசேனில்லே? வீடுவளவு மூவாயிரம் ரூபா வுக்கு ஈடு வைக்க ஒழுங்கு செய்திருக்கிறன். நீ நேரை மாமி வீட்டை போ வெள்ளவத்தைக்கு. நான் மாமாவுக்கும், மாமிக்கும் கடிதம் எழுதி இருக்கிறன். அவையோடை இருந்தியெண்டா, வீட்டு வாடை யாவது மிஞ்சும்.

திரு:- நல்லது! இஞ்சை பெரியப்பா விட்டைப் போய்ப் பட்ட அவமானம் காணுதெண்டு. ஏதும் மிச்ச சொச்ச மிருந்தா, அங்கை போய் மாமி வீட்டிலும் படுவம்!

மூத்:- அதொண்டும் அப்பிடிச் செய்யாள் தங்கச்சி! இனிக் கொம்மானும் ஒண்டுக்கும் வரான். அதுகள் நல்ல மனிசர்!

திரு:- நல்ல மனிசர் எண்டதெல்லாம், போய்க் கூட இருந்து பாத்தாத்தானே தெரியும்.

மூத்:- மங்களத்துக்கு கலியாணம் செய்யேக்கை, அண்ணன் உத்தியோகத்தனு இருந்தும் ஒரு சதம்கூடக் குடுக்கேல்லே. நான் என்ரை நிலபுலத்திலே ஒரு பகுதியை வித்துக் காசு குடுத்தனான், அவளுக்கு. அந்த நன்றியை அதுக்கிடேலே மறந்திருப்பளே?

மணு:- (வந்துகொண்டே) எனக்கு என்னவோ உது சரிவரும் போலத் தெரியவில்லே அவர்கள் முட்டையும் ரொட்டியும், வெண்ணெயும் சாப்பிடுபவர்கள்! நாங்கள் கீரையும் கத்தரிக்காயும், சாப்பிடுபவர்கள்! எங்களே அவர்களுக்குப் பிடிக்குதோ, என்னவோ? ........

மூத்:- உந்த ரொட்டியும், வெண்ணெயும் என்ன அங்கை போய்த்தானே சாப்பிடப் பழகினவை. முந்தி இஞ்சை கீரை, கத்தரிக்கா சாப்பிட்ட ஆக்கள் தானே!

திரு:- அவ்வை இப்ப இருபது இருபத்தைஞ்சு வரியம் கொழும்பிலேயே இருந்திட்டினம். அவேன்ரை நடை உடை பாவினை எல்லாம் மாறிப்போயிருக்கும். ஒரு நாள் பாட்

டிக்குப் போவினம்; ஒரு நாள் டான்சுக்குப் போவினம்; புதுப்புது விசிற்றுகளுக்குப் போவினம். நம்மாலை உதுகளுக் கெல்லாம் ஆட முடியுமா?

முத்:- நீ ஏன்ரா அந்த ஆட்டங்களுக் கெல்லாம் போரு? உனக்கு நேரமில்லை எண்டு சொல்லிப் போட்டு, உன்ரை பாட்டிலை இருந்து பாடத்தைப் படியன். இனி ஒரு வீட்டிலை இருந்தாத் தான் உனக்தும் ஒரு கட்டுப் பாடா, ஒழுங்கா இருக்கும்.

திரு:- (ரோசத்துடன்) எனக்கொரு கட்டுப்பாடும் ஒழுங்கும் அவை பழக்கத் தேவை இல்லை! வேண்டிய மன உறுதியோடும், தன்நம்பிக்கை யோடும்தான் நான் போறன். நான் கெடுற தெண்டா இஞ்சை கெடலாமே! இஞ்சை இருந்து இறையிலேறி, அங்கை ஏன் போவான்?

முத்:- என்ரை பிள்ளைக்கு இவ்வளவு மன உறிதி இருக் கிறது எனக்கு வலு சந்தோஷப்! அங்கை இருந்தாப் பத் தும், பத்தாததைப் பாத்துச் சரிக்கட்டிக் கொண்டு போயி டலாம். இப்போதைக்கு அங்கை இரன்; உனக்கேதும் வச திக்குறைவெண்டா, வெளிக்கிட்டு உனக்குப் பிடிச்ச இடத் துக்குப் போ.

மணு:- சரி, அண்ணு! கொழும்புக்குச் சென்றவுடன், நான் சொல்லியதைச் செய்ய மறந்துவிடாதே!

திரு:- (கேலியாக) நீ என்ன சொன்ஞய்?

மணு:- நேரே செல், ஏரிக்கரைப் பத்திரிசாலயத்திற்கு! நான் இதுவரை, தினகரன் பத்திரிகைக்கு பதினைந்து கதை கள் வரையில் எழுதி அனுப்பி இருக்கிறேன். வீரகேசரிக்கு அனுப்பிய கருபூலங்களும் இருபதிற்குக் குறையாது. சுதந் திரனுக்கு ஒரு பத்து. மற்றும் சிறு சிறு பத்திரிகைகள், சஞ்சிகைளுக்கும் ஒரு சில அனுப்பியுள்ளேன்.

திரு:- ஒண்டும் இன்னும் பேப்பரிலை வரேல்லை?

மணு:- இல்லை; அவற்றில் ஒன்றைக் கூட ஒருவரும் பிரசுரிக்கவில்லை! (பெருமூச்சு விடுகிருன்)

முத்:- (கிண்டலாக) உன்ரை கதையளை வாசிச்சுப் போட்டு, இப்பிடியான திறமான கதையளைச் சாதாரண மான தினசரிப் பத்திரிகேலை போடக்கூடாது! ஏதாவது பொங்கல் மலர், தீபாவளி மலர் எண்டு விஷேஷமான மலர்கள் வெளிபிடுற காலத்திலை, அதுகளிலை போடுவம் எண்டு வைச்சிருக்கிறாங்களாக்கும்!

திரு:- இப்ப என்னை என்ன செய்யச் சொல்லுறாய்? அந்தக் கதையள் எல்லாத்தையும் வாங்கி, உனக்குத் திருப்பி அனுப்பி விடுறதா?

மணு:- நீ அந்தப் பத்திரிகாலயங்களுக்குச் சென்று கேள், ''என் தம்பியின் கதைகளைப் பிரசுரிக்கப் போகிறீர்களா, இல்லையா''? என்று. அவர்கள் 'இல்லை' யென்றால், உடனே அவற்றை வாங்கித் திருப்பி அனுப்பி விடு!

முத்:- (கிண்டலாக) உன்னுடைய கதையளைத்தானே அங்கை அடுக்கி வைச்சிருக்கிறாங்கள், மேசேலை முன்னுக்கு; கேட்ட உடனை தூக்கித் தருவங்கள்! அதுகளை இப்ப குப் பைக் கூடேக்கை போட்டாங்களோ? அடுப்புக்கை போட் டாங்களோ?... — — — (சிரிக்கிறார்)

மணு:- அப்படிச் செய்ய முடியுமா? எவ்வளவு பாடு பட்டு மனிதன் கதை எழுதி அனுப்புகிறான்! கடைசி ஒரு மறுமொழியாவது எழுதி அனுப்பக்கூடாது!

முத்:- மறுமளி எழுத, உலகத்திலை நீதானை ஒரு விசரன்? உன்னைப் போலை இன்னும் எத்தினை பேர் இருப்பங் கள்!

மணு:- என்னைப் போல் இன்னொரு மனிதன் இந்த உலகத்தில் இருக்கவே முடியாது!

முத்:- நீ ஒருத்தன் மட்டும் கதை எழுதி அனுப்பினை, பதில் போடுவங்கள். உன்னைப் போலை இன்னும் எத்தினை விசரன்கள் கதை எழுதி அனுப்புவங்கள்! எல்லாருக்கும் பதில் எழுத, அவங்களுக்கு முத்திரைச் சிலவு என்ன வரும் சொல்லு பாப்பம்?

மணு:- முத்திரைச் செலவிற்கு வழி இல்லாதவர்களுக்கு என்ன பேப்பர்?

மங்:- அவன், அங்கை பண்டா இருப்பன் கூப்பிடுங்கோ.

சண்:- இனி, நான் அவனை எங்கை எண்டு தேட. (கதிரையில் இருந்து) பண்டா! பண்டா!!

மங்:- உங்கினை எங்கையாலும் மூலேக்கை இருந்து வீடி குடிச்சுக் கொண்டிருப்பன். (கூப்பிடுகிறுள்) பண்டா!

பண்:- (வந்துகொண்டே) என்ன? என்ன? நோனு சும்மா, சும்மா, கூப்படறது. வேலை இறுக்கு சறி, இல்லாட்டிக்கு சறி சும்மா கூப்படறது.

மங்;- இப்ப எங்கை வீடி குடிச்சுக் கொண்டிருந்தனி?

பண்:- நாங் வீடி குடிக்கறது இல்லே. அது அங்கே நாட்டுப் புறத்திலே இருக்கற ஆல் தாங் வீடி குடிக்கறது. நாங் ஒறு நாலுங் சிகறட்தாங் ஸ்ஸிமோக் பண்ணறது. நெவிக்கட்!

சண்:- நான் இந்த உத்தியோகம் பாத்து, மாதத்திலை ஐஞ்ஞூறு ஆயிரமெண்டு சம்பளமெடுத்தே நெவிக்கட் குடிக்கக் கட்டாமல் சுறுட்டுக் குடிக்கிறன். உந்தச் சம்பளத்திலை உன்ரை நெவிக்கட் என்ன! சோக்கென்ன!

பண்:- நீங்கலுக்கு சல்லி மிச்சங் இறுக்கி; சுதி பண்ணறது தாங் இல்லே! சல்லி மிச்சங் இருக்கற ஆல் எல்லாங் அப்பிடி தாங். சல்லி சேத்து சேத்து, ஒறு நாலுங் பெட்டிலை தாங் போடறது. நமக்கி மாதறி ஆலுக்கி, சல்லி கொஞ்சங் இருக்கறது சறி, நாங் சுதி பண்ணறது.

சண்:- சரி, நல்லா நெவிக்கட்டிலை குடி. இப்ப சாப்பாடு ஆய்த்தமே?

பண்:- ஒவ், அது எல்லாங் அப்ப ஏலு மனிக்கி றெடி பண்ணி, அந்த காம்பறுவிலே வைச்சிறுக்கி.

சண்:- வைச்சுட்டியா? இண்டைக்கு என்ன சாப்பாடு?

பண்;- இடியாப்ப தாங் காச்சி வைச்சிறுக்கி. அதுக்கி நல்லா கொச்சிக்கா போட்டு, சம்போல் போட்டிறுக்கி. மிச்சங் டேஸ்ட் தொறே!

சண்;- கொச்சிக்காயைப் போட்டியோ? உன்ரை தலை யைப் போட்டியோ? என்ரை தலைவிதி! கட்டின பெண்சாதி உயிரோடை இருக்க, உன்ரை சாப்பாட்டைச் சாப்பிட வேணுமெண்டு!

பண்:- (வெளியே பார்த்து) யாரோ ஒறு ஆல் வாறுங்; இந்த வீட்டுக்கு தாங் வாறது, சூட்கேஸ் எல்லாங் தூக்கீட்டு.

சண்:- உன்ரை மருமேன் தான் வாறுன் போலை இருக்கு.

மங்:- வந்துட்டார் துரை! இனி அவருக்குக் குளிக்க வாத்துச், சாப்பாடு போட்டுப், படுக்கை போட்டு, ஆலாத்தி எடுக்க வேணும்!

சண்:- நீ யல்லோ! நீ இஞ்சை எனக்கு எடுக்கிறுயல்லே ஆலாத்தி, ஒவ்வொரு நாளும்! கட்டின புருசனைக் கவனிக் கிற திறத்திலை அவனுக்கு ஆலாத்தி எடுத்துப் போட்டுத் தான் வேறை அலுவல் பாப்பாய்!

பண்;- ஒறு நாலுங் இந்த மாதறிதாங் நோணு. வீட் டுக்கு யாறு சறி விசிட்.டேஸ் வாறது; அம்மாக்கி மூஞ்சி சறி இல்லாமே போறது.

மங்:- போடா, போய்ச் சாப்பாட்டை எடுத்து வை! [பண்டா சற்றுப் பின்னுல் சென்று தெருவைப் பார்த்துக்கொண்டு நிற்கிறுன்.]
நீ உதிலை நிண்டுகொண்டிருந்தி யெண்டா, எனக்கு விசர் வரும். சொல்லிப் போட்டன்!

சண்:- (குறும்பாக) இனித்தானே வரப்போகுது? நான் முந்தியே வந்திட்டு தெண்டல்லோ, நினைச்சுக் கொண் டிருக்கிறன். [பண்டா உள்ளே போகிறுன் மங்களம் கணவனை முறைத்துப் பாத்து விட்டுப் பேப்பரைப் பார்க்கிறுள். கையில் சூட்கேசுடன் திருநாதன் வருகிறுன்]

சண்:- வா தம்பி! ஏன் செண்டு போச்சு? இண்டைக்கு றெயில் லேட்டே?

திரு - இல்லை, றெயில் நேரத்துக்கு வந்துட்டுது; இஞ்சாலை வரத்தான் பஸ் கிடைக்கேல்லை.

சண்! இறையிலுக்கை எப்பிடிச் சனம்? நித்திரை கித்திரை கொண்டியோ .........?

திரு!- சனமோ? கிழங்கடுக்குத்தான்! கால்நீட்ட இடமில்லை. ரா முழுக்கக் கண்ணேடை கண் மூடேல்லை.

சண்:- யாழ்ப்பாண றெயில் எல்லாம் உப்பிடித்தான். அதிலை என்ன, இண்டு முழுக்க வீட்டிலை இருந்து நித்திரை கொள்ளன்.......... ஊரிலை எப்பிடி மழை தண்ணி?

திரு;- இப்ப ரண்டு மாதமா மழையெண்ட நாமதேயமே இல்லை. நெருப்பு வெய்யிலடிக்குது.

சண்:- நானும் உந்த வெய்யிலுக்குப் பயந்துதான் அடிக்கடி யாழ்ப்பாணப் பக்கம் வாறதில்லை. அது சரி; அம்மன் கோயில் திருவிழா எல்லாம் எப்பிடி? நல்லா நடந்துதே?

திரு!- ஓ அதெல்லாம் நல்லபடியா நடந்து முடிஞ்சுது.

பண்!- மேளம், சின்ன மேளம்..........

திரு!- எல்லாம் வழக்கம்போலைதான். (மங்களத்தைப் பார்த்து) என்ன மாமி? பேசாமை இருக்கிறியள்; கதைகிதை ஒண்டுமில்லை.....

மங்:- (பேப்பரைப் பார்த்தபடி) உங்கைதானே கொய்மான் கதைக்கிறுர்; பேந்து நானென்னத்தைக் கதைக்க?

சண்:- இஞ்சா, உந்தப் பேப்பரைப் பிறகு படிக்கலாம்; இப்ப தம்பியைக் கூட்டிக்கொண்டுபோய், படுக்கை அறை, பாத்றூம் அதுகளைக் காட்டிவிடன்.

மங்:- அங்கை வண்டன் நிக்கிறான்; எல்லாம் வடிவாக் காட்டுவன்; உள்ளுக்குப்போ.

[வசந்தி வீட்டிற்குள்ளிருந்து வருகிறாள்]

மங்:- எங்கை பிள்ளை வெளிக்கிட்டிருக்கிறாய்?

வச:- ஷொப்பிங்!

சண்:- டெய்லி ஷொப்பிங் போறது தானே பிராக்கு. இன்னும் கொஞ்ச நாட் போனா, இஞ்சை வீட்டிலேயே கடை வைக்கலாம்.

வச:- டடி உப்பிடிச் சொன்னா, நாம் போகேல்லை! (வீட்டிற்குள் திரும்பிச் செல்கிறாள்.)

சண்:- இஞ்சை வா பிள்ளை. வசந்தி! (வருகிறாள்) நான் சும்மா பகிடிக்கல்லோ சொன்னனான்!

மங்:- இருக்கிறது அவள் ஒரு பிள்ளை. அவளுக்குப் போய்க் கட்டுப்பாடு வைக்கிறியள்! உங்களுக்கு மூளை இருக்கா? நீ போய் விரும்பினத்தை எல்லாம் வாங்கியா பிள்ளை. (வசந்தி வெளியே போகிறாள்)

சண்:- அத்தான் வந்திருக்கிறார். ஏனெண்டு கேக்காமற் போறாய்?

வச:- என்ன அத்தானா? (திரும்பிப் பார்த்து) ஓ! மிஸ்டர் திருநாதன்! மம்மீ, நான் போட்டு வாறன். டாட்டா! சேறியோ! (போகிறாள்.)

சண்:- நீ போவன் தம்பி உள்ளுக்கு. பண்டா எல்லாம் செய்து தருவன். (திருநாதன் உள்ளே செல்ல மங்களத்தைப் பார்த்து) எப்பதான் உந்தப் பழக்கத்தை விடப்போறியோ, எனக்குத் தெரியேல்லை. வீட்டுக்கொரு மனிசர் வந்தா, சிடுசிடெண்டு முகத்தை வைச்சிராமைக் கொஞ்சம் சிரிச்சு ரண்டு வார்த்தை பேசினா என்ன குறைஞ்சு போம்?

மங்:- எனக்கு நீங்க ஒரு பழக்கமும், பழக்கத் தேவை இல்லை; இப்ப நேரமாச்சு ஒபீசுக்கு வெளிக்கிடுங்கோ

பண்:- (வந்து) நோனா, அது அந்த தம்பி ——......—— சூட்கேஸ் எங்கே வைக்கறது, சேக்கறது.

மங்:- (எரிச்சலாக) எங்கையாவது வைக்கச் சொல்லு. அவன்ரை தலையிலையாவது வைக்கட்டு!

பண்:- சரி, அப்ப நாங் அவனுக்கு தலைமேலே வைக்க சொல்லறது. (போகிறான்.)

சண்:- டே டேய், இஞ்சை வாடா! (பண்டா வருகிறான்) நீ ஒரு தினிசு, அம்மா ஒரு தினிசு! எனக்குத் தான் தருமசங்கடம்! அந்தச் சாமி அறைக்குப் பக்கத்து அறேக்கை வைக்கச் சொல்லு.

பண்:- சறி சறி; நாங் சாமிக்கி பக்கத்திலே வைக்க சொல்லறது. (உள்ளே போகிறான்.)

திரை

## காட்சி 2

### இடம்: கொழும்பு, சண்முகம்பிள்ளை வீடு.

[வீட்டின் அமைப்பு முதலாம் காட்சியில் உள்ளபடி. ஒரு சயிக்கிள் மணிச்சத்தம் கேட்கிறது. அடுத்து வெளியிலிருந்து **ரவி** வருகிறான். வீட்டினுள்ளிருந்து **பண்டா** வருகிறான்.]

ரவி:- மிஸ் வசந்தி இருக்கிறாவா?

பண்:- ஒவ்! இறுக்கி, இறுக்கி.

ரவி:- வரச் சொல்லும்:

[**பண்டா** உள்ளே போகிறான். **ரவி** கதிரையில் இருக்கிறான். சில விநாடிகளில் **வசந்தி** வருகிறாள்.]

வச:- ஹாய் ரவி!

ரவி:- ஹல்லோ வசந்தி!

வச;- ஏது ஏளி மோணிங்?

ரவி:- ஐ யஸ்ட் கேம். சும்மா வந்தன்.

வச:- (கதிரையில் இருந்து) நீங்கள் சும்மா வர மாட்டியளே. பிஸ்ஸி மான்! கன என்கேஜ் மென்ற்ஸ்!......... என்ன நியூஸ்?

ரவி:- இல்லே, நான் சும்மாதான் வந்தன்; கனநாளா இந்தப்பக்கம் வரேல்லே. அதுதான்

வச:- என்ன கனநாள்?.........லாஸ்ற்லீவுக்கும் வந்தீங்கதானே.

ரவி:- இந்த ஷோ பாத்துட்டியளா?

வச:- சவோய் ஷோவா? இல்லே. எப்பிடி?

ரவி:- ரொப் பிளடி ஷோ! ஆ! ஃபைன். டோன்ற் மிஸ் இற்—......—

வச!- பிறிஜெட்பாடோ அக்ட்பண்ருள் என்ன? அப்ப உங்களுக்குப் பிடிக்கும் தானே!

ரவி:-- ஏதோ உங்களுக்குப் பிடிக்காத மாதிரி—......

வச:- பொடியங்கள் தானே விழுந்தடிச்சு ஓடுறது, பிறிஜெட்பாடோ, மறிலின் மொன்ரூ எண்ட பேர்களைக் கண்ட உடனே;

ரவி:- பெட்டையளுக்குத்தான் உந்தக் கிறேஸ்! அவளவையைப் பாத்து இமிட்டேட் பண்ண ஆசை.

வச:- நீங்க பாத்துட்டியளா?

ரவி:- ராத்திரிப் பாத்தன். இப்ப செகண்ட் ரைம் போறன், ரென்தேட்டி ஷோவுக்கு.

வச:- அவ்வளவு நல்லமா? அப்ப நானும் பாக்கோணும்.

ரவி:- எப்ப பாக்கப் போறீங்க? இண்டைக்குத்தான் லாஸ்டே. இப்ப வாறீங்களா ரென்தேட்டிக்கு?

வச:- பொறுங்கோ; மம்மியைத் கேட்டுட்டு சொல்லுறன்.

ரவி:- ஏன் மம்மியை? அவவையும் கூட்டிட்டு வரப் போறீங்களா? (சிரிக்கிருன்.)

வச:- இல்லை, பெமிஷனுக்கு............

ரவி:- இப்பேம் அம்மாட்டை உத்தரவு வாங்கோணுமா? சில்லி யூ ஆர் ஏ கொலம்பு கேள்!

வச:- மம்மிக்கு நான் பயமில்லை. அவேவை ஏமாத்திப் போடுவன். டடிதான் சத்தம் போடுவர். அவருக்காகத்தான்..............

ரவி:- வசந்தி! உண்டை டடிக்கு இன்னும் அந்தப் பட்டிக்காட்டுப் புத்தி போகேலை.

வச:- அவர் அடல்ற்ஸ் ஓன்லி படம் எண்டாலே சத்தம் போட்டுக்கொண்டு நிப்பர். அதுகும் பொடியங்களோடை போனதெண்டா, ...... பேந்து பேசத்தேவேலை.

ரவி:- அவருக்கு ஏன் சொல்லுறியள்?

வச:- அவருக்கு ஒளிச்சுத்தான் எப்பவும் போறது. மம்மியைக் கேட்டா விடுவா. பொறுங்கோ கேக்கிறன்.

ரவி:- நான் நிண்டா அவேக்கு சஷ்பிஷன் வந்திடும், என்னோடை போப்போறீங்களாக்குமெண்டு. நான் போறன் நீங்க கேளுங்க.

[ரவி எழுந்து சயிக்கிளடிக்குச் செல்கிருன்.]

வச:- (எழுந்து அவனுக்குக் கிட்டச் சென்று) நீங்க ரென்தேட்டிக்குத் தியேட்டருக்கு வாங்க. நான் கட்டாயம் வருவன்.

ரவி:- சேரியோ! டோன்ற் ஃபெயில். (போகிருன்.)

வச:- சேரியோ! (வீட்டின் உள்பக்கம் திரும்பி) மம்மீ! மம்மீ!

மங்:- (உள்ளே இருந்தபடியே) என்ன பிள்ளை?

வச:- (கொஞ்சலாக) நான் இப்ப ஃரன்தேட்டி ஷோவுக்குப் போகட்டா? சவோயிலை ஓடுற படம் இண்டைக்குத் தான் கடைசி. பேந்து டடி வந்தா விட மாட்டார் ......

மங்: இப்ப ஆரோட போப்போறாய்? ஆர் வந்தது இப்ப?

வச:- மிஸ்ரர் ரவி.

மங்:- அவனே வந்து, இப்ப உன்னைக் கிண்டிவிட்டுட் டுப்போனது? அவனோடையே போப்போறாய்?

வச: இல்லை மம்மி! நான் தனியப் போறன்.

மங்:- தனியப்போறன் எண்டுட்டு, பிறகு பொடியங் களோடை போயிடாதை;

வச:- தார் இப்ப உங்களுக்குச் சொன்னது, நான் பொடியங்களோடை படத்துக்குப் போறதெண்டு?

மங்:- நெடுகத் தனியப் போறதும் சரியில்லைத்தான்.

வச:- ஏன், தனியப் போனா என்ன? தாரன் பிடிச்சுத் திண்டுடுனமா? நான் எங்கும் தனியாத்தானே போறன்.

மங்:- போனா என்ன பிள்ளை; சும்மா டடி சத்தம் போடுவர். எனக்கு அவரிட்டைப் பேச்சு வாங்கித் தராட் டாச் சரி.

வச:- அப்ப நீங்களும் வாங்கோ.

மங்;- என்னாலை ஏலாது பிள்ளை. எனக்குப் பஞ்சியாக் கிடக்கு.

வச;- அப்ப நான் தனியப் போறன்; வண்ணுக்கு வந்திடுவன்.

மங்:- ஆரன் கண்டா? ........

வச:- உங்கை தார் காணப்போயினம்?

மங்!- எத்தினைபேர் காணுவினம்.

வச;- மம்மி! அது உங்கடை யாழ்ப்பாணத்திலைதான் ஒவ்வொருத்தரும் ஒவ்வொருத்தருக்குப் பின்னாலை திரிஞ்சு. அவர் எங்கை போறார், என்ன செய்யிறார், எண்டு பாத்துக்கொண்டு திரியிறது. கொழும்பிலை உதுகளுக்கெல்லாம் ஆக்களுக்கு நேரயில்லை.

மங்;- யாழ்ப்பாணத்துச் சனம்தானே பிள்ளை, இந்த வெள்ளவத்தை முழுக்க இருக்குது.

வச;- கண்டா என்ன? கழுத்தை வெட்டிப்போடுனமா?

மங்;- பலரும் பலவிதமாகக் கதைப்பினம்.

வச;- தாரன் கதைச்சா எங்களுக்கென்ன? நாங்க நேர்மையா இருந்தாச் சரிதானே!

மங்'- எங்கடை நேர்மையை ஆருக்குப்பிள்ளை விளங்கப் படுத்துறது?

வச;- மம்மி! நீங்க கடுமையாத்தான் பயந்து சாகிறியள்! கண்டா என்ன செய்து போடுவினம்? எண்டு கேக்கிறன்.

மங்;- பேந்து கலியாணம் பேசேக்கை சொல்லுவாங்கள். ''உவள் முந்திக் கொழும்பிலை ஆட்டத்திலை திரிஞ்சவள்' எண்டு.

வச;- நான் உங்கடை யாழ்ப்பாணத்தக்கே கலியாணம் கட்ட வரப்போறன்?

மங்;- அப்ப இஞ்சையா கட்டப்போறாய்?

வச;- உந்தக் கலியாணம் கட்டுற கதையை விட்டுட்டு சொல்லுங்கோ. நான் இந்தப் படம் கட்டாயம் பாக்கோணும். எண்டை ஃபிறெண்ஸ் எல்லாம் பாத்துட்டினம்.

மங்;- பின்னைப் போட்டுவா பிள்ளை. நான் மறிச்சாப் போலைதான் நீ கேக்கப் போறியே?

வச;- (செல்லமாக) நல்ல மம்மி! டாளிங் மம்மி! (மகிழ்ச்சியால் துள்ளுகிறாள்.)

மங்;- அடல்ற்ஸ் ஒன்லிப் படமே?

வச;- ஓ! அதுதான், ஐ டோன்ற் வான் ரு மிஸ் இற்.

மங்;- அப்ப நானும் வாறன்.

வச;- இப்பதானே வரேல்லை எண்டியள்; பேந்து உடனே வாறமெங்கிறியள்.

மங்;- எனக்கும் பொழுது போகேல்லை; வாறன்.

வச;- மம்மிக்கும் அடல்ற்ஸ் ஒன்லிப் படம் எண்ட உடனே ஆசை வந்துட்டுது!

மங்;- இல்லைப்பிள்ளை கனநாளாப் படம் பாக்கேல்லை....

வச;- ஏன், நீங்க டடியோடை பாக்களாம் தானே!

மங்;- அவர் ஒபீசாலை களைச்சுப்போய் வாறவர், படத்துக்கெங்கை வெளிக்கிடுறூர்? அவரைக் கிளப்பூறதெண்டாப் பெரும்பாடு.

வச;- நீங்கள் படத்துக்கு வந்தா, தார் சமைக்கிறது?

மங்;- நானே பிள்ளை சமைக்கிறது? அதெல்லாம் வண்டன் சமைப்பன்.

வச;- அவனேதும் பிழையாச் சமைச்சு, அரை அவியள்ளை இறக்கி வைக்கப் போறுன்.

மங்;- அதொண்டும் பிழைவிடான்; வழக்கத்திலை அவன்தானே செய்யிறவன்.

வச;- பின்னைப் போய் கெதியா வெளிக்கிட்டு வாங்கோ. உங்களுக்கு இனி மேக்கப்போட ஒரு மணித்தியாலம் வேணும்!

[மங்களம் வீட்டினுட் செல்கிருள்.]

வச:- மம்மீ, அப்ப ரிக்கட் றிசேவ்பண்ணவேணும் என்ன?

மங்;- (உள்ளே இருந்து) தேவையில்லைப் பிள்ளை. அங்கை போய் எடுக்கலாம்.

வச:- தற்செயலாக் கிடைக்காட்டா?...... எதுக்கும் றிசேவ் பண்ணுறது நல்லம்தானே!..... மிஸ்ரர் திருநாதன்! மிஸ்ரர் திருநாதன்!

பண்;- (வந்துகொண்டே) ஆ! அது சறி இல்லே! தங்கெச்சி, ஒறு நாலுங் அவனுக்கி மிஸ்ட நாதங், மிஸ்ட நாதங் சொல்லறது. நீங்கலுக்கி அவறுகிட்ட மச்சாங் சொல்ல வேணுங்.

[திருநாதன் வருகிறுன்.]

வச;- அதெல்லாம் சொள்ள எனக்குத் தெரியும்; உன்னை ஆர் அது கேட்டது?

பண்:- நீங்கலுக்கி அவறு அத்தாங் தாணே! அது தாங் மச்சாங் சொல்ல வேணுங் சொல்லறது.

வச:- மிஸ்டர் திருநாதன், இப்ப சவோய் தியேட்டருக்குப் போய், ரண்டு ரிக்கட் றிசேவ் பண்ணீட்டு வாறீங்களா?

திரு;- நான் இப்ப யூனிவேசிட்டிக்கு வெளிக்கிட்டிருக்கிறன். லெக்சருக்கு நேரம் ஆச்சு; நேரை போனுத்தான் போகலாம்; இடையிலை எங்கையாலும் மினைக்கெட்டா லேட்டாயிடும்.

வச:- றிசேவ் பண்ணுட்டா ரிக்கெட் கிடைக்காமைப் போயிடும்.

திரு:- அப்பிடியாஞ அடுத்த ஷோவைப் பாக்கிறது; அல்லது நாளைக்குப் பாக்கிறது.

வச:- இண்டைக்குத்தானே கடைசி! நாளைக்கெப்பிடிப் பாக்கிறது? —— இப்ப ரவி சொல்லீட்டுப் போருர். அது தானே நாங் கேக்கிறன்.

திரு:- இப்ப நயினுகுது. எனக்கு நயின் தேட்டிக்கு லெக்சர். தியேட்டருக்குப் போட்டு வந்தனெண்டா, அரை மணித்தியாலம் யோயிடும். அதுக்குப் பிறகு லெக்சருக்குப் போய்ச் சுகமில்லை.

வச;- அதென்ன? அவ்வளவு முக்கியமான லெக்சரா?

திரு:- அது முக்கியமோ இல்லையோ எண்டு, இப்ப எப்பிடிச் சொல்ல முடியும்? ஒரு வேளை இந்த முறைச் சோதினைக் கேள்வியே இண்டையில் லெக்சரிலைதான் போடு ருங்களோ கண்டதார்?

வச - அவங்களும் கணக்குப் பாத்து, இண்டையில் லெக்சரிலைதான் கேள்வி போடப்போருங்கள்! ஏன் சாட்டுகளை? மனமில்லை எண்டு நேரடியாச் சொல்லுமன்.

திரு - ஒரு அவசரமான காரியமெண்டா நான் எதையும் செய்வன். இதென்ன படம் பாக்கிற விசயந்தானே!

வச:- படத்தைப் பற்றி உமக்கென்ன தெரியப் போகுது? நீர் படமே பாக்கிறேல்லை!

திரு:- நான் கொழும்புக்குப் படம் பாக்க வரேல்லை!

வச:- மட்டவையளுக்கு ஒரு சின்ன ஃபேவர் கூடச் செய்ய மனமில்லை. அதுகும் பொம்பிளையளுக்கு! மனேஸ் தெரிஞ்சாத்தானே!

திரு:- நீங்கள் என்ன வீட்டிலை சும்மாதானே இருக்கிறீங்கள்; கொஞ்சம் நேரத்தோடை வெளிக்கிட்டுப்போனு, நீங்களே றிக்கற் எடுத்திடலாம். அப்பிடிச் செய்ய மனமில்லாமல் என்னைக் கலைக்கிறியள்! நான் போறது ஒரு முக்கியமான அலுவலாக; என்னுடைய வருங்கால வாழ்க்கையே அதிலை தங்கி இருக்கோ, தெரியாது. அதைச் செய்ய விடாமல் என்னைத் தடுக்கிறது குட் மனேஸ்!

மங:- (வந்து கொண்டே) உங்கை என்ன கதை? என்ன சத்தம்? வயது வந்த பொம்பிளைப் பிள்ளையோடை உப்பிடியா பேசுறது? பழகுறது?

திரு:- (ஏளனமாக) நானெண்டும் உங்கடை பொம்பிளைப் பிள்ளையோடை கதைக்க ஆசைப்பட்டுக் கதைக் கேல்லை! தியேட்டருக்குப் போய் ரண்டு றிக்கட் றிசேவ் செய்யச் சொன்னு உங்கடை மகள், நான் நேரமில்லை எண்டு சொன்னன்; அவ்வளவுதான்!

பண்:- ஒவ், ஒவ்! அது தாங்! தங்கெச்சி சொல்லறது "தியேட்டறுக்குப் போயி டிக்கட் எடுக்கோனும்" சொல்லி அதுக்கு சின்ன தொறே சொல்லறது, "நேறங் இல்லே" சொல்லி. அது தாங் செஞ்சது; தொறே வேறே ஒண்டுங் செஞ்சி இல்லே!

மங்:- இப்ப, அப்பிடி என்ன முக்கியமான அலுவல் பாக்கப் போறு, நேரமில்லாமற் போக?

திரு:- யூனிவேசிட்டிக்குப் போகவேணும் லெக்சருக்கு. வேறை எனக்கு என்ன வேலை? இப்ப உங்களோடை கதைச்சுக்கொண்டிருந்ததிலேயே பத்து நிமிஷம் போட்டுது. இனி எங்கை போறது? தாருங்கோ காசை; றிக்கற் றிசேவ் பண்ணீட்டு வாறன்!

மங்:- லெக்சர்! பெரிய லெக்சர்!! உந்த லெக்சரெல்லாம் கேட்டுப் படிச்சு நாளைக்குப் பெரிய சிவில் சேவன்ராத்தானே வரப்போருய்!

திரு:- சிவில் சேவன்ரா வந்தா என்ன? ஹவுஸ் சேவண்டா வந்தா என்ன? கடமையைச் சரிவரச் செய்ய வேணும், எண்டது தான் என்னுடைய கொள்கை! படிக்க வந்தனான், அதை குறைவிடாமற் செய்யவேணும்! சரி தியேட்டருக்குப் போட்டு வாறன் ............... காசைத் தாருங்கோ.........

[மங்களம் உள்ளே போகிருள்.]

திரை

## காட்சி 3

இடம்: கொழும்பு, சண்முகம்பிள்ளை வீடு.

[சண்முகம்பிள்ளை வெளியே இருந்து வருகிறார். அவர் நெற்றியில் திருநீறு, சந்தனம் துலங்குகின்றன. மங்களம் கதிரையில் இருக்கிறாள்.]

மங்;- இப்பதானே கோயிலாலை வாறியள்? இறைச்சி வாங்கியரச் சொன்னன்; வாங்கியந்தனீங்களே?

சண்;- ஓ, வாங்கியந்தனான், இந்தா. (கையிலுள்ள பார்சலை அவளிடம் கொடுக்கிறார்.)

மங்;- என்ன இறைச்சி? ஆட்டிறைச்சியோ?

சண்:— (கதிரையில் இருந்து) ஆட்டிறைச்சி எண்டு சொல்லித்தான் தந்தான். மாட்டிறைச்சியோ, எருமை இறைச்சியோ, ஆனை இறைச்சியோ, பூனை இறைச்சியோ ஆர் கண்டது? கொழும்பிலை இறைச்சியை நம்பி வாங்கேலாது.

பண்:- (வந்துகொண்டே) மாத்தையா காலம்பற கோவிலுக்கு போட்டு வாறது; அந்த நேறத்திலே எறெச்சி வாங்கி வாறது!

சண்:- பின்னை என்ன? வரேக்கை வாறவழிலை வாங்கியாறதை விட்டுட்டு, அதுக்கு இன்னொருக்காப் போறதே?

பண்:- ஆ! எறெச்சி தாங் வேணுங்! நமக்கிங் அது தாங் புறியங்! நாங் அதுக்குச் சொல்லி இல்லே. மாத்தையா காலம்பற வந்தனு பண்ணப்போற நேறத்திலே, இது வாங்கி வாறது———! அதுக்கி தாங் சொன்னது!

சண்:- எனக்கென்னத்துக்கு? அம்மா வாங்கியரச் சொன்னு; வாங்கி யந்தன்.

மங்;- இந்த வீட்டிலை, ஆக நான்தானே இறைச்சி தின்னுறது!

சண்:- நான் இருந்தாத் தின்னுவன்; இல்லாட்டாக் கிடக்கிறதைத் திண்டுட்டுப் போயிடுவன். உனக்கு இறைச்சி இல்லாமல் இறங்காதே!

மங்;- சரி, சரி, உந்தக் கதையை நிப்பாட்டுங்கோ. (பண்டாவைப் பார்த்து) இந்தாடா கொண்டு போ. [பண்டா பார்சலை வாங்கிக் கொண்டு உள்ளே போகிறுன்.]
சமைச்சுப்போட்டு நீயே திண்டுடாதை அரைவாசியையும்!

சண்:- அம்மாவுக்கும் கொஞ்சம் மிச்சம் வைச்சிடு......
எங்கை திருநாதனைக் காணேல்லை உங்கை தானே;- யூனிவே சிட்டிக்குப் போட்டானே?

மங்:- எனக்குத் தெரியுமே? உங்கினை பாருங்கோவன். என்ன மருமேனைக் காணுமல் தவிக்கிறியள்?

சண்:- ஆளெங்கை வீட்டிலேயோ, வெளீலேயோ எண்டு கேட்டன்; சும்மா அறியக் கேக்கக் கூடாதே?

மங்;- நல்லாக் கேளுங்கோவன்......... ஆனுச் சொல் லிப்போட்டன்! என்னிட்டை இனிமேல் அவன்ரை கதை பேசக்கூடாது. இதுக்குமேலை, என்னுலை இதைக் கொண் டிழுக்க ஏலாது.

சண்:- என்ன இருந்தாப்போலை குமுறுறாய்? உனக்கிப்ப திடீரெண்டு என்ன முறிஞ்சு போச்சு?

மங்;- (எரிச்சலாக) எனக்கொண்டும் முறியேல்லை. என்னுலை என்ரை பிராக்கே பாக்கேலாமலிருக்கு; வாறவை போறவேன்ரை பிராக்கெல்லாம் என்னுலை பாக்க முடியுமே? அவருக்கு நேரத்துக்கு நேரம் சோறென்ன! தண்ணியென்ன! எடுத்து மேசேலை வைக்க, வெள்ளைக்காறத் துரை மாதிரி சாப்பிட்டுட்டுப் போருர்!

சண்:- நீ தானே எல்லாருக்கும் ஆக்கிப் படைக்கிறு இந்த வீட்டிலை. அவன் வண்டன் காச்சிப் போடுறுன்; பொடியன் சாப்பிட்டுட்டுப் போறுன். ஏதோ, உன்ரை முதுகிலை இருக்கிறமாதிரிக் கதைக்கிறுய்!

மங்:- (கோபமாக) வண்டன் காச்சிளு என்ன? குண்டன் காச்சிளு என்ன? ஆற்றை வீட்டுப் பணம் சில வழியுது? வீட்டு வாடை என்ன? அரிசி சாமான்ரை விலை என்ன? ஒண்டையும் கணக்குப் பாராமை, அவருக்கு நேரத்துக்கு நேரம் சோறும் தண்ணியும் குடுத்துக்கொண் டிருக்க முடியுமே? அவருக்கென்ன கவலை பிரபுவுக்கு?

சண்:- அவன் பொடியன் என்ன உன்னிட்டைப் புண் ணியத்திலை சாப்பிடுறுனே? மாதத்திலை ஏதோ ஐம்பது அறுபது தாறுனல்லே!

மங்:- அந்தக் காசை கொண்டுபோய்க் குடுத்திட்டு, எங்கையாவது சோத்துக் கடேலை சாப்பிடட்டன். இஞ்சை சாமான் சக்கட்டுக்குத் தலைதெறிச்ச விலை சொல்லுறுங்கள். அவற்றை ஐம்பது, அறுபது எந்த மூலைக்குக் காணும்?

சண்:- சத்தம் போட்டுப் பேசாதை; பொடியன்ரை காதிலை விழப்போகுது.

மங்:- விழுந்தா என்ன? கேக்கட்டன்!

சண்:- இஞ்சா, நாளைக்கு உன்ரை பெட்டை அவனைத் தான் கட்டப்போறுளோ தெரியாது; அவசரப்பட்டுக் கொழுவாதை!

மங்:- (ஏளனமாக) என்ரை பெட்டை……… உவரையல்லோ……… (சிரிக்கிருள்)

சண்:- ஏன் அவன் ஒரு நல்ல உத்தியோகம் எடுத் தானெண்டா……

மங்:- யு. என். பி. சிறீலங்கா, ரண்டும் 'சிங்கள ஒன்லி' எண்டு தீர்மானிச்சுப் போட்டுது. உவைக்கார் இனி நல்ல உத்தியோகம் குடுக்கிறது?

சண்:- கடைசி அவனெரு வாத்தி வேலையாவது எடுக்க மாட்டானே?

மங்;- வாத்திவேலை…… பூ!…… உது பெரிய உத்தி யோகமே?

சண்?- அப்ப பெரிசாத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறுய்! — — ...

மங்:- ஏன், என்னிட்டைச் சீதணம் இருக்கு; குடுத்தெடுப்பன் நல்ல மாப்பிளேயா!

சண்:- மாப்பிளேயை நீ உன்ரை விருப்பம்போலே எடு; அதுக்காகப் பொடியனே இப்ப வீட்டை விட்டு வெளிக்கிடுத்தாதை!

மங்:- பின்னே என்ன? நெடுக வைச்சுச் சாப்பாடு போட்டுக்கொண்டிருக்கட்டே அவருக்கு?

சண்:- இஞ்சா, கொஞ்சம் பொறுமையா நான் சொல்லுறதைக் கேள்! அந்தாளும் மேனே இஞ்சை அனுப்பிப்போட்டுது; நாங்களும் இருக்க விட்டுட்டம். இப்ப மூண்டு மாதம் போட்டுது. இன்னும் ரண்டரை வரியம் பல்லேக் கடிச்சுக்கொண்டிரு. நாங்கள் கொஞ்சம் கஷ்டப்பட்டாலும், பொடியன் படிச்சு நல்லா வரட்டு. அவனே நாங்கள் இப்ப வீட்டாலே போகச் சொன்னு, அவன்ரை படிப்புக் குழம்பிப்போம். அந்தாளும் முட்டுப்பட்ட மனிசன். அவனே இப்ப வேறை எங்கையாலும் விடவும் சிலவுக்குக் கஷ்டம்.

மங்:- (துள்ளி எழுந்து) முட்டுப்பட்ட பொடியள் உலகத்திலே ஆயிரம் இருக்கு! அப்ப பின்னே எல்லாரையும் வீட்டை அழைச்சுக் கொண்டுவந்து வைச்சுச், சாப்பாடு போட்டுப் படிப்பியுங்கோவன்!

சண்:- உதிலே இரு! உதிலே இரு!! ஏன் துள்ளுறு? (இருக்கிருள்). என்னுடைய ஆக்களெண்டாலும் கிடக்கு; உன்ரை அண்ணேன்ரை பிள்ளேயை வீட்டிலே வைச்சிருக்க நீ இவ்வளவு கஷ்டப்படுறு!

மங்:- (கோபமாக) அண்ணனெண்டா என்ன? ஆட்டுக்குட்டியெண்டா என்ன? தகப்பனிட்டைப் பிள்ளேயைப் படிப்பிக்க வழி இல்லாட்டா, அவருக்கென்ன பீ. ஏ. படிப்பும் பி. எஸ். ஸி. படிப்பும்? ஏதாவது ஒரு தொழிலேப் பாக்கிறது!

சண்;- நீ சொல்லேல்லை எண்டு தான், அவன் தொழில் பாக்கப் போகாமலிருக்கிறான். சும்மா போவன்! .. பின்னைப் போய்ச் சொல்லு அவனிட்டை, ''எங்க வீட்டிலை இராதையடா, போடா'' எண்டு.

மங்:- பின்னைச் சொல்லாமைவிடப்போறனே? சொல்லத்தான் போறன்! எத்தினை நாளைக்குப் பாக்கிறது?

[திருநாதன் கையிற் சூட்கேசுடன் வலப் பக்கத்திலுள்ள அறையிலிருந்து வருகிறான்.]

திரு:- சரி மாமி, உங்களுக்குச் சொல்லூற கஷ்டத்தையும் நான் வைக்கேல்லை. நீங்கள் சொல்லாமலேயே நான் போயிடுறன்!

சண்:- என்ன பெட்டி படுக்கையோடை வெளிக்கிட்டுட்டா? இப்ப எங்கை போப்போறாய்?

திரு;- போகத்தானா இடமில்லை? இந்தப் பெரிய கொழும்புப் பட்டணத்திலை, எனக்கு ஒருத்தனுக்கு இருக்கவா இடம் கிடையாது? கடைகி ஒரு கராச்சாவது கிடையாதா? சரி நான் போட்டு வாறன்

சண்:- (எழுந்து நின்று) சாச்சா! சும்மா இரு தம்பி! அதெல்லாம் பாத்துச் சரிக்கட்டலாம்.

திரு:- இல்லை மாமா, ஒருத்தருக்காக ஒருத்தர் கஷ்டப்படக் கூடாது மாமி சொன்னது சரி. எனக்குப் படிக்க வழியில்லாட்டா, நான் ஏதும் ஒரு தொழிலைச் செய்ய வேண்டியதுதானே! இவ்வளவு நாளும் உங்களுடைய வீட்டிலை இருக்க இடம் தந்ததுக்கு நன்றி! நான் வாறன்.

[திருநாதன் வெளியே செல்கிறான்.]

மங்;- (ஏளனமாக) பெரிய நன்றி சொல்லிப்போட்டுப் போறார்!

சண்:- அவனை என்ன பழக்கவழக்கம் தெரியாதவன் எண்டு நினைச்சியே?

பண்;- (உள்ளே இருந்து வேகமாக வந்து) அந்த தம்பி எங்கே போறது? ஊட்டுக்குப் போறதா யாப்பாணேக்கு? பெற்றி எல்லாங் தூக்கீட்டும் போறது!

மங்:- யாழ்ப்பாணத்துக்குப் போருரே, எங்கை போருரே? உனக்கேன் அந்தக் கவலை?

பண்:- அவன் மிச்சங் நல்ல தொறேதானே! இப்ப எதுக்கு போறது?

சண்:- நீ சமைக்கிற சாப்பாடு சரியில்லையாம். அதைச் சாப்பிடேலாதாம் அதுதான், வேறை நல்ல சாப்பாடுள்ள இடமாப் பாக்கப் போருன்.

பண்:- நாங் சரிகட்டற சாப்பாடு நல்லது இல்லே சொன்னது? ——... நீங்கலுக்கு நாங் சறிகட்டற சாப்பாடு திங்கி திங்கித்தாங் இந்த மாதறி வாறது ஒடம்பு. அவண் சறிஇல்லே சொல்லறது?... — — — ... நீங்கலுக்கு இப்ப நமக்கி பொய்தாங் சொல்லறது!

சண்:- அப்ப போய்க் கேட்டுக்கொண்டுவா அவனை, நான் சொன்னது பொய்யோ எண்டு

பண்:- ஆ! நமக்கித் தெறியுங்! —...... இப்ப எல்லாங் நமக்கி தெறியுங்! — — — —

மங்:- என்ன தெரியும்? ஏதோ துள்ளுருய்!

பண்:- நோனுதாங் சொல்லியிறுக்கி அவனுக்கி. ''நீங்கலுக்கி மிச்சங் சாப்படறது. நாங்கலுக்கி அந்தமாதறி சாப்பாடு செஞ்சு தாறதிக்கி சல்லி இல்லே'' அப்பிடி சொல்லியிறுக்கி. அப்ப அவண் போறது......— ... அந்தத் தொறே கிட்டே நோனுக்கி ஒறு நாலுங் கோபந்தாங்!

மங்:- நானிப்ப அவனை என்ன செய்துபோட்டன்?

பண்:- நீங்கலுக்கி இப்ப ஒன்டுஞ் செஞ்சி இல்லே! ஒறு நாலுங்......— செய்யறது எல்லாங் நமக்கி தெறியுங் தானே!

திரை

# உறுப்பு III

## காட்சி 1

இடம்:- கொழும்பு, மணிவண்ணன் குடியிருக்கும் அறை.

[திருநாதன் அறையில் புத்தகம் வாசித்துக் கொண்டிருக்கிறான். மணிவண்ணன் கடுதாசியால் சுற்றப்பட்ட போத்தில் ஒன்றைக் கையிற் கொண்டு வருகிறான்.]

மணி;- திரு! (போத்திலைக்காட்டிச் சிரிக்கிறான்)

திரு:- (புத்தகத்தை வைத்து விட்டு நிமிர்ந்து பார்த்து) ஒபீசாலை இப்பதான் வாறியா? உதென்ன?

மணி:- நான் என்னுடைய நண்பனின் வெற்றியைக் கொண்டாடப்போறன்...... (போத்திலைச் சுற்றியுள்ள கடுதாசியை நீக்குகிறான்)

திரு:- சாராயம்! உதை இப்ப குடிக்கப்போறியா?

மணி:- ஐ வாண்ட் டு செலிபறேட் யுவர் ஸக்செஸ்!

திரு:- இதென்ன மச்சான் பெரிய வெற்றியா? 'ஃபேஸ்ற் இன் ஸயன்ஸ்' தானே! ஒரு வருஷப் படிப்பு. இன்னும் ரண்டு வரியப் படிப்பிருக்கு. பெரிய, பெரிய சோதினை எல்லாம் இனித்தானே!

மணி:- முதலாண்டுப் பரீட்சை எண்டாப்போலை சும்மாவா? 'திறீ பீஸ்' அல்லா எடுத்திருக்கிறாய்!

திரு:- ஃபேஸ்ட் இன் சயன்சிலை, மூன்டு 'பி' எடுக்கிறது பெரியகாரியமில்லை. எத்தினைபேர் எடுக்கிறவங்கள்!

மணி:- அவங்கள் எடுக்கிறதும், நீ எடுக்கிறதும் ஒரே மாதிரியா? உனக்கு எத்தினை பிரச்சினைகள்! எத்தினை வசதிக் குறைவுகள்.........!

திரு:- இன்னும் ஒரு விஷயம்; நான் உனக்குச் சொல்லேல்லை.

மணி:- என்னடா? சொல்லு, சொல்லு!

திரு:- 'ஸயன்ஸ் ஸ்கொலஷிப்'பும் எனக்குத்தான் கிடைச்சிருக்கு

மணி:- அதென்னடா அது?

திரு;- 'ஃபேஸ்ற் இன் ஸயன்'சிலை மிகத்திறமையாகச் செய்யிற மாணவனுக்குக் குடுக்கிற ஸ்கொலஷிப்.

மணி:- அடிசக்கை! குடுமச்சான் கை! (கை குலுக்குகின்றனர்) நீ உண்மேலை ஒரு கெட்டிக்காறன்தான. ஐ ஆம் றியலி பிறௌட் ஒஃப் யூ!......-... அப்ப அந்தக் காசைக்கொண்டே நீ இனிப் படிச்சுடலாம்; என்ன?

திரு:- இல்லை; அந்த 'அவாட்'டிலை காசுப்பெறுமதி அதிகம் இல்லை; ஒரு நூறோ இருநூறோ பெறும். அது ஒரு கௌரவப் பரிசுதான!

மணி;- அது என்ன பரிசாக இருந்தாலென்ன........ அதை நீ அடிச்சியே! அதே ஒரு மகத்தான சாதனைதான்!

திரு:- என்னுடைய வெற்றியிலை பெரும் பங்கு உனக்குத்தான உரியது!

மணி:- நான் என்ன செய்தன்? இருக்கிறதுக்கு இடங் குடுத்தன். அவ்வளவு தான்! படிச்சது எழுதினது எல்லாம் நீ தானே!

திரு:- (எழுந்து நின்று உணர்ச்சிவசப்பட்டு) இருக்க இடம் தந்ததுக்காக மட்டும் நான் உனக்கு நன்றி சொல்லேல்லை. எனக்குப் படிக்கிறதுக்கான மனநிலையை ஏற்படுத்தித் தந்ததே நீ தான் மணி! மாமி வீட்டிலை இருந்து வெளிக்கிட்டபொழுது இருந்த மனக்குழப்பத்திலை, எனக்கு என்ன செய்யிறதெண்டே தெரியேல்லை! 'எல்லாத்தையும் சுழட்டி எறிஞ்சு போட்டு யாழ்ப்பாணம் போவமோ', எண்டு கூட நினைச்சன். அங்கை போய்த்தான் என்ன

செய்கிறது?...... ... உன்னிட்டை வந்து என்னுடைய கஷ்டங்கள் பிரச்சினையள், துயரங்களை உன்னிடத்திலை மனந்திறந்து எடுத்துச்சொல்லி, உன்னுடைய ஆறுதல் மொழியையும், புத்திமதிகளையும் கேட்ட பிறகுதான், எனக்கு மனதிலை ஒரு அமைதி ஏற்பட்டது. அந்த மன அமைதி மட்டும் ஏற்படாமலிருந்தால்!...... (பெருமூச்சுவிட்டு) என்னாலை படிச்சே இருக்க முடியாது!

மணி:- உதைத்தானே பெரிய உளவியல் அறிஞர்களும் சொல்லுறார்கள். ஒவ்வொருத்தரும் தங்கள் உணர்ச்சிகள், பிரச்சினைகளை ஆரோ ஒருத்தரோடையாவது உளம் திறந்து பேசவேணுமெண்டு. உள்ளத்து உணர்ச்சிகளை, வெளியிடாமல், அடக்கி வைக்கிறத்திலைதான் சிலருக்கு மூளேலை தட்டுறது. அதிருக்க, கொப்பருக்கு அறிவிச்சிட்டியா பாஸ் பண்ணின சங்கதியை?

திரு:- இல்லை, நாளைக்கு எழுதுவம்.

மணி;- சந்தோசமான சமாச்சாரங்களை உடனடியாகவல்லோ எழுத வேணும்!

திரு: இதென்ன சின்னச் சோதினைதானே!

மணி:- நீ இனி 'ஒனேஸ்' செய்யலாம் என்ன? என்ன பாடம் செய்ய யோசிக்கிறாய்?

திரு:- இல்லை மச்சான்! நான் 'ஒனேஸ்' செய்ய விரும்பேல்லை.

மணி:- ஏன் அதுக்குத்தானே மதிப்பு!

திரு:- 'ஒனேஸ்' செய்தாக் கட்டாயம் 'கிளாஸ்' எடுக்க வேணும். தற்செயலாக் 'கிளாஸ்' கிடைக்காட்டா ... ... ... ... அந்தப் பட்டத்துக்கு மதிப்பில்லை. 'ஜெனறல்' செய்யிறதானா, படிப்பும் மூண்டு வரியத்திலை முடியும். அதிலை ஒரு 'செக்கன் கிளாசா'வது அடிச்சிட்டா, நல்ல உத்தியோகம் கிடைக்கும்.

மணி:- 'ஒனேஸ்' எண்டா நாலு வரியம். செலவுக்கு எங்கை போறதெண்டு யோசிக்கிறியோ?... ... ...

திரு:- அதுகும் உள்ளது தான். மூண்டு வரியம் காசு கட்டத்தான் அப்பாவாலை முடியும். அதுக்குமேலை ஆரிட்டைப் போறது?

மணி:- நான் இருக்கேக்கை அதைப்பற்றி யோசியாதை! அந்த நாலாவது வருஷச் சிலவை நான் தாறன்!

திரு:- (உணர்ச்சிவசப்பட்டு) மச்சான் மணி! நீ எனக்குக் காசு தரவேண்டாம். "நான் தாறன்" எண்டு ஒரு வார்த்தை சொன்னியே! அந்த வார்த்தையே கோடி பெறும்! இப்பதான் முதன் முதலாக் கேக்கிறன், அந்த வார்த்தையை. நான் படிக்கத் தொடங்கின நாளிலை இருந்து. என்னைப் பாத்துப் பொருமைப் பட்டவையையும், "உனக்கு ஒரு சதமும் தரமுடியா" தெண்டு சொன்னவையையும்தான் இதுவரேல்லை கண்டிருக்கிறன்............ ஆனா, உன்னுடைய கஷ்டம் எனக்குத் தெரியும். நீ மாதம் மாதம் அனுப்பூற காசை நம்பித்தான் யாழ்ப்பாணத்திலை உன்னுடைய அப்பா, தங்கை, தம்பி எல்லாரும் வாழுனம்.

[மணிவண்ணன் போத்திலைத் திருகித் திறந்து சாராயத்தைக் கிளாசில் ஊற்றிக் குடிக்கிறான்.]

மணி:- என்னுடைய குடும்பத்தைப் பற்றிப் பேசாதை! அது தீர்க்க ஏலாத பிரச்சினை! அது தீருற போது தானாகத் தீரும். நான் உனக்குச் செய்யிற உதவி உடனடியாகப் பலன் தரும். நானென்ன உனக்குச் சும்மாவா தாறன்? வீட்டிலை இருந்து காசு வந்த உடனை தா; இல்லாட்டா உத்தியோகமானபிறகு திருப்பித்தா.

திரு:- எனக்காக நீ மட்டும் கஷ்டப்பட்டாலும் பறவாயில்லை. உன்னுடைய குடும்பத்தையும் கஷ்டப்படுத்தாமுய், இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டு நீ எனக்கு உதவி செய்ய முன்வருவாயெண்டு தெரிஞ்சிருந்தா, நான் இஞ்சை வராமல் வேறை எங்கையாவது போயிருப்பன்.

மணி:- என்ன? வேறை எங்கையாவது போயிருப்பியா? நீ போனாப்போலை நான் உன்னைப் போக விட்டுடு

வனு? நான் உன்னுடைய ஊரவன்; பள்ளி வாழ்க்கைத் தோழன். நான் இருக்கத்தக்கதாக நீ வேறை இடத்துக்குப் போறதா? நீ வேறை எங்கையாவது போயிருந்தா, அடுத்த நாள் நானே அங்கை வந்து, உன்னை இஞ்சை இழுத்து வந்திருப்பன்......—— ஏன்ரா திரு, நீ என்னிட்டை உதவி பெறக்கூடாதெண்டு நினைக்கிறியா? அது உனக்குக் கௌரவக் குறைவா?

திரு:- (மணிவண்ணனின் வாயைப் பொத்தி) ஐயோ! அப்பிடிச் சொல்லாதை மச்சான்! உன்னிட்டை ஒரு முறையென்ன ஆயிரம் முறை உதவி கேட்பன், உன்னிட்டும் பணம் இருந்தா! ஆனு, நீயும் என்னைப்போல ஏழை!

மணி;- ஒரு ஏழையாலைதான் மச்சான் இன்னெரு ஏழைக்குள்ள துன்பத்தை உணரமுடியும்! பணக்காறனுக்கு அது விளங்காது?

(மீண்டும் சாராயத்தை ஊற்றிக் குடிக்கிருன்.)

திரு;- நான் ஒருத்தன் படிக்கிறத்துக்கு எத்தினை பேரைக் கஷ்டப்படுத்துறது?

மணி:- திரு! அவசரமில்லாமல் ஒருத்தருக்குத் துன்பம் குடுக்கக்கூடாது. ஒரு நல்ல காரியத்துக்காகச் சிரமப் பட்டாலும் பறவாயில்லை......—— (சிகரெட்டைப் பற்ற வைத்து) எனக்கும் பள்ளிக்கூடத்திலை படிக்கிற காலத்திலை, மேற்படிப்புப் படிக்கவேணும், பட்டம் பெற வேணுமெண்டு எவ்வளவோ ஆசை! என்ன செய்யிறது? பணநிலை இடம் குடுக்கேல்லை! அப்பாவுக்கும் வயது போட்டுது; தங்கச்சி மலர் இருக்கிருள்; அவளுக்குச் சீதனம் தேடிக் கலியாணம் செய்து வைக்க வேணும்! குடும்பத்தின்ரை பாரம் என்ரை தலேலை, பொறிஞ்சு போச்சு. பேசாமைப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைச்சுட்டு, உத்தியோகத்திலை இறங்கீட்டன்!

திரு:- இளமேலை நாங்கள் காணுற கனவுகளிலை, நிறைவேருத கனவுகள் உப்பிடி எத்தனையோ!

[மணிவண்ணனது அசைவுகளில் சிறிது தளம்பம் காணப்படுகிறது. கை காட்டி அபிநயித்துப் பேசு கிருன்.]

மணி;- மச்சான்! நான் வாசிற்றிக்குப் போய்ப் படிக் காட்டா என்ன? இப்ப நீ படிக்கிருய், என்னுடைய உற்ற நண்பன்! நீ படிக்கிறதும் நான் படிக்கிறதும் ஒண்டுதான்! (சொற்களை அழுத்தி) ஆனபடியால்......... நான் செய் யிற உதவியை ........ நீ ஏற்க மறுக்கக்கூடாது!.......

திரு;- என்னுடைய உற்ருர், உறவினர், அப்பா வோடை உடன் பிறந்தவை கூட, எனக்கு உதவி செய்ய மறுத்துப் போட்டினம். நீ, ஒரு நண்பன். இவ்வளவு தூரம் முன்வந்திருக்கிரு! — — — (பெருமூச்சு விட்டு) ம்........ மனிதர்கள்தான் எத்தினை விதம்! உறவுகள்தான் எத்தினை விதம்!!

மணி;- மச்சான்! உறவு எண்டதென்ன? உள்ளத்திலை உண்மையான அன்பு வைச்சு... , மற்றவன்ரை நல்வாழ் விலை அக்கறைகொண்டு, நடக்கிறதுதான் உறவு! சொந் தக்காறர் எண்டு சொல்லிப்போட்டுக் — — — கலியாணவீட் டுக்குப்போய் சாப்பிட்டுட்டு, செத்தவீட்டுக்குப்போய் அழு தாப்போலை உறவில்லை!

[மணிவண்ணன் சாராயத்தைக் கிளாசில் ஊற்றித் தான் குடித்துவிட்டு. மீண்டும் ஒருமுறை ஊற்றிக் கிளாசைக் கையில் எடுக்கிருன்.]

திரு நீயும் இதிலை கொஞ்சம் குடிக்கவேணும். (கிட்டப் போகிருன்.)

திரு!- என்ன சாராயமா? ஐயோ! வேண்டாம்!

மணி:- கனக்கக் குடிக்கவேண்டாம் மச்சான்! — — — ஒரு டோஸ்!

திரு:- (இரக்கமாக) மச்சான் மணி! நான் இருக் கிறநிலேலை, இப்ப உதுதாஞ எனக்கு வேணும்?

மணி:-- திரு, நீ என்னோடை ஆறுமாதகாலம் இருந்துட்டாய். இதுவரேல்லை ஒரு நாளாவது நான் உன்னைக் குடிக்கச்சொல்லிக் கேட்டிருக்கிறனா?------ நானவது இப்பிடிப் போத்திலை அறைக்குக் கொண்டுவந்து குடிச்சிருக்கிறனா?------ இண்டைக்கொரு சந்தோஷமான நாள்! அதைக்கொண்டாட வேணும்! அதுக்கு ஸ்பெசலா வாங்கியந்திருக்கிறன் சாராயம்!

திரு:- மணி, என்னைப்பற்றி எல்லாம் தெரிஞ்சிருந்தும் இப்பிடி வற்புறுத்தூறியே!

மணி;- வாழ்விலோர் திருநாள்! இண்டைக்கு உன்னுடைய திருநாள்! அதை நாங்கள் கொண்டாடுறம். இதிலை நீ பங்கு கொள்ளாட்டா, அது கலியாண வீட்டிலை மாப்பிளை பங்கு கொள்ளாததைப் போலை இருக்கும்!

திரு!- மணி! நான் முனிவரல்ல; பெரிய காந்தி மகாத்மா அல்ல; வேணுமானக் குடிப்பன்! ஆனா இந்தப் படிப்பு முடியும் வரேலையாவது, உந்தப் பழக்கத்தைப் பழகாமல் இருக்க விரும்பூறன்!

மணி:- திரு, நீ நாளைக்குக் குடிக்க வேண்டாம். நீ குடிச்சாலும், நான் உன்னைக் குடிக்க விடமாட்டன், நாளைக்கு! ஆனா இண்டைக்குக் குடிக்கத்தான் வேணும்!...... நீ சோதினை பாஸ் பண்ணினத்துக்கு குடிக்காட்டாலும்,...— எங்களுடைய அன்பின் அடையாளமாக, ஒரு டோஸ், ஒரு மிடறு தடிக்கத்தான் வேணும்! (கிளாசை நீட்டுகிறுன்)

திரு:- சரி, கொண்டா. (கிளாசை வாங்கி) எங்களுடைய அன்பின் அடையாளமாக ஒரு மிடறு மட்டும் குடிக்கிறன். (குடிக்கிறுன்) சீ! தொண்டை எல்லாம் எரியுது. (அருவருத்து) இதை எப்பிடித்தான் குடிக்கிறியளோ!

மணி;- எல்லாம் பழக்கத்திலை வரச் சரி.

திரு;- இவ்வளவு கஷ்டப்பட்டு, இதை ஏன் தான் குடிக்கிறியள்? இதிலை என்ன இன்பத்தைக் காணுறியள்?

மணி;- இன்பமா திரு? உனக்குத் தெரியாது! கிழமை முழுக்க வேலை செய்யிறம்; காலேலை ஏழு மணிக்கு ஓபீ

சுக்கு வெளிக்கிட்டா, மாலை ஐஞ்சு மணிக்குத்தான் வீடு. கிழமேலை ஒருநாள் லீவு. அன்றைக்காவது கொஞ்சம் சந் தோஷமாய் இருக்க வேண்டாமா?

திரு:- மணி! குடியிலை இன்பம் காண முயற்சிக்கிறது. விட்டிற் பூச்சி விளக்கைப் பழமெண்டு நினைச்சு, அதிலை வந்து விழுந்து சாகிறதைப் போலை!

மணி;- நானென்ன நித்திய குடிகாறனா? ஆடீலை ஒருக்கா, அமாவாசேலை ஒருக்கா குடிக்கிறவன் தானே!

திரு:- அப்பிடிப் பொழுது போக்காகக் குடிக்கிறது தால், பிறகு ஆளையே பிடிக்கிறது! இந்தப் போத்திலுக்கு எவ்வளவு சிலவழிச்சிருக்கிறு? இந்த நெவிக்கட் சிகரெட் பக்கட் மட்டும் ஒண்டரை ரூபா. இந்தக்காசை வீட்டை அனுப்பினியெண்டா, அந்தக் குடும்பத்தின்ரை ஒரு நாள் சீவியம் போகும்!

மணி:- காசைக் கணக்குப் பாத்தா, பெரிய அநியாயம் தான்! ஆனா இந்த மாதிரி இடைக்கிடை ஒவ்வொண்டைப் போடாட்டா எங்களுக்கும் வாழ்க்கை போறடிச்சுப்போம்! வாழ்க்கேல்லை ஒரு சுவை இருக்காது! ஓய்வு ஒளிச்சலில்லா மல், தினமும் வறுகிக் குவிக்கத்தானா மனிதன் பிறந் தான்? ....... அப்பிடியானா இராப் பகலா தொடர்ந்து இயங்கி, ஆயிரக் கணக்கிலை, லட்சக்கணக்கிலை பொருள் களை உற்பத்தி செய்து கொட்டுதுகளே யந்திரங்கள்; அது களுக்கும் மனிசனுக்கும் என்ன வித்தியாசம்?

திரு;- ஓயாமை உழைச்சா யந்திர வாழ்க்கை! குடிக் கப் பழகிட்டா, குடிக்கு அடிமை! யந்திர வாழ்க்கையை விட அடிமை வாழ்க்கைதான் கேவலம்!

மணி:- நீ என்னுடைய அருமை நண்பன் இவ்வளவு தூரம் சொல்லுறாய்! சரி, இனிமேல் குடிக்கிறதில்லை. இண் டைக்குத்தான் கடைசி!

திரு:- 'இண்டைக்குத் தான் கடைசி' எண்டு குடிச் சவங்கள் பலர், பிறகு குடிக்கு அடிமையாகி செத்தியிருக்கி றுங்கள்! குடியை நிற்பாட்டுறது கூட அவ்வளவு கஷ்ட மில்லை; ஆனா அந்தப் பழக்கம் நீடிக்க வேணும்!

திரை

## காட்சி 2

இடம்: யாழ்ப்பாணம், சுப்பரம்மரன் வீடு.

[மணிவண்ணன் பகல் நித்திரை செய்து, எழுந்து முகம் கழுவிவிட்டு, துவாயால் முகத்தைத் துடைத்துக்கொண்டு வருகிறான்.]

மணி:- தங்கச்சி! மலர்!

மல:- என்னண்ணை! (வருகிறாள்.)

மணி:- ஒரு பிளேன்ரீ வை பாப்பம். நித்திரை கொண்டது பஞ்சியாக் கிடக்கு.

மல:- கேத்திலிலை தண்ணி இருக்கு; இப்ப தாறன் அண்ணை, ஒரு நிமிஷத்திலை! (உள்ளே போகிறாள்.)

[மணிவண்ணன் அன்றைய பேப்பரை வாசிக்கத் தொடங்குகிறான். இளங்கோ கையில் புத்தகங்களும், கலைந்த தலையும், கசங்கிய உடுப்புகளுமாகப் பாடசாலையிலிருந்து வருகிறான்.]

இள:- (ஆச்சரியப்பட்டு) அண்ணை!

மணி:- (நிமிர்ந்து பார்த்து) என்ன இளங்கோ? பள்ளியாலை வாறியா?

இள:- எப்ப வந்தனீங்கள் கொழும்பிலை இருந்து?

மணி:- நான் காலமை வந்துட்டன்.

இள:- நான் காணேல்லை.

மணி:- பஸ் வரச் செண்டு போச்சு. நீ பள்ளிக்குப் போட்டாய்.

இள:- எனக்கு என்னண்ணை வாங்கி யந்தனீங்கள்?

மல:- (வந்துகொண்டே) பாத்தியளே! அவனுக்குத் தன்ரை கவலை! அண்ணை இப்ப ஒரு வரியத்திப்பிறகு வந்திருக்கிறார். அவற்றை சுகத்தைக் கேப்பமெண்டில்லை——"எனக்கென்ன கொண்டந்தனி" எண்டு நிக்கிறான்!

மணி:- நீ, ரீ போடேல்லையா?

மல:- தேயிலை அவிய விட்டிருக்கிறன்; இப்ப தாறன் ரீ.

இள:- என்ன கொண்டந்தனீங்கள்? சொல்லுங் கோவன்!

மணி:- உனக்கிப்ப அவசரமா என்ன வேணும்?

மல:- அவனுக்கிப்ப ஆயிரம் சாமான்கள் வேணும்? எல்லாம் வாங்கக் காசு வைச்சிருக்கிறியளே?

இள:- (மலரைப் பார்த்து) உன்னைப்போலை எனக்குப் பேராசை இல்லை!

மல:- ஓ எனக்குச் சரியான பேராசை! ஒவ்வொரு முறையும் அண்ணை வரேக்கை. எனக்குத்தான் எல்லாம் வாங்கியர வேணுமெண்டு சொல்லி விடுறனன்!

மணி:- டேய்! இளங்கோ! நான் கொக்காவுக்கு ஒருக்காலும் ஒண்டும் வாங்கியாறேல்லை! எப்ப என்ன கேட்டாலும், ''வேண்டாம், வேண்டாம்'' எண்டுடுவள்.

இள:- இதைச் சொல்லுங்கோ. என்ன வாங்கியந்தியள்?

மணி:- உனக்கிப்ப அவசரமாகத் தேவைப் படுறது என்ன எண்டு சொல்லு?

இள:- இப்ப எனக்குத் தேவை ஒரு பவுண்டின் பேனை. உங்களுக்குக் கடிதத்திலை எழுதினனானல்லே! மறந்துட்டியளா?

மணி:- மறக்கேல்லை; நல்ல ஞாபகம் இருக்கு.

இள:- வாங்கேல்லையா?

மணி:- வாங்கியந்தனான்.

இள:- (மகிழ்ச்சியால் துள்ளி) ஆ! பேனை வந்துட்டுது. பவுண்டின் பேனை வந்துட்டுது!

மல:- பேனை வாங்கூறதிலையுள்ள அக்கறை, படிப்பிலை இல்லை.

இள :- (கோபமாக) என்ன நான் படிக்கிறேல்லையா?

மல:- எப்பவும் கிரிக்கெட்தானே! மஞ்ஞமண்ணுக் கட்டேலை ஒரு பாட் செய்து வைச்சிருக்கிறுன். அதையும் தூக்கிக்கொண்டு, பகல் முழுதும் உந்த வெய்யில் எல்லாம் குடிப்பன்!

இள:- என்ன, கிரிக்கெட் விளையாடுறனே? இஞ்சை வீட்டிலை எந்தநாளும் வேலை! விளையாட எங்கை நேரம் கிடக்கு?

மல;- நீதானே வீட்டிலை வேலை செய்து கொட்டுறனி!

இள:- (கோபமாக) என்னிட்டைத் தினமும் மாடு மாதிரி வேலை வாங்கிப்போட்டு, இப்ப நான் வேலை செய்யிறேல்லையாம்!

மல - அதுக்கென்ன நீயும் கொஞ்சம் வீட்டுவேலையைச் செய்யன்; அக்காவாலை தனிய எல்லாம் செய்ய முடியுமே?

இள;- நான் செய்பிறனுன் தானே! பின்னை உவ உப்பிடிச் சொன்னு-----

மணி:- (மலரைப் பார்த்து) இஞ்சா, நீ இளங்கோவைக் குற்றம் சொல்லாதை. அவன் இனி எல்லாம் செய்து தருவன்!

மல:- சரி, சரி. (உள்ளே போகிருள்.)

இள;- தாங்கோவன் பேனையை.

(மணிவண்ணன் உள்ளே சென்று பேனையை எடுத்துக்கொண்டு வந்து இளங்கோவிடம் கொடுக்கிறுன். இளங்கோ முகத்தில் மகிழ்ச்சிக்குறி தோன்றப், பேனையைத் திருப்பித், திருப்பிப் பார்க்கிறுன்....)

மணி:- பேனை வந்துட்டுது. இனிக் கவனமாப் படிக்க வேணும், என்ன?

இள;- (பேனையைப் பார்த்தபடி) ஓ. இனி நான் நல்ல வடிவாப் படிப்பன்!

மணி:- இந்த முறை எத்தினையாம் பிள்ளை?

இள;- பதினைஞ்சு.

மணி;- ஆ! அது - சரியில்லை.

இள:- அடுத்த சோதினேலை பாருங்கோவன், நான் எத்தினையாம் பிள்ளையாய் வாறனெண்டு!

மணி:- ஐஞ்சுக்குள்ளை வருவியே?

இள:- ஓ, கட்டாயம்! (பேனையைப் பார்த்து) இது பைலட் என்னண்ணை?.......— சோக்கான பேனை!

மணி;- யப்பான் பைலட். ஆறு ரூபா.

இள:- எங்கடை வகுப்பிலை எல்லாரிட்டும் பவுண்டின் பேனை இருக்கு; என்னிட்டை மட்டும் தான் இல்லை. சும்மா பீத்தல் பேனயளை வைச்சுக்கொண்டு, எனக்கவை நடப்புக் காட்டுறவை. பார் நான் நாளைக்குக் கொண்டு போய்க் காட்டுறன் அவைக்கு, யப்பான் பைலட்!—......

மணி!- பேனை கவனம் தெரிஞ்சுதே!

இள:- ஓ நான் நல்ல கவனமா வைச்சிருப்பன்.

மல:- (தேனீரை மணிவண்ணனிடம் கொடுத்து) ஓ. கவனந்தான்! அவன் அங்கினேக்கை போட்டுட்டுக் கிரிக்கட் அடிக்கப்போக, ஆரன் தூக்கிக்கொண்டு போயிடுவங்கள்!

இள:- எனக்குப் பேனை வந்தது அக்காப்பிள்ளைக்குப் பொறுமையா இருக்கு. சும்மா ஒவ்வொண்டைச் சொல்லிக் கொண்டு நிக்கிறு.

மல;- எனக்கொரு பொறுமையும் இல்லை! ஏன் நான் பொறுமைப்படவேணும்?

இள!- உனக்குப் பேனை வாங்கியரேல்லை எண்டுதான் —!

மல:— எனக்கேன் பேனையை?

இள;- ஓ. உனக்கேன் பேனையை? அடுப்பூதுற உனக்குப் பேனை என்னத்துக்கு?

மல:- (கண்கலங்கி) எனக்கும் படிக்கத் தெரியும்! அம்மா சாக, வீட்டுப்பிராக்குப் பாக்க ஆளில்லை எண்டு, அப்பா மறிச்சிராட்டா, இப்ப எச். எஸ். ஸி. படிச்சுக் கொண்டிருப்பன்! தெரியுமே?——...

மணி:- (தேனீரைக் குடித்தபின்பு) அம்மா செத்த பிறகு அக்கா தானேடா, தாய்க்குத் தாயா இருந்து, உன்னையும் பாத்து, வீட்டுப் பிராக்குகளையும் கவனிக்கிறது. அக்காவின்ரை அருமை உனக்குத் தெரியேல்லை! போடா, போடா, அக்காவை அழுவியாமல்!

இள:- (பேனையைப் பார்த்தபடி) அண்ணை, இந்தப்பேனைக்கு மை வாங்கியரேல்லையா?

மணி;- இல்லை, மறந்து போனன்.

இள;- அண்ணை பவுண்டின் பேனைமை சங்கக்கடேலை இருக்கு. போய் வாங்கியரட்டே? காசு தாறியளே?

மணி:- சரி, இந்தா (காசை எடுத்துக் கொடுக்கிறான். இளங்கோ பணத்தை வாங்கிக் கொண்டு ஓடுகிறான்.) அவன் சின்னப் பொடியன், அவனுக்கென்ன தெரியுப? சும்மா அவன் சொல்லுறத்துக் கெல்லாம் கண்ண கலங்கிக்கொண்டு நிக்கிறாய்!

மல:- சரி அண்ணை, நான் வாறன். (கிளாசைத் தூக்கிக்கொண்டு உள்ளே செல்ல எத்தனிக்கிறாள்)

மணி:- எங்கை போறாய்?

மல:- ராச் சாப்பாடு சமைக்க அடுக்குப் பண்ண வேணும்.

மணி:- நானும் வந்த நேரம் தொடக்கம் பாக்கிறன். நிக்க நேரமில்லாமல் ஓடித்திரியிறா! நானும் ஒரு அண்ணன் ஒரு வரியம் கொழும்பிலை இருந்துட்டு, வந்திருக்கிறன்; யாழ்ப்பாணத்திலை நிக்கப் போறதோ ஒரு கிழமைதான்! ஒரு கொஞ்ச நேரமெண்டா என்ன வந்திருந்து ஆறுத

லாக் கதைக்கிறியா? ...... பேசுரியா? ...... சிரிக்கிரியா? ......
ஏதோ பெரிய மனிசி மாதிரி 'அலுவல் பாக்கிறன், 'அலுவல் பாக்கிறன்' எண்டு ஓடித் திரியிருய்!

மல; (செல்லமாக) கதையைப் பாரன், கதையை! ஏதோ லண்டனுக்குப் போட்டுவந்தவர் மாதிரிக் கதை! கொழும்புக்குப் போனு என்ன? இன்னும் ஆறு மாதத்திலே திரும்பி வருவியள் தானே? ...... அண்ணை! வீட்டிலே அலுவற் பாக்க ஆர் இருக்கிறது? நான் தானே எல்லாத் தையும் செய்ய வேணும்.

மணி:- ஓ. அதுகும் சரிதான்! ...... அதிருக்க ......
இண்டைக்கொரு படத்துக்குப் போவமா?

மல:- இப்ப எனக்கென்னத்துக்கண்ணை படம்? வேணு மெண்டா நீங்கள் மட்டும் போய்ப் பாத்துட்டு வாங்கோ.

மணி:- நான் கொழும்பிலே படம் பாக்கத் தெரி யாமை, இஞ்சை வந்தனுனே?

மல:- அப்ப தம்பியைக் கூட்டிக்கொண்டு போங்கோ. நான் வரேல்லே.

மணி:- அவனுக்கு நான் படங்காட்ட வேணுமே? இன்னும் ஒரு வரியம் போனு, உங்களுக்குச் சொல்லாமலே போய்ப் பாத்துடுவன். நான் இப்ப கேட்டது உன்னைக் கூட்டிக் கொண்டு போகவல்லோ. நான் யாழ்ப்பாணம் வரேக்கையே நினைச்சுக் கொண்டு வந்தனுன், இந்தமுறை தங்கச்சியைக் கூட்டிக்கொண்டு போய், ரண்டு படமாவது காட்டவேணுமெண்டு. நீ என்னடா எண்டா, நடப்பு விடுருய்!

மல:- நான் நடப்பு விடேல்லே அண்ணை; வீட்டிலே இவ்வளவு சிலவுகளும், வேலையளும் இருக்கேக்கை எனக்கேன் படத்தை எண்டன்.

மணி:- (உருக்கமாக) தங்கச்சி! அதாலே தானே கேக்கிறன். சின்ன வயதிலே இருந்து கஷ்டப்பட்டு வளந் தனுங்கள்! அப்பா எப்பிடியோ தன்னுடைய சொற்ப வருமானத்திலே ரண்டு பேரையும் படிப்பிச்சுப் போட்டார்.

படிக்கிற காலத்திலே நாங்கள் நல்ல சீலே சட்டையை வாங்கிப் போட்டதில்லே; சுவையான சாப்பாடெண்டா என்னெண்டே தெரியாது! ஒரு நாளாவது படத்துக்கு, நாடகத்துக்கு, காணிவலுக்கெண்டு போனது கிடையாது!... — ...

மல:- அதுக்கிப்பென்ன? உதை எல்லாம் ஏனண்ணே சொல்லுறு?

மணி:- இவ்வளவு காலமும் தான் கஷ்டப்பட்டம். இப்ப நான் உழைக்கத் தொடங்கியிருக்கிறன். இனியாவது நாலிடங்களுக்குப் போய்ச், சந்தோஷத்தை அனுபவிப்பம்......—!

மல:- உங்களுக்கு வீட்டு நிலேவரம் தெரியாதண்ணே. கூப்பன் கடைக்குப் போன மாதக் காசு குடுக்கேல்லே. தீவாளிக்கு துணி வாங்கின காசிலே இன்னும் இருபத்தைஞ்சு ரூபா குடுக்க இருக்கு. —...—

மணி:- (உணர்ச்சி வசப்பட்டு, எழுந்து நின்று) கடன் எப்பதான் தீருது? கஸ்டம் எப்பதான் தொலேயுது? எல்லாத்தையும் தீத்துக் கொண்டு சந்தோஷத்தை அனுபவிப்பமெண்டா, அதுக்கிடையிலே நாங்கள் கிழண்டிப் போவம். தங்கச்சி! ..— ஒரு லட்ச ரூபா கையிலே இருந்தாலும் கஸ்டம் இருக்கத்தான் செய்யும். அதுக்கு ஒரே படியா மூக்காலே அழுறத்தை விட்டுட்டு, இருக்கிற ரண்டொரு நாளாவது சந்தோசமா இருக்கப் பாக்க வேண்டியது தான்!

மல:- எண்டாலும் வரவுக்கேத்த மாதிரித்தான் சில வழிக்க வேணும்.

மணி:- (கேலியாக) நீ நல்ல பட்டிக்காட்டுப் பொம்பிளே தான்! மற்றப் பெட்டையளெண்டா, படத்துக்குப் போவமெண்டு சொல்லி வாய் மூடமுன்னம், 'டிறெஸ்' பண்ணிக் கொண்டு வந்து நிப்பளவை!

மல:- (பொய்க் கோபத்துடன்) நான் ஒரு பட்டிக்காடுமில்லே! நான் பாஸ் பண்ணின சோதினே எஸ். எஸ். ஸி. தெரியுமா? –...–

மணி;- (குறும்பாக) என்ன? என்ன? இன்னெருக்காச் சொல்லு! என்ன பாஸ் பண்ணினனீங்கள்? எஸ். எஸ். ஸி. அப்ப தப்புத்தான்! நான் சொன்னது தப்புத் தான்!

மல;- கண்டபடி காசைச் சிலவழிச்சு, விதம் விதமான உடுப்புகளே வாங்கிப் போட்டுக்கொண்டு, வீட்டிலே இருக்காமல் உலாத்தித் திரிஞ்சா, நாகரீகமான பொம்பிளே! அடக்க ஒடுக்கமாக வீட்டிலே இருந்து, வீட்டுப் பிராக்குகளேயும் பாத்து, வருவாக் கேத்தமாதிரிச் செலவு செய்தா, பட்டிக்காட்டுப் பொம்பிளே!

மணி;- அது தான் நான் சொல்லீட்டனே, நான் சொன்னது தப்புத்தான் எண்டு! இன்னும் ஒருக்காச் சொல்ல வேணுமா? – ... – – (குறும்புச் சிரிப்புடன்) என்ரை தங்கச்சியைக் கட்டப்போறவன், ஆரோ பெரிய அதிஸ்டசாலி! அவனுக்கு ஒரு சிலவும் வராது!

மல;- சும்மா போங்கோ, உந்தக் கதையை விட்டுட்டு –– ...

மணி:- ஏன் பேசினு என்ன? அவவுக்கு வெட்கம் வந்துட்டுது கலியாணம் எண்ட உடனே... – .. ஏன் அண்ணனுக்கும், தம்பிக்கும், அப்பாவுக்கும் அவிச்சுப் போட்டுக் கொண்டு, நெடுக இஞ்சையா இருக்கப் போருய்? ஒரு நாளேக்குக் கலியாணம் செய்து கொண்டு, புருஷனுக்குப் பின்னலே போறவள் தானே, நீ!

மல;- அண்ணே! இப்ப உந்தக் கதையை நிப்பாட்டப் போறியளா? இல்லேயா? நீங்கள் உதையே பேசிக்கொண்டிருந்தா, நான் போறன்.

மணி:- சரி, நீ போகாதை; நானே போறன்!

[சுப்பரம்மான் வெளியே இருந்து வருகிருர்]

சுப்;- எங்கையடா தம்பி வெளிக்கிடுரு?

மணி:- முத்துவேலர் மாமா வீட்டை......... மகன்ரை படிப்புகள் சுகங்களைப்பற்றி அறிய ஆவலா இருப்பரல்லே!

சுப்:- திரு எப்பிடி, நல்லாப் படிக்கிறுனே?

மணி:- இன்னும் ஆறு மாதத்திலே சோதினை. நல்லாப் படிக்கிறுன்;

மல:- அவருக்குக் கிளாஸ் கிடைக்குமே?

மணி:- கட்டாயம்!

மல:- நீங்க கூட தொடந்து படிச்சிருந்தா இண்டைக்கு திருநாதனைப்போலே ஒரு பி. எஸ். ஸி. யாய் வரலாம்.........!

மணி;- உன்னையும், என்னையும் எஸ். எஸ். ஸி. வரேலே படிப்பிச்சதே, அப்பா எவ்வளவோ கஷ்டப்பட்டு! அதுக்கு மேலேயும் படிக்க எனக்கு ஆர் உதவி செய்யிறது? குடும்பத்தை எப்பிடிப் பாக்கிறது? நான் படிப்பை விட்டுட்டு உத்தியோகத்திலே சேர்ந்ததாலே, குடும்பமாவது ஒரு மாதிரி நடக்குது.

மல:- எங்களுடைய சுகத்துக்காக, நீங்கள் உங்களுடைய படிப்பைத் தியாகம் செய்துட்டியள்!

மணி;- இது தியாகமில்லே தங்கச்சி; என்னுடைய கடமை!

சுப்:- நீ உத்தியோகத்துக்குப் போனதாலே, இந்தக் குடும்பத்துக்கு மட்டுமா? திருநாதனுக்குமல்லோ ஆதரவாப் போச்சு! அந்த நேரத்திலே இருக்க இடம் குடுத்து ஆதரிச்சிராட்டா, பொடியன் அந்தரிச்சுப் போயிருக்கும்.......
காசு களஞ்சும், ஏதும் குடுக்கிறனியோ?.........

மணி;- சீச்சீ! காசொண்டும் அதிகம் குடுக்கிறேல்லே.
———ஏதும் குடுத்தாக் கைமாத்தாத்தான்.

சுப்:- குடுத்தா அதிலே என்ன தம்பி? அதை நான் வேண்டாமெண்டு சொல்லேல்லே. ஆனு எங்கடை நிலேயையும் யோசிச்சு, நடக்க வேணும்; (சோகமாக) நாங்கள்

ஏழையள்; இண்டைக்கு மற்றவைக்கு உதவக்கூடிய நிலேலை நாங்கள் இல்லை ...... இஞ்சை வீட்டிலே எத்தினையோ தேவையள் இருக்கு!... .. இனிச் சீதணம் தேடி, மலரையும் ஒரு இடத்திலே கட்டிவைக்க வேணும்......

மல:- எனக்கு நீங்கள் ஒரு சீதணமும் தரவேண்டாம்!

சுப்:- இந்தக் காலத்திலே சீதணம் வாங்காமை ஆரன் கட்டுருனே? சீதணம் இல்லாட்டா இருக்கவேண்டியதுதான்!

மல: ஆரன் கட்டினு என்ன? கட்டாட்டா என்ன? எனக்குச் சீதணம் சேத்து நீங்கள் கஷ்டப்பட வேண்டாம்!

மணி:- (குறும்புச் சிரிப்புடன்) அப்ப ஆரிட்டையோ சொல்லி வைச்சிருக்கிருளாக்கும், சீதணம் இல்லாமற் கட்டச் சொல்லி.

மல:- அண்ணை! நீங்கள் எனக்குச் சீதணம் தாறதாஞ ஆயிரம் ஆயிரமாத் தரவேணும். நீங்கள் இப்ப திருநாதனுக்குக் குடுக்கிற பத்து ரூபாயும், பதினஞ்சு ரூபாயும் சேர்ந்தா ஆயிரம் ஆயிரமாகப் போகுது? நீங்கள் அவருக்கு உங்களாலை இயன்ற உதவியைச் செய்யுங்கோ. அவராவது முன்னுக்கு வரட்டு!

சுப்;- நீ கொண்ணனுக்கு ஒரு படி மேலை நிக்கிரு, தாராளத்திலே! ...... நீ உவ்வளவு செய்யிரு - - - அவன் நாளைக்குச் சோதினை பாஸ் பண்ணி ஒரு பெரிய உத்தியோகம் எடுக்கட்டு———— பிறகு பார்!......

மணி:- அந்த நேரத்திலே எங்களை எல்லாம் மறந்திடுவனு?...... திருநாதனு?

சுப்:- பணமும் பதவியும் எவற்றை தலையையும் பழுதாக்கும்!

மணி:- அப்பா! எலும்பில்லாதது வெய்யிலிலை துடிச்சுப்போம்! பண்பாடும், நல்லுணர்ச்சியும் இல்லாதவனைத்தான் பணம் கெடுக்க முடியும்; மற்றவனை அசைக்க முடியாது!

சுப்;- டே தம்பி! நீ தத்துவம் பேசுறு; நான் உலக நடைமுறையைச் சொல்லூறன்! அவன்ரை பெரிய தகப்பனும் மாமியும் இருக்கினம்; நல்ல காசுக்காறர். அவையோடை திருநாதன் இனிக் கொண்டாடாமலே இருக்கப் போறுன்?

மல:- அவைதான் இப்ப கையை விரிச்சுட்டினமே! இந்த நேரத்திலே உதவாதவையோடை இனியென்ன உறவு?

சுப்: உதை விடக் கடும்பகையாய் இருந்த குடும்பங்கள்கூட ஒண்டுசேர்ந்திருக்கு. ஏழையளா இருக்கேக்கை, ஆளே, ஆள் தெரியாதது போலே தூரப்போறதும், பணம் வந்த உடனே கட்டிப்பிடிச்சுக் கொண்டாடுறதும் தானே உலக வழக்கம்! அவள் மங்களத்துக்குப் பொம்பிளைப் பிள்ளை இல்லேயே?

மணி:— ஒரே ஒரு பெட்டைதான்!

சுப்:— அப்ப கடைசிவரையும் விடாயினம், அவன் ஒரு நல்ல உத்தியோகம் எடுக்கட்டு; கலேச்சுப் பிடிப்பினம்,

மணி:— திருநாதன் மச்சாட்காறியைக் கட்டுவன் எண்டு சொல்லூறியளோ?

சுப்;— ஏன் கட்டமாட்டான்? ஒரு பிள்ளே; நல்ல சீதணம் குடுப்பினம். அந்தாளின்ரை உழைப்பு முழுக்க மேளுக்குத்தானே! இவன் மறுக்க என்ன காரணம் இருக்கு?

மணி:— அப்பா! நீங்கள் திருநாதனேச் சரியாப் புரிஞ்சு கொள்ளேல்லே...... பேசாதேங்கோ! ———

மல:- அவர் ஒரு நாளும் உதுக்குச் சம்மதிக்க மாட்டார்.—— நான் பந்தயம் பிடிக்கிறன்!

சுப்:- உனக்கெப்பிடித் தெரியும்?

மல:- இந்த ஊரிலே இருந்தவர்; இஞ்சை அண்ணேட்டை நெடுக வாறவர்; ஒரே பள்ளீலே படிச்சனுங்கள்! எனக்குத் தெரியாதே அவரை?

மணி:— அப்பா! திருநாதன் எனக்கொரு பிரதி உபகாரமும் செய்ய வேண்டாம். வேணுமெண்டா, அவன்

தன்ரை ஆக்களிட்டையே போய்ச்சேரட்டு. நான் ஒரு பல னையும் எதிர் பார்த்து அவனுக்கு உதவி செய்யேல்லை! கஸ்டப்படுகிற ஒரு நண்பனுக்கு உதவி செய்ய வேணு மெண்டுதான், என்னாலை இயண்டதைச் செய்யிறன்!

சுப்:- அவன் நல்ல பொடியன்; பிழைவிட மாட் டான் எண்டு தான் நானும் நினைக்கிறன்! ஆனா, இந்த மாதிரியும் போகக்கூடும் எண்டதையும் சுட்டிக்காட்டுறன். பொடியன் நல்லா வரட்டு! முத்துவேலரும் பாவம்! முட் டுப்பட்ட மனிசன்; பொடியன் நல்லா வரட்டு!

திரை

## காட்சி 3

இடம்: யாழ்ப்பாணம், முத்துவேலர் வீடு.

[வீட்டுத் தலைவாசலில் முத்துவேலர் ஒரு மண்வெட்டிக்குப் பிடி சீவி இறுக்கிக் கொண்டி ருக்கிறார். மணிவண்ணன் வருகிறான்.]

முத்:- (கையிலுள்ள பொருள்களை வைத்து விட்டு, எழுந்து நின்று) ஓ! தம்பி மணியே! எப்ப வந்தனி கொழும்பாலை?

மணி:- காலேலைதான் வந்தனான்.

முத்:- வீட்டிலை எல்லாரும் சுகம் தானே?

மணி;- ஓ! அவைக்கென்ன, நல்ல சுகமா இருக்கினம்.

முத்:- இரன் தம்பி; ஏன் நிக்கிறா? (இருவரும் வாங்கில் அருகருகே இருக்கின்றனர்.) ஏன் இப்ப வந்தனி? வரியப் பிறப்போடை வந்திருக்கலாம்; கோயிற் திருவிழாவும் வருது. ஏன் ஏதும் விஷேசமே?

மணி:- சாச்சா! அப்பிடி ஒண்டு மில்லை. ஊருக்கு வந்து கனநாளாப் போச்சு; லீவு இருந்துது; எடுத்துக் கொண்டு வந்தன்.

முத்:- கடைசியாத் தம்பியோடையல்லே வந்தனி. இப்ப கிட்டத்தட்ட, ஒரு வரியமாகுது—......— என்ன, ஆளிலே நல்லாக் கேட்டுப்போச்சு—......... சாப்பாட்டிலை குறைக்கிறுய் போலை.........

மணி:- எல்லாம் சாப்பிடுறதுதான்; எண்டாத் தெரியாதே? கொழும்பிலை கடையிச் சாப்பாடும் அப்பிடித்தான்.

முத்;- ஓம் தம்பி! அப்பிடித்தான் திருவனும் எழுதியிருந்தவன். கடையிச் சாப்பாடோ என்னவோ, திண்டு தள்ள வேண்டியது தானே!.........— அதுசரி தம்பி—......— திரு என்ன செய்யிறுன்? எப்பிடி இருக்கு படிப்பெல்லாம்?

மணி:- போன மாதம் தான் பாட்வண் சோதினை மறுமொழி வந்தது. நல்லாச் செய்திருக்கிறுர்.

முத்:- (மகிழ்ச்சி ததும்ப) ஆ! அப்பிடியா? திறமாப் பாஸ்பண்ணிப் போட்டானே?

மணி:- ஓ செய்திருக்கிறுர். ஆனு, இது இடைப் பரீட்சைதானே! இறுதிப் பரீட்சைக்கு இன்னும் ஆறு மாதம் இருக்கு. அதெல்லாம் அவர் நல்ல திறமையாச் செய்வர்!

முத்:- (உருக்கமாக) என்னவோ தம்பி, அந்தக் கடவுள் கண்திறக்கவேணும்! கையிலை இருந்ததெல்லாம் முடிஞ்சுபோச்சு; வீடுவளவும் ஈட்டுக்காசு வட்டி வளந்து கொண்டுபோகுது! நான் என்ன கஷ்டப்பட்டாலும் பறவாயில்லை; என்ரை பிள்ளை நல்லா வந்துடவேணும்!

மணி:- நீங்க ஒண்டுக்கும் யோசியாதேங்கோ; அவர் நல்ல கவனமாப் படிக்கிறுர்! இனி நான்தானே பக்கத்திலை இருக்கிறன், தேவையானதைச் செய்து குடுக்க!

முத்:- நீ இருக்கிறு எண்ட துணிவிலைதான் தம்பி, நான் நிம்மதியா இருக்கிறன்! இஞ்சை பார்! நான் தம்பிக்குத் தண்ணியை வென்னியை வைச்சரேல்லை; கதைச்சுக் கொண்டிருக்கிறன்.

மணி:- சாச்சா, நீங்க சும்மா இருங்கோ. எனக்கிப்ப ஒண்டும் வேண்டாம்; இப்பதான் வீட்டிலை தண்ணி குடிச்சுட்டு வாறன்.

மூத்;- அது உங்கடை வீட்டிலேயல்லோ தம்பி! எங்கடை வீட்டை வந்ததுக்கு நாங்கள் தரத்தானே வேணும். (கூப்பிடுகிருர்) டேய் தம்பி! தம்பி!

[மணாளன் வருகிருன்.]

இஞ்சைவா, தம்பி மணியல்லே வந்திருக்கிருர். இருந்து கதையன் தம்பியோடை; நான் தண்ணி வைச்சுக்கொண்டு வாறன். (வீட்டினுள் செல்கிருர்.)

மணா:- ஓ, எப்பிடி? எப்ப வந்தியள்? (வாங்கில் இருக்கிருன்.)

மணி:- காலேலேதான் ............ இப்ப என்ன தம்பி செய்யிறு? உத்தியோகம் ஒண்டுக்கும் அப்பிளிக்கேசன் போடு றேல்லேயே?

மணா:- எல்லாம் போட்டிருக்கிறன், உங்கை ஒரு பத்துப் பதினேஞ்சுக்கு! ஒரு மறுமொழியையும் காணேல்லே!

மணி:- ஏது இருந்தாப்போலே உத்தியோகத்திலே இறங்கிட்டீர்?

மணா:- ஒரு சதத்துக்கு உழைப்பில்லே; வரும்படி இல்லே! பசி வயித்தைக் கிள்ளுது! இருக்கிற பத்துப்பரப்பு வயலிலே இருந்து வாறது, எந்த மூலேக்குக் காணும்? அந்தப் புண்ணியவாளன் ஐம்பது சதத்துக்குத்தாற கூப்பனரிசிலே, வயித்தைக் கழுவூறம். இந்த நிலேலே உத்தியோகம் தேடாமல் எப்பிடி இருக்கிறது?

மணி:- அதுதானே பாத்தன்! அடுக்கு மொழியளேயும் காணேல்லே! உத்தியோக வேட்டேலே இறங்கின உடனே அந்த மொழியளேயும் கை விட்டுட்டீர் போலே! ............

மணா:- காரசாரமான வசனங்கள் பேசூறத்துக்கும் உடம்பிலே ஒரு சக்தி இருக்கவேணும்! அதுக்குத் தினமும் சத்துள்ள உணவு சாப்பிட வேணும். வெறும் கூப்பனரிசியைக் கூப்பனரிசியைத் திண்டா, உடம்பிலே என்ன சக்தி வரும்?——கத்தமுடியுமே?———

மணி;- அப்ப, இப்ப கதையளும் எழுதூறேல்லே?

மணு:- எழுதுறது தான்! முந்தியைப் போலை, தொகையா வேகமா இல்லை.........

மணி:- ஏன் தம்பி, எழுதின தொண்டும் சரி வரேல்லையே?

மணு:- நூற்றுக் கணக்கிலை எழுதினன்! கடைசியா ரண்டோ மூண்டோ பத்திரிகேலை வந்துது. இவ்வளவு சஷ்டப்பட்டு எழுதிக்கண்ட சுகம் இது! (பெருமூச்சுவிட்டு) மலையைகல்லி எலியைப் பிடிச்ச கதைதான்!

மணி;- உமக்குது இவ்வளவு காலமும் விளங்காமற் போச்சு! இலக்கியம் படைக்கிறதெண்டாச் சும்மா சுலபமான வேலையா? அது தம்பி, அதுக்கெண்டே பிறக்க வேணும்! அவங்களுக் கென்ன? தண்ணி ஊறுறது போலை கற்பனை சுரந்துகொண்டே இருக்குது; எழுதித் தள்ளுறுங்கள்! அதை விட்டுட்டு, எல்லாரும் எழுதுறதெண்டா முடியுமா? நாங்கள் சும்மா ரண்டொரு புத்தகத்தைப் படிச்சுச் சோதினையைப் பாஸ் பண்ணினுப்போலை, இலக்கியம் படைக்கேலாது!

மணு:- ஆ!.... அப்பிடிச் சொல்லக்கூடாது! உணர்ச்சி வேகமும், மொழியைக் கையாளும் ஆற்றலும் பிறப்பிலேயே அமைவனவாக இருக்கலாம். ஆனு, முயற்சிதான் அந்தத் திறமையனை வளர்த்து உச்சநிலையடையச் செய்யிறது! கத்தி பாவிக்கப் பாவிக்கத்தான் கூராகும்! அதைச் சும்மா வைச்சா, நல்ல உருக்கானுலும் கறள்தான் பிடிக்கும்!

மணி:- அப்ப, இன்னும் எழுத்தை விடுறேல்லை எண்டு தான் நிக்கிறீர்!.......

மணு:- மனிதனிடத்திலை ஒரு திறமை இருந்தா அதைக் கட்டாயம் வளர்க்க வேணும்! தனக்காக மட்டுமல்லாமல், இந்த உலகத்துக்காகவும் அவன் அதைச் செய்யவேணும்!

மணி:- தத்துவ ஞானியள் மாதிரிப் பேசுறீர்!

மணு:- அதிகம் வாசிக்கிறதாலை ஏற்பட்ட கோளாறு யிருக்கலாம்!

10

மணி:- உப்பிடிச் சும்மா எழுதி எழுதி வைச்சுத்தான். என்ன சுகம்? ... ...

மணு:- அடுக்கி, அடுக்கி வைப்பம்! அதாலை யாருக்கு என்ன நட்டம்? ... ... என்னுடைய கையிலும் ஒரு காலத்திலை காசு வந்தா — வருமெண்டுதான் நினைக்கிறன் — அதுகளை நானே நூல்களாக வெளியிடுவன்!

மணி:- பாத்திரோ! ... ... அங்கையும் பணம்தான் தேவை. பணம் இருந்தா தோல்வியையும் வெற்றியாக்கலாம்.

மணு:- எல்லாத் தோல்வியளையுமல்ல, பல தோல்வியளை! ... ... ...

மணி:- திறமை உள்ளவன் வெற்றி பெறலாம்! உம்முடைய கேசையே எடுத்துக் கொள்ளுமன் ... ... ...

மணு:- என்னுடைய நூல்கள் வெளிவருகிற போது தான், என்னுடைய திறமையை அறியும், உலகம்!

மணி:- எல்லாத்துக்கும் அடிப்படை காசு! கெதியா ஒரு உத்தியோகத்தைத் தேடும்!

மணு:- அந்த முயற்சிலைதான், நான் மும்முரமா ஈடு பட்டிருக்கிறன்.

மணி:- நீர் அப்ப எஸ். எஸ். ஸி. யைப் பாஸ் பண்ணின நேரத்திலை, 56க்கு முன்னம் ஏதாவது எடுத்திருக்கலாம். இப்ப அவங்கள் 'தனிச்சிங்களச் சட்ட'மும் பாஸ் பண்ணிப் போட்டாங்கள்! இனித் தமிழ்ப் பொடியளுக்கு எங்கை உத்தியோகம்? சிங்களப் பொடியளுக்குத்தான்!

மணு:- நான் சொல்லூறன்: தமிழருக்கும் உத்தியோகமில்லை; சிங்களவருக்கும் இல்லை!

மணி:- ஏன், சிங்களவருக்கு என்ன குறை?

மணு:- 'தனிச் சிங்களச் சட்டம்' பாஸ் பண்ணின உடனை, சிங்களவருக்கு வேலைவாய்ப்புப் பெருகும்; வேலை இல்லாப் பிரச்சினை தீர்ந்துபோம், எண்டுதானே சிங்கள மக்கள் எதிர் பார்க்கினம்! ஆனா! தமிழருக்கு ஒரு உத்தியோகம்கூடக் குடுக்காமல், எல்லா உத்தியோகங்களையும்

சிங்களவருக்கே குடுத்தாலும், அவையளுக்குக் கூடுதலாகக் கிடைக்கப்போறது ஒரு சில ஆயிரம் உத்தியோகங்கள்! நாட்டிலே வேலை இல்லாதவர் தொகையோ லட்சம்! ...... லட்சம்!!. - அப்ப மிச்சம்! ——— இது கடைசியா கிளி இலவுகாத்த கதையாத்தான் முடியும்!

மணி:- அப்பென்ன, சிங்களச் சட்டத்தாலே அவங்களுக்கும் சுகமில்லை எண்டு சொல்லுறீரா?

மணு:- இல்லை, அது பிரச்சினையளைத் தீர்க்காதெண்டு சொல்லுறன்! —— சுதந்திர நாட்டிலே, சிங்கள மக்களுடைய தேவையள் எல்லாத்துக்கும் சிங்களமொழி உபயோகிக்கப் படவேணும்; அதைப்போலே தமிழ் மக்களுடைய தேவையளுக்குத் தமிழ்மொழி பாவிக்கப்படவேணும்! அது நீதி! —— ஆனா, வேலைவாய்ப்புப் பெருகவேணுமெண்டா, நாட்டின் பொருளாதாரம் வளரவேணும்! அப்ப சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர் எல்லாருக்கும் உத்தியோகங்கள் கிடைக்கும்!

மணி;- உந்த ஞானோதயம் உமக்கும் எனக்கும் வந்து என்ன சுகம்? ஆட்சிப் பீடத்திலே உள்ளவங்களுக்கல்லோ வரவேணும்!

மணு;- இந்த ஒப்பந்தத்தாலே, ஒருவேளை இப்போதைக்குக் கொஞ்சத் தமிழருக்கு வேலை கிடைச்சாலும் கிடைக்கும்.

மணி;- எது? 'பண்டாரநாயக்கா செல்வநாயகம் ஒப்பந்தத்'தைச் சொல்லுறீரா?

மணு:- அதிலே, தமிழ்ப் பகுதியளிலே நிர்வாக மொழி தமிழாயிருக்கும் எண்டு சொல்லியிருக்கு. அதுக்காகக் கொஞ்சத் தமிழரையும் உத்தியோகங்களிலே சேர்க்கத்தானே வேணும்!

மணி:- ஒப்பந்தங்கள் எழுதலாம்; ஆனா, அதுகள் அமுல் நடத்தப்பட்டாத்தானே! உலகத்திலே எழுதப்பட்ட ஒப்பந்தங்களிலே, கிழிச்செறியப் பட்டதுகள் நூற்றுக்குத் தொண்ணூறு வீதம்! வரலாற்றைப் படிச்சாத் தெரியும்!

மரு:- நான் அரசாங்க உத்தியோகத்தை நம்பி இருக்கேல்லை! உழைக்கிறத்துக்கு ஏதோ ஒரு வழி தேடுறன்!

மணி;- அப்பென்ன கமம் செய்யப் போறீரா?

மரு:- அதுக்கும் பணம் வேணுமே! முதலில்லாமல் ஒண்டும செய்யேலாது! காசில்லாத நிலை, கையையும் காலையும் கட்டிப்போட்டதுபோலை இருக்கு!

மணி;- அப்பென்ன செய்ய யோசிக்கிறீர்?

மணி;- இப்போதைக்கு ஒரு அச்சுக்கூடத்திலை சேர்ந்து, வேலை பழகப்போறன். நான் பிற்காலத்திலை செய்ய எண்ணியிருக்கிற வேலையளுக்கும் இது உதவியாயிருக்கும். வேறை வேலைவந்தா, பிறகு பாப்பம்......

மணி:- அதுதான் சரியான முடிவு! ஏதோ ஒரு தொழிலிலை இறங்கும்!

மணி;- அது சரி, அண்ணற்றை படிப்புகள் எப்பிடியிருக்கு?

மணி;- பாட் வண் சோதினை நல்லாச் செய்திருக்கிறூர். ஃபைனல் சோதினைக்கு இன்னும் ஆறுமாதம் இருக்கல்லே; நல்லாச் செய்வர்!

மணி:- கிளாஸ் கிடைக்குமா?

மணி:- கடைசி செக்கன்ட் கிளாசாவது அடிப்ப ரெண்டுதான் நினைக்கிறன்.

மணி;- அப்ப உத்தியோகம் உடனடியாக் கிடைக்கும்!

மணி:- ஃபைனல் முடிஞ்ச உடனே, அங்காலை சிவில் சேவிஸ் எக்சாம் இருக்கு. கிளாஸ் கிடைச்சா, சிவில் சேவிஸிலும் ஒரு சான்ஸ் தட்டும்.

முத்:- (வந்துகொண்டே) என்ன தம்பி, சிவில் சேவிஸ் எண்டனி? திரு சிவில் சேவிஸ்சிலை சேரப் போறுஞே?

மணி:- இல்லை, இல்லை! பி. எஸ். ஸி. சோதினையிலை கிளாஸ் கிடைச்சா, சிவில் சேவிஸ் சோதினேலும் சான்ஸ் கிடைக்கும் எண்டன்.

முத்;- இந்தா தம்பி, தண்ணியைக் குடி. (தேனீரைக் கொடுக்கிறார்.) என்ரை பிள்ளை சிவில் சேவிசாயும் வர வேண்டாம், ஒரு சேவிசாயும் வரவேண்டாம்! ஒரு நல்ல உத்தியோகம் எடுக்கட்டு; அது போதும்! அதுக்குப் பிறகு உவங்களை எல்லாம் என்ன செய்யிறன் எண்டு பாக்கட்டு! இவ்வளவு காலமும் —...... என்னை, என்ரை சொந்தக் காறருக்குக் கண்ணிலை படேலை! என்னுடைய சகோதரங்களுக்கே நான் அந்தஸ்துப் போதேல்லையாம்...— — மற்றவையைப் பற்றி ஏன் பேசுவான்? எல்லாரும் வரட்டு; இனி எப்பிடி சொந்தங் கொண்டாடப் போகினம் எண்டு பாப்பம்?

மணி:- அவை ஏனப்பா எங்களிட்டை வருகினம்? நாங்களும் அவேட்டைப் போகத் தேவையில்லை. இதுவரை காலமும் இருந்த மாதிரியே இருப்பம்.

முத்:- எப்ப தம்பி கொழும்புக்குப் பயணம்?

மணி:- வாற சனிக்கிழமை போறன். ஏன் ஏதாவது சொல்ல வேணுமே மகனுக்கு? (தேனீர் குடிக்கிறான்)

முத்;- சா, அப்பிடி ஒண்டுமில்லை. கொஞ்சம் நல்லெண்ணை தாறன்; குடுத்திடு. இச்சா, நான் சொன்ன விஷயங்களொண்டையும் அவனோடை பேசிப்போடாதை தம்பி! நாங்கள் கஷ்டப்படப் பிறந்தனுங்கள் கஷ்டப் படுறம்! இதுகளைச் சொல்லிப் பிள்ளேன்ரை மனதைக் குழப்பக் கூடாது!

மணி:- இல்லை, இல்லை; நான் சொல்லமாட்டன்! ஆனா, அவருக்கு உந்தக் கடன் விஷயம் எல்லாம் தெரியும் தானே! அப்ப நான் வரப்போறன். (எழுந்து நின்று) தம்பி! அண்ணருக்கு என்ன சொல்ல! மருளன் இப்ப ஆள் மாறீட்டார்; உத்தியோகங்களுக்கு அப்பிளிக்கேசன்கள் போடுறார், எண்டு சொல்லூறன்......

மணி;- ஒரு பத்துப் பதினைஞ்சுக்குப் போட்டிருக்கிறன் எண்டு சொல்லிவிடுங்கோவன்.

மணி:- (சிரிக்கிறான்)

திரை

# உறுப்பு IV

## காட்சி 1

இடம்: கொழும்பு, சண்முகம்பிள்ளை வீடு.

[சண்முகம்பிள்ளையும், மங்களமும் வீட்டு முன் ஹோலில் இருந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள்.]

மங் :- இஞ்சாருங்கோ! மெய்தானே? எங்கடை திருநாதன் பி. எஸ். ஸி, ஃபேஸ்ட் கிளாசிலை பாஸ் பண்ணியிருக்கிறானாம்!

சண் :- (புன்முறுவலுடன்) ஃபேஸ்ட் கிளாஸ் எண்டாப்போலை, எங்கடை எண்டு உரிமை கொண்டாடுறாய்! அது றிசல்ட் வந்து இப்ப எத்தினை நாளாச்சு? சோதினை முடிஞ்ச நாட் தொடக்கம் யூனிவேசிட்டிலையே வேலை செய்யிறானாம், 'டெமொன்ஸ்ரேற்றரா'க!

மங்:- (ஆச்சரியப்பட்டு) என்ன வாசிற்றீலையோ?—

சண்:- என்ன வாசிற்றீலையோ எண்டு வாயைப் பிளக்கிறாய்! அது மட்டுமே? பொடியன் சிவில் சேவிஸ் சோதினையும் எடுக்கப்போறானாம்; அதிலும் எடுபடக் கூடும்!

மங்;- பாத்தியளே காலத்தை! ...... சா!——— நாங்கள் அந்த நேரத்திலை அவனை இஞ்சை வைச்சிருந்திருக்க வேணும்! அவன் எங்களோடையே இருந்திருந்தா————— இப்ப?———

சண்:- (கிண்டலாக) "இருந்திருந்தா" எண்டு வாயூறாறாய். அப்ப கலைச்சுப் போட்டு இப்ப வாயூறி என்ன சுகம்? சரி வைச்சிருந்தா?———

மங்:- இருந்தா என்ன? இப்ப பிள்ளைக்கு மாப்பிளை தேடித்திரியிற வேலை இல்லை!

சண்:- நீ தானே, அப்ப கொடுக்கிழுத்துக் கட்டிக் கொண்டு நிண்டு, அவனை அனுப்பி வைச்சது. 'உன்னை வைச்சிருக்க எங்களுக்குச் சிலவுக்குக் கட்டாது. வீட்டிலை இருக்க இடமில்லை' எண்டு. அதுக்கு இப்பேன் அழுறாய்

மங்!- இஞ்சாருங்கோ! நான் சொல்லுறத்தைக் கேளுங்கோ! (குழைவாக) இப்பவும் ஒண்டும் கெட்டுப் போகேல்லை. பொடியன் உங்கை கொழும்பிலை தானே நிக்கிறன். போய் ஒரு மாதிரிக் கதைச்சுக் கிதைச்சு, வீட்டை கூட்டியாருங்கோ!

சண்:- நீ ஏன் அரேலை சீலை கட்டியிருக்கிறாய் எண்டு கேக்கிறன்? உனக்கு வெட்கம், ரோசம், மானம் எண்டது மருந்துக்குமில்லை! காசு உத்தியோகம் எண்டாப் போதும்! நாங்கதான் இப்ப வெட்கம் ரோசமில்லாமல் போய், வரச் சொல்லிக் கேட்டாலும், அவன் வருவனே?

[பண்டா வந்து சற்றுப் பின்னால் நின்று அவர்களது கதையைக் கவனிக்கிறான்.]

மங்:- அதெல்லாம் வருவன்; நீங்க போய்க் கேளுங்கோ. என்ன கதைக்கிறதெண்டும் நானே சொல்லித்தாறன். ''கனநாளாக் காணேல்லை; சும்மா கதைக்க வந்தனான்!'' எண்டு சொல்லிக் கதையைத் தொடங்குங்கோ. வரேக்கை, ''ஏன் தம்பி எங்கவீட்டுப் பக்கமும் இடைக்கிடை வந்துபோனா என்ன?'' எண்டுட்டு வாருங்கோ. பொடியன் கட்டாயம் வருவன்! வந்தா,———— மிச்ச வேலையை நான் பாத்துக் கொள்ளுறன்!

சண்:- ஓ! அதெல்லாம் நீ வடிவாச் செய்வா எண்டு எனக்குத் தெரியும். ஆனா, என்னாலை உதிலை ஒண்டும் செய்யேலாது! போய்ச் சொல்லுற வேலையையும் நீயே பார்!

மங்!- ஓ, நான் அந்த வேலையைப் பாக்கிறன்; நீங்க போய்ப் பெட்டைக்கு மாப்பிளை தேடுற வேலையைப் பாருங்கோ!——— (குரலைத் தாழ்த்தி) இஞ்சாருங்கோ! வெளியிலை மாப்பிளை பாத்துக் குடுக்கிறதுக்கு, ஐம்பதாயிரம், லட்சமெண்டு வைச்சிருக்கிறியளே? அப்பிடிக் குடுத்தாப் போலை தான் இந்த மாதிரிப் படிப்போடும், உத்தியோகத்தோடும் மாப்பிளை கிடைக்கப்போகுதே?

சண்:- அதுக்காக, மானம், ரோசம் இல்லாமல் நடக்கச் சொல்லுறியே?————

மங்:- (கோபமாக) பின்னைச் சரி, நீங்க உங்கடை மானம், ரோசத்தைக் காப்பாற்றுங்கோ! ஆனு ஒண்டு சொல்லிப்போட்டன்; சாப்பிட்டுச் சாப்பிட்டுப்போட்டு வீட்டிலே சும்மா இருக்கேலாது! இப்பவே பிள்ளைக்கு மாப்பிளே தேட வெளிக்கிட்டிட வேணும்!

சண்;- (எழுந்து நின்று) சரி, உன்ரை உத்தரவுப் படியே போய்ப், பாத்துக்கொண்டு வாறன்.

மங்:- என்ன பாக்கப் போறியள்?

சண்:- உன்ரை பிள்ளைக்கு மாப்பிளே!

மங்:- சும்மா விளையாட்டை விட்டுட்டுச் சொல்லுங்கோ! எங்கை போறியள்?

சண்:- விளையாட்டோ? வயது ஐம்பதுக்கு மேலே—— இனி என்ன விளையாட்டு? (வெளியே போக எத்தனிக்கிருர்.)

மங்:- எங்கை போறியள் எண்டு சொல்லீட்டுப் போங்கோவன்.

சண்:- (திரும்பிப் பார்த்து) ஒபீசிலே கொஞ்ச வேலே இருக்கு. இண்டைக்கு ஓவடைம் செய்ய வேணும். வர ஒன்பது மணியாகும். (போகிருர்.)

[மங்களம் யோசித்துக் கொண்டிருக்கிருள். அவளது முகபாவம் அடிக்கடி மாறுகிறது. சில விநாடிகளில், வசந்தி வீட்டினுள் இருந்து வருகிருள்.]

வச:- மம்மி! டடி எங்கை போருர்?

பண்:- (முன்னுக்கு வந்து) டடி, நீங்கலுக்கு ஒறு மாப்பிலே பாக்கறதுக்த போறது!

வச:- பார் மம்மி இவனே! இவனே விடவிடக் கதை கூடுது.

மங்:- டேய், சும்மா இரு! உப்பிடியே பிள்ளையோடை பேசூறது?

பண்:- நாங் பொய் சொல்லி இல்லே! நோணு சொல்லறது தங்கெச்சிக்கி ஒறு மாப்பிலே பாக்கோணும் சொல்லி. அப்ப மாத்தையா, மாப்பிலே பாத்துட்டு வாறங் சொல்லி போறது.

வச:- சொல்லு மம்மி! டடி எங்கை போறூர்?

மங்:- ஓபீசுக்கு ஓவரைம் செய்யப் போறூர்; வர நயினுகுமாம்.

வச:- அப்ப நான் ஒரு ஷோவுக்குப் போகட்டா மம்மி?

மங்:- சும்மா இரு பிள்ளை எந்த நாளும் உனக்குப் படம். டடி அறிஞ்சாப் பேசப்போறூர்.

வச:- டடி வாறத்துக்கு முந்தி நான் வந்திடுவன்!

பண்:- அங்கே யாரோ வாறது. ஆ!...— சின்ன தொரே தாங் வாறது! சின்ன தொரேதாங் வாறது!! (மகிழ்ச்சியால் துள்ளிக் குதிக்கிறுன்.)

மங்:- (பரபரப்புடன் எழுந்து நின்று) ஆர் திருநாதனே? கும்பிடப்போன தெய்வம் குறுக்கையல்லோ வருகுது! (வாயெல்லாம் பல்லாக இளித்து) வா தம்பி வா!

பண்:- (சிரித்து) நோணு இப்ப நீங்கலுக்கி தம்பி சொல்லறது. இப்ப காலங் எல்லாங் மாறி போச்சி!

வச:- இந்தச் சோபாவிலே இருங்கோவன் அத்தான்!

பண்:- (மெதுவாகச் சிரித்து) அத்தாங்!......— அத்தாங்!!......— நோணு தம்பி சொல்லறது! தங்கெச்சி அத்தாங் சொல்லறது! மிந்தி ஒறு நாலுங் தங்கெச்சி ''மிஸ்டர் நாதங், மிஸ்டர் நாதங்'' அப்பிடி சொல்லறது. சின்ன தொறே இப்ப ஃபேஸ்ட் கிளாசிலே பாஸ் பண்ணிட்டு வாறது; தங்கெச்சி அத்தாங் சொல்லறது!

வச:- என்ன பகிடி பண்ணூறு? அவர் எனக்கு அத்தான்தானே! மாமாவுடை மகனை அத்தான் எண்டு சொள்ளாமை, அண்ணை எண்டே சொள்ளூறது?

[திருநாதன் சோபாவில் இருக்கிறான். மங்களம் அதன் பக்கத்தில் உள்ள கதிரையில் இருக்கிறாள்.]

பண்:- நீங்கலுக்கி மட்டுங் அப்புடி இல்லே! இந்த லோவத்திலே, சல்லிகாறங் எல்லாங் அப்பிடிதாங்! நமக்கி திங்கறதுக்கி இல்லாமே கெடக்கறது—... அந்த நேறத்திலே அவங் ஒன்டுங் தாறது இல்லே! நமக்கி சல்லி வாறது; அப்ப அவங் வந்து சொல்லறது ''நீ நம்மடாள்; நமக்கி தாங் சொந்தங்'' அப்புடி.

மங்;- என்ன தம்பி, உடம்பிலை நல்லாக் கேட்டுப் போச்சு! ...... உடம்பைக் கவனியாமை........

திரு:- சும்மா சாப்பிட்டுச், சாப்பிட்டுப் போட்டு நித்திரை கொண்டா, உடம்பு எருமை மாடு மாதிரி வளரும்! படிப்பு ஆராய்ச்சியிலும் மூளையை விட்டா, உடம்பு மெலியும் தானே!

மங்;- வரேக்கை மாமாவைக் காணேல்லையே? இப்பதான் வெளியிலை போறார்.

திரு:- (எழுந்து நின்று) அவர் வீட்டிலை இல்லையே? நான் வந்ததே அவரைக் காணத்தானே!

மங:- (எழுந்து திருநாதனுக்குக் கிட்டச் சென்று) இரு தம்பி இரு! கனநாளைக்குப் பிறகு வந்திருக்கிறாய்; எவ்வளவு கதைக்க இருக்கு!———

[திருநாதன் மீண்டும் இருக்கிறான்.]

தம்பிக்கு என்ன தண்ணி கொண்டர? ஓவலோ, கோப்பியோ அல்லது—...—

வச:- உனக்குத் தெரியாது மம்மி! நீ இரு. (திருநாதனைப் பார்த்து) என்ன வேணும் அத்தான்? கூல் டிறிங்ஸ் ஏதும் கொண்டு வரட்டே?

திரு:- வரேக்கை கடேலை ரீ குடிச்சுட்டுத்தான் வாறன்.

மங்:- கடையில் ரீயும், வீட்டு ரீயும் சரியே தம்பி? நான் ஒண்டு போட்டாறன்.

திரு:- இல்லை, இப்ப மூண்டு வரியமாக கடையித் தேத்தண்ணியையே குடிச்சுக் குடிச்சுப் பழகி, எனக்கு இப்ப, வீட்டு ரீயை விடக் கடையில் ரீ தான் நல்லா யிருக்கு!

மங்;- சும்மா இரு தம்பி, பிள்ளையோடை பேசிக் கொண்டு. ஒரு நிமிசத்திலை வந்துடறன். (வசந்தியைப் பார்த்து) பிள்ளை என்ன வெட்கப்படுறாய்; (சோபாவைக் காட்டி) இதிலை இருந்து அத்தானோடை கதையைப் பேசு.

[மங்களம் வேகமாக உள்ளே போகிறாள். வசந்தி சோபாவின் நடுவில் இருக்கிறாள். திருநாதன் சற்று ஒதுங்கி இருக்கிறான்.]

வச;- அத்தான் இப்ப எங்களைக் கவனிக்கிறதே இல்லை; இந்தப் பக்கமே வாறதில்லை!

திரு:- இதென்ன நீங்கள் சொல்லுறது? நான்......... நான் ---- (நையாண்டியாகச் சிரித்து,) உங்களுடைய பணமென்ன .....? வீடென்ன .....? வாசலென்ன .....? நாகரீகமென்ன .....? அந்தஸ்தென்ன.....? நான் ஒரு ஏழை .....; உங்களைக் கவனிக்கிறதா? உங்களுடைய தய வல்லோ எனக்கு வேணும்!

வச:- பாரன் பண்டா அத்தான்ரை கதையை! பி. எஸ் ஸி. ஃபேஸ்ட் கிளாசிலை பாஸ் பண்ணி இருக்கிறார். நாளைக்கு ஒரு ஸ்ராஃப் ஒஃபிசரா வரப் போறார்..... தான் ஏழையாம்! அத்தானுக்குப் பகிடி!

பண்:— தங்கெச்சி சும்மா சும்மா ''அத்தாங் அத்தாங்'' சொல்லறது. தொறே இப்ப பெறிய உத்தியோகந்தாங் எடுக்க போறது. அதுதாங் தங்கெச்சி ''அத்தாங் அத்தாங்'' சொல்லறது!

வச:- இஞ்சை நிண்டு குளப்பாமல், சும்மா போய்ச் சமைக்கிற வேலையைப் பார்.

பண்:- நமக்கி இனி அந்த வேலே சறி இல்லே! —... இப்ப சின்னதொறே ஒறு கார்தாங் எடுக்க போறது; அது றைவிங் பண்ணற வேலேதாங் இனி நமக்கி!

வச:- உன்னே றைவரா வைச்சா, இஞ்சை சட்டி பானேயை உடைக்கிறமாதிரி காருலே ஆரையன் மோதிச் சாகக்கொள்ளிப்போடுவா. பிறகு அத்தான் ஒஃபீசுக்குப் போறதுக்குப் பதில், கோட்டுக்கல்லோ போகவேணும்.

பண்:- நீங்கலுக்கி தெறியாது. அது அப்புடி இல்லே! நாங் றைவிங் பண்ணி போய் ஒறு ஆலுக்கு அடிக்கறது. அந்த ஆல் வுலுந்து சாகறது. அந்த நேறத்திலே, நாங் எறங்கி ஓடறது. அப்ப பொலீஸ் சறி, யார் சறி புடிக் கேலாதுதானே!

[மங்களம் ஒரு ரிறேயில் பிஸ்கட்டுகளும் ரீயும் கொண்டு வருகிருள்.]

மங்:- தம்பி, இந்தாரும்; சாப்பிடும்!

திரு: இருக்கட்டும்; வையுங்கோ!

மங்:- (பக்கத்தில் உள்ள ரீபோயில் வைத்து விட்டுக் கதிரையில் இருந்து) இவ்வளவு காலமும் படிப்போடை போட்டுது. இனியாவது உடம்பைக் கொஞ்சம் கவனிக்க வேணும். கடைச் சாப்பாடுதான் உப்பிடி. இனிச் சொஞ்ச நாளைக்கெண்டா என்ன, வீட்டிலே இருந்து சாப்பிட வேணும். அப்பதான் உடம்பு தேறும்!

பண்:- நோஞு இப்ப சொல்லறது, தொறேக்கி ஒடம்பு கெட்டுபோச்சு சொல்லி. மிந்தி ஒறு நாலுங் சொல்லறது, "நீங்கலுக்கி மிச்சங் சாப்படறது; நாங்கலுக்கி அப்பிடி குடுக்க சல்லி இல்லே", சொல்லி.

திரு:- நான் நித்திரை முழிச்சுப் படிக்கிற காலத்தைக் கடைச் சாப்பாட்டோடை கழிச்சுப் போட்டன். இனி என்னத்துக்கு அப்பிடி விசேஷமான சாப்பாடு?

மங்:- உந்தக் கோலத்தோடை மட்டும் வீட்டை போயிடாதை தம்பி! போனு அப்பா குளறுவர்.

திரு:- அவருக்கு எல்லாம் தெரியும். அவர் ஒண்டும் சொல்லார்.

மங்:- எண்டா, என்னைத்தான் குறை சொல்லுவர்: ''அவள் தங்கச்சி இருந்தவள்; மாமியாரா இருந்தும், பிள்ளையைக் கவனிக்கேல்லை'' எண்டு.

திரு:- உங்கடை வீட்டிலை இருந்து நான் போயே, மூண்டு வரியமாகுது. இவ்வளவு நாளும் அவர் உங்களை ஒண்டும் குறை சொல்லேல்லை; இப்ப மட்டும் ஏன் அப்பிடி புதுசாச் சொல்லப்போறுர்? நீங்க வீணுக் கவலைப்படா தேங்கோ!

வச:- அத்தான்! இப்ப எங்கை இருக்கிறியள்? உங்கடை ஃபிரெண்டோடையா?

திரு:- ஓ! அவன்ரை அறேலைதான் இருக்கிறன்:

வச:- நீங்க என்னத்தான்! இப்பவும் அந்தச் சின்ன அறேலை இருக்கிறியள்; ஒரு வீடல்லோ எடுத்திருக்க வேணும்!

திரு:- வீடோ!......... வீட்டுக்கு நான் எங்கை போக? இப்ப வீடெடுக்கிறதானு, அதுக்குக் குடுக்கக் கீ மணிகூட என்னிட்டை இல்லையே!

மங்:- அப்பிடி வீடெடுக்கிறது கஷ்டமெண்டா, இஞ்சை வாவன் தம்பி. இந்தப் பெரிய வீட்டிலை, இன்னும் எத்தினை பேர் இருக்கலாம்!

திரு:- உங்களுக்கேன் வீண் கஷ்டத்தை? எனக்கு அந்த அறையே போதும்!

மங்;- அவன் ஆர் தம்பி பொடியன்? அவன்ரை உத்தியோகமென்ன? அந்தஸ்தென்ன? உன்னுடைய அந்தஸ்தென்ன? அவனோடை நெடுக இருக்கப் போறியே?

திரு:- நீங்கள் ஏதோ அந்தஸ்தெண்டு பேசுறியள்; எனக்கு விளங்கேல்லை. அப்பாவைத் தவிர, என்னுடைய படிப்புக்கு உதவி செய்தவன். அவன் ஒருத்தன்தான்! அவனைத்தான் நான் ஒரு மனிசனெண்டு மதிக்கிறன்!

மங்;- அதுக்கு நீயும் ஒரு சமயத்திலே, ஒரு உதவி யைச் செய்யன் தம்பி. இப்ப உன்னுடைய அந்தஸ்த்துக்கு ஏத்தாப்போலே .........

திரு:- இப்ப நான் உங்களிட்டை ஒரு புத்திமதியும் கேக்க வரேல்லே! மாமா பாவம்! உங்களோடும் சண்டை பிடிச்சு, என்னை மூண்டு மாதம் இந்த வீட்டிலே இருக்க விட்டவர். இப்ப றிசல்ட் வந்த நேரத்திலே அவரையும் ஒருக்காக் கண்டு, நன்றி சொல்லிப் போட்டுப் போகத்தான் வந்தனான். சரி, நான் வாறன்.

[திருநாதன் எழுந்து நிற்கிறான். அவனைத் தொடர்ந்து மங்களம், வசந்தி இருவரும் ஏக காலத்தில் எழுந்து நிற்கின்றனர்.]

வச:- (அவனுக்குக் கிட்டச் சென்று) என்னத்தான், இவ்வளவு கெதியா வெளிக்கிட்டுட்டியள்? டடியைக் காணவேணுமெண்டியள்; அவர் நயினுக்கெல்லாம் வந்துடுவர். இருந்து கண்டு கொண்டு போங்கோவன்.

திரு;- சாச்சா! அவ்வளவு நேரம் நிக்கேலாது. அவரை உங்கினை போகேக்கை வரேக்கை காணுவன்; இல்லாட்டா ஒபீசிலை சந்திச்சுக் கொள்ளுவன்.

வச:- (கொஞ்சலாக) கனநாளையிற் பிறகு வந்தனீங்கள்; கொஞ்ச நேரம் இருந்து கதைக்கேன்ளை, அத்தான்! எனக்கும் பொழுது போகும்.

திரு;- உங்கைதானே மம்மி இருக்கிறா. ரண்டு பேருக்கும் வேறை என்ன பிராக்கு? இருந்து நல்லாக் கதையுங்கோவன்!

பண்:- நோனு கிட்டே கதைக்கறதுக்கு புறியங் இல்லே! இப்ப தங்கெச்சிக்கி சின்ன தொறே கிட்டே கதைக்கறத்துக்கி தாங் புறியங்!

வச;- அதுதானே மம்மியோடை என்ன கதைக்கிறது? பெரிய போறிங்!

திரு;- அதுக்கு நானென்ன செய்யிறது? உங்கடை மம்மிதானே!

மங்:- அப்ப, தம்பி போட்டு எட்டு மணிபோலை வாருமன்; மாமாவையும் காணலாம். நான் சாப்பாட்டுக்கும் ஆய்த்தப்படுத்துறன்.

பண்;- அப்ப எறெச்சி வாங்கவேணுமா? நாங் இப்ப போய் வாங்கி வாறது.

திரு:- எனக்கு இனிவர நேரமில்லை; அவசர வேலை இருக்கு; நான் வாறன்! (போக எத்தனிக்கிறான்.)

பண்:- (திருநாதனைத் தொடர்ந்து சென்று) அப்ப தொறே கார் வாங்கறது இல்லே?

திரு:- அதெல்லாம் வாங்கேக்கை சொல்லி அனுப்பூறன்; அவசரப்படாதை!

பண்:- அப்ப நாங் இந்த சோறு ஆக்கற வேலே வேண்டாங் சொல்லறது.

திரு:- டே, டேய்! 'அரசனை நம்பிப் புருஷனைக் கை விடக்கூடாது' நீ இப்ப உந்த வேலையைப்பார். உன்னைத் தேவையெண்டா நான் சொல்லியனுப்பூறன்.

பண்:- கட்டாயம் சொல்ல வேணுங்!

திரு:- (பண்டாவின் முதுகில் கைவைத்து) கட்டாயம்! உன்னை நான் ஒரு நாளும் மறக்கமாட்டன்! (வெளியே செல்கிறான்.)

திரை

## காட்சி 2

இடம்:- யாழ்ப்பாணம், சிங்காரவேலர் வீடு.

[சிங்காரவேலரும், சுப்பரம்மானும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

சிங்:- எங்கடை அலரி ஊரிலை உங்கை கனபேர் உத்தி யோகம் பாக்கிருங்கள்; ஆனு, முதல் முதலாச் சிவில் சேவி சிலை எடுபட்டவன் திருநாதன் தானே! நான் நினைச்சிருக் கேல்லை, பொடியன் உவ்வளவுக்கு முன்னேறுவனெண்டு!

சுப்:- எனக்கு அப்பவே தெரியும்; அதுதானே, அவ னுக்கு அப்ப உங்களை உதவி செய்யச் சொல்லிக் கேட்ட னுன். அவன் ஒரு நாளைக்கு நல்லா வரேக்கை, அந்த முன் னேற்றத்திலை உங்களுக்கும் ஒரு பங்கு வரட்டெண்டு.

சிங்:- ஓம், ஓம்; அதுசரி! எனக்குத்தான் அப்ப விளங் கேல்லை; பிழை விட்டுட்டன்!

சுப்:- நீங்க அந்த நேரத்திலை பொடியனுக்குக் கொஞ் சம் உதவிப் பண்ணியிருக்க, இப்ப நிலை வேறை!

சிங்:- (எழுந்து நின்று) என்னம்மான்! இப்பதான் என்ன கெட்டுப்போச்சு?......... அவன் தம்பி முத்துவேலன் என்னிட்டை உதவிகேட்டு வந்ததும், நான் இல்லை எண் டதும் எத்தினை பேருக்குத் தெரியும்? அதுகும், இப்ப பொடியனுக்கு இந்தப் பாராட்டு விழாவை நானே முன் னுக்கு நிண்டு நடத்திவைக்க, எல்லாரும் நம்பி விடுவங்கள், நான் தான் அவனைப் படிப்பிச்சதெண்டு!

சுப்:- ஓம் பாருங்கோ, உந்தப் பாராட்டுவிழா விஷய மாய்த்தான் நானும் கந்தையா வாத்தியாரோடை கதைச் சனுன்? அவரும், அப்பிடி ஒரு விழா வைக்கிறது நல்ல தெண்டுதான் அபிப்பிராயப்படுருர்.

சிங்:- கந்தையா வாத்தியாரையே விழாவுக்குத் தலை வராய்ப் போடுவம்.

சுப்:- வேறை ஆராரைப் போடலாம்?

சிங்:- எங்கடை ஜேப்பியர், மற்றது வி. சி. செயமன்.

சுப்:- எம். பி. யையும் கட்டாயம் கூப்பிடவேணும்.

சிங்;- இனி, வெளியிலே இருந்தும் ரண்டொரு பேச்சாளரைப் போடத்தானே வேணும்.

சுப்:- ஓ, அதெல்லாம் கடைசி நேரத்திலே ஒழுங்கு செய்யலாம்.

சிங்:- என்ன கடைசி நேரமெண்ணுறியள்? பொடியன் திரும்பிக் கொழும்புக்குப் போறதுக்கிடேலே, ஒழுங்கு செய்திடவேணும், இந்த ரண்டொரு கிழமேக்கை!

சுப்;- ஓ, அதுக்கென்ன? எல்லாம் ஆய்த்தமெண்டா, உடனே வைக்க வேண்டியது தானே!

சிங்:- (குழைவாக) அதோடை அம்மான், நீர் எனக்கொரு சின்ன உதவியும் செய்யவேணும்.........

சுப்:- என்ன சொல்லுங்கோ!

சிங்;- (கதிரையில் இருந்து, மெதுவான குரலில்) கந்தையா வாத்தியாரிட்டை ரகசியமாச் சொல்லிப் போடுங்கோ, என்னைப் பற்றித்தான் கூடுதலாப் பேசவேணுமெண்டு! "இந்தப் பிள்ளையைப் படிப்பிச்சு ஆளாக்கினதே, பெரிய தகப்பன் சிங்காரவேலர்தான்" எண்ட கருத்துப் படப் பேசச் சொல்லுங்கோ!

சுப்:- (எழுந்து நின்று, எங்கோ பார்த்தபடி, சிறிது நேரம் யோசித்து) எண்டாத்...— துப்பரவாச் செய்யாததைச் செய்ததெண்டு, சொல்லச் சொல்லி, எப்பிடிக் கேக்கிறது?...... இனி—... வாத்தியாரும் உதுக்குச் சம்மதிக்கிறரோ......... என்னவோ?

சிங்:- (துள்ளி எழுந்து, சிரித்த முகத்துடன்) அவர் கட்டாயம் சம்மதிப்பர்! அவற்றை சுவிச் என்ரை கைக்கை இருக்கு! கந்தையர் என்னிட்டை நோட்டுக்கு ரண்டாயிரம் ரூபா கடன் எடுத்திருக்கிறூர்; அந்தக் கடனை நான் நெருக்காமலிருக்கட் டெண்டாவது, இதுக்குச் சம்மதிப்பர்!

சுப்:- முழுப் பூசணிக்காயை எப்பிடிச் சோத்துக்கை புதைக்கிறது?—— எனக்கொரு மாதிரியாக் கிடக்கு......

சிங்:- இதென்ன நீர் இதுக்குப் பயந்து சாகிறீர்! நானே சொல்லிப்போடுவன்—— என்னைப்பற்றி நான் எப்பிடிச் சொல்லுறதெண்டல்லோ......... உம்மை அழைச்சனான். வாத்தியாரிட்டைத் தூதுவிட. நீர் ஏலாட்டா விடும்; நானே சொல்லுறன் வாத்தியாரிட்டை!

தயா:- (வீட்டினுள் இருந்து வந்துகொண்டே) சொல்லலாம், சொல்லலாம்! நல்லாச் சொல்லலாம்! முன்னம் தம்பி படிக்கேக்கை, ஒரு சதம்கூட உதவி செய்யேல்லை! குஞ்சியப்பர், அங்கை வீடுவளவு ஈடுவைச்சுக் கடன்பட்டுப் போயிருக்கிறார்! நல்லாச் சொல்லலாம், "நான் தான் திருநாதனைப் படிப்பிச்ச" தெண்டு அப்பாவே நேரே சபேலை சொல்லலாம்! இதுக்கேன் வேறை ஆளை?

சிங்:- (கோபமாக) கழுதேன்ரை கதையைப் பார்! உன்னையுமல்லே படிப்பிச்சன்; என்ன சுகம்?

தயா:- ஒருத்தருக்கும் ஈயாத உங்கடை காசிலை கொஞ்சம் சிலவழிஞ்சுதே! அதே ஒரு சுகம்தானே!

சிங்:- நான் பாடுபட்டு உழைச்ச காசடா!......

தயா:- ஓ! பாடுபட்டு உழைச்சது. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த!—— ஏழைக் கூலிக்காறற்றை சம்பளத்தை வெட்டி, றோட்டுக்கு மண்போட்டு, கள்ளக் கணக்குக் காட்டி, உழைச்ச காசு!

சிங்:- நான் மட்டுமா? எல்லா ஓவசியர்மாரும், அப்பிடித்தானே செய்யிறவங்கள்!

தயா:- அதுதான் ஒருத்தற்றை பிள்ளையளும் படிக்கிறேல்லை!

சிங்;- (ஏளனமாக) உலகம் முழுதையும் சுத்திப் பாத்தவர்!

தயா:- நான் உலகம் முழுதையும் சுத்திப் பாக்கேல்லை; நான் பாத்த உலகத்திலை அப்பிடித்தான் இருக்கு!

சிங்:- நான் அப்பிடிக் காசையாவது உழைச்சன், நீ என்ன செய்யிறு? உனக்கு ஒண்டுமே தெரியாது!

தயா:- எனக்கு என்ன வேலைதான் தெரிஞ்சாலும், தெரியாட்டாலும், உந்த மாதிரிச் செய்யாததைச் செய்த தெண்டு சொல்லிப், பேரும் புகழும் தேடுற வேலை, நிட்சயமாய்த் தெரியாது!

சிங்;- (கதிரையில் இருந்து) அவன் கிடக்கிறுன் அம்மான்! நீங்கள் இருந்து சொல்லுங்கோ! வேறை என்னென்ன ஆய்த்தங்கள் செய்ய வேணும்?

சுப்:- (இருந்து) வேறை என்ன? பூமாலையளுக்குச் சொல்ல வேணும். இன்னும் லைட், லவுஸ்பீக்கர் இதுகளும் வேணும்தானே!

சிங்:- சிகரம் சோடினையளையும் பிடிப்பம்; எழுப்பமா இருக்கட்டு!

சுப்:- எத்தினை மாலையளுக்குச் சொல்ல வேணும்?

சிங்:- கூட்டத்திலை பேசுற எல்லாருக்கும் மாலை போடத்தானே வேணும்!

தயா:- அம்மான்! இந்த மாலை போடேக்கை, அப்பாவுக்கும் ஒரு மாலை போட்டுடுங்கோ! இவருக்குப் போடுற மாலை, மற்றதுகளைவிடக் கொஞ்சம் பெரிசா இருக்கட்டு!

சிங்:- என்ன பகிடிபண்ணுறு? விழாவிலை மாலை போடேக்கை, எனக்கும் போடத்தானே வேணும். பாராட்டு விழா அமைப்பாளனே நான்தானே!

தயா:- இது தம்பிக்குப் பாராட்டுக் கூட்டமெண்டு பேர். கடைசியாப்பாத்தா, உங்களைப் பற்றித்தான் பேச்சு! உங்களுக்குத்தான் மாலை! ஏன் ஒரு காரியம் செய்யுங் கோவன்.——

சிங்:- (கோபமாக) என்னடா?

தயா:- விழா விளம்பரத்தையும், ''சிங்காரவேலருக்குப் பாராட்டு விழா'', எண்டே அச்சிடுங்கோவன்! அப்ப லேசு! ஏன் சுத்தி வளைச்சு, அலுவல் பாத்துக் கஷ்டப் படுறியள்?

சிங்:- அது எங்களுக்குத் தெரியும் கூட்டம் ஒழுங்கு பண்ணு; நீ பேசாமை இரு!

தயா:- அப்பா உலகத்திலே மூண்டு வகையான ஆக்கள் இருக்கினம்: சிலர் எத்தினையோ, அரிய பெரிய காரியங்களைச் செய்யிறுங்கள்; தியாகங்களைப் புரியிறுங்கள்; செய்து போட்டுத் தங்களுடைய ஊர் பேரைக்கூடச் சொல்லாமல் அமைதியா இருக்கிறுங்கள்! இன்னும் சிலர் ஏதோ கொஞ்ச நஞ்சத்தைச் செய்துபோட்டுத், தாங்கள் ஏதோ பெரிய சாதனையைச் சாதிச்சுப்போட்டம், வெட்டிப் பிடுங்கிப் போட்டம் எண்டு புழுகித் திரியிறுங்கள்! இன்னும் ஒரு கூட்டம் இருக்குது!

சிங்:- (எரிச்சலாக) என்ன, அரசியல் கூட்டமே?

தயா:- இந்த மூண்டாங் கூட்டத்தைச் சேர்ந்தவங்கள், ஒண்டுமே செய்யாங்கள்; சும்மா இருப்பங்கள். வேறை ஆரன் அலுவல் பாத்துக், காரியம் முடிஞ்ச உடனே, தாங்கள் தான் செய்தம் எண்டு சொல்லி மார்பிலே தட்டிக் கொண்டு, பேருக்கும் புகழுக்கும் வந்திடுவங்கள்! இந்த மூண்டாம் கூட்டத்தைச் சேர்ந்தனீங்கள் தானப்பா நீங்கள்!

சிங்:- இந்த எஸ். எஸ். ஸி. யைக் கூடப் பாஸ் பண்ணேல்லே; கதையைப் பாரன், பெரிய ஆராய்ச்சியாளன் மாதிரி!

சுப்:- அந்தப் பிள்ளை இப்பிடிப் படிச்சு முன்னுக்கு வந்திருக்கிறுன். இனி அவன்ரை பெருமேலே பெரிய தகப்பனும் பங்கு கொண்டா, அதிலே என்ன தம்பி பிழை?

தயா:- ஒரு சதம் கூட உதவி செய்யேல்லே! பிறகு தம்பின்ரை பெருமேலே இவருக்கென்ன பங்கு? வெட்கம் இல்லாமற் கூட்டம் கூட்டிச் சொல்லப் போமுர், "நான் தான் பெரியப்பா" எண்டு! தான் படிப்பிச்சனெண்டு இவர் சொன்னாலும், கேட்டுக் கொண்டிருக்கிறவங்கள் நம்புவங்களா? உலகத்துக்கு உதெல்லாம் தெரியா தெண்டா, நினைக்கிறியள்? பலரைச் சிலகாலம் ஏமாத்தலாம்; சிலரைப் பல காலம் ஏமாத்தலாம்; எல்லாரையும் எல்லாக் காலமும் ஏமாத்தேலாது!

சின்:- இப்ப பாக்கிற மாதிரிலை, ஊரவங்களுக்குத் தெரியாட்டாலும், நீயே சொல்லிக் குடுப்பா போலை இருக்கு! ... ...

தயா:- பின்னை என்ன? சொல்லாமல் விடப்போறனு? போலிவேஷங்களைக் கலைக்கிறது தானே என்னுடைய வேலை,

சுப்:- தம்பி! எங்கடை ஊரிலை இருந்து முதன்முதலா ஒரு பிள்ளை சிவில் சேவிசிலை எடுபட்டிருக்கிறுன். அது எங்கடை கிராமத்துக்கும் பெருமைதானே! அதைப் பாராட்ட வேண்டாமே?

தயா:- அம்மான்! தம்பியை நல்லாப் பாராட்டுங்கோ! ஆறு, தம்பீன்ரை படிப்புக்கும் அப்பாவுக்கும் என்ன சம்மந்தம்? மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் உள்ள சம்மந்தம்!...... இவரை ஏன் இழுத்துக் கொண்டுபோய்விட்டு மாலை போடுறியள்?

சுப்:- ஓ, தம்பி சொல்லூறத்திலும் நியாயம் இருக்கு! நாங்கள் கூட்டத்திலை, நீங்கள் தான் படிப்பீச்ச தெண்டு பேசப்போக, மற்றவங்கள் கைதட்டி விசிலடிச்சுச், சிரிச்சாலும் சிரிப்பங்கள்!

சின்:- சிரிக்கிறவன் சிரிச்சிட்டுப் போகட்டு! சிரிச்சா என்ன? என்ரை தோலுக்கை பூரப்போகுதே? ... ... ஆ? அதைப் பற்றிப் பறவாயில்லை. எப்பிடியும் விழாவைக் கட்டாயம் நடத்த வேணும்!

சுப்:- அப்பென்ன, மேளம் கீளத்துக்கும் சொல்ல வேணுமே?

சின்:- பின்னை மேளமில்லாமல்......... மேளமில்லாமல் கலகலப்பில்லை!

சுப்:- எல்லாத்துக்கும் சிலவு? ......

சின்:- சிலவைப் பற்றி யோசியாதேங்கோ; எல்லாம் என்ரை கணக்கு!

தயா:- படிக்கிறதுக்கு ஒரு சதம் குடுக்கிறதுக்கு மனம் வரேல்லை. இப்ப பாராட்டு விழாவுக்குத் தண்ணியாச் சிலவழியுது காசு! ......

சிங்:- டேய்! காசைச் சும்மா வைச்சிருந்து என்னத் துக்கு? கட்டி அழவா?

தயா:- இல்லை! கூட்டத்தைக் கூட்டி, பொய்யளைச் சொல்லி மாலை போடுவிக்க!

சிங்:- அவன் கிடக்கிறான் அம்மான்; நீங்கள் விழா ஒழுங்குகளைக் கவனியுங்கோ!

தயா:- அம்மான், கூட்டத்துக்கு அடிக்கிற நோட்டீ சிலை, ஒரு அடிக் குறிப்புப் போடுங்கோ: ''கூட்டத்திற்கு வருபவர்களுக்குச் சுண்டல் வழங்கப்படும்'' எண்டு. அப்ப ஊரிலை உள்ள குழந்தை குஞ்செல்லாம் வந்திருந்து, கை தட்டும்! (சிரிக்கிறான்.)

திரை

## காட்சி 3

இடம்: யாழ்ப்பாணம், முத்துவேலர் வீடு.

[மணாளன் வெளியே செல்வதற்குப் புறப் பட்டுக் கொண்டிருக்கிறான். மங்களம் கையில் சூட் கேசுடன் வருகிறாள். அவள் நன்றாகக் களைத் திருக்கிறாள் என்பதை அவளது முகபாவம் காட்டு கிறது.]

மணா:- (நையாண்டியாக) இட்ட அடி நோவ, எடுத்த அடி கொப்பளிக்க, சூட்கேஸ் சுமந்து கையுளைய...... மாமி! யாழ்ப்பாணத்துச் சுடு புழுதி வீதி வழியாகத் தாங்கள் நடந்து வரலாமா?.........

மங் - (சூட்கேசை நிலத்தில் வைத்துவிட்டு இளைத்தபடி) களைச்சுப்போய் வந்திருக்கிறன்ரா தம்பி; பகிடி பண்ணாதை!

மணா:- இறையில்லை வந்தாக் களை வரும்தானே! ஏன் மாமி பிளேன்லை வந்திருக்கலாமே!

மங்:- பிளேனெண்டாச் சும்மா வேடடா தம்பி? காசல்லே!

மணு:- என்ன காசில்லையா? உங்களிட்டை இல்லாத காசா!......... ஓ! கொழும்புச் சீவியமல்லே! எல்லாக் காசையும் சோக்கிலும், சுதியிலும் முடிச்சுட்டியளாக்கும்!

மங்;- எங்கை தம்பி, அப்பாவைக் காணேல்லை?

மணு;- ஏது! சகோதரத்தைக் காண அவசரப்படுறியள்? ஓ! ஒரு இரத்தமல்லே; துடிக்கத்தான் செய்யும்! அப்பா பட்டணம் போட்டார்; பின்னேரம்தான் வருவர்.

மங்;- எங்கையடா தம்பி, ஒரு கதிரையையும் காணேல்லை......- இருப்பம்; கால் உளையுது!

மணு;- நாங்கள் ஏழையள்! எங்க வீட்டிலை கதிரையள் ஏது? உங்க வீட்டிலை எண்டா, சோபாக்கள், செற்றியளெல்லாம் வாங்கிப் போட்டிருப்பியள்! இஞ்சை உந்த வாங்குதான் கிடக்கு!

மங்:- அதிலை என்ன தம்பி? இருக்க ஒரு ஆசனம் இருந்தாச் சரி (வாங்கில் இருந்து, பெருமூச்சுவிட்டு) அப்பாடா!

மணு!- நல்லாக் களைச்சுப் போனியள்! ஒரு தண்ணியாவது வைச்சுத் தரலாம்; வீட்டிலை தேயிலை, சீனி ஒண்டுமில்லை!

மங்:- அதைப் பற்றிப் பறவாயில்லைத் தம்பி நீ உதிலை இருந்து கதை.

மணு!- எனக்கு இருக்க நேரமில்லை. நான் கடைக்கு வெளிக்கிட்டிருக்கிறன், சமையலுக்குச் சாமான் வாங்க.

மங்;- சரி, நீ போய் வாங்கியா தம்பி; நான் இருக்கிறன் ஆறுதலா.

மணு;- நீங்க இருக்கப் போறியளோ?....- சரி இருங்கோ! வரேக்கை ஒரு சோடாவும் வாங்கியரட்டே?-....

மங்;- வேண்டாம், வேண்டாம்! நீ சமையற் சாமானை வாங்கியா தம்பி.

[மணாளன் வெளியே போகிறான். மங்களம் தனியே இருக்கிறாள். சிறிது நேரத்தில் சிங்கார வேலரும் சுப்பரம்மானும் வருகின்றனர்.]

சுப்:- இஞ்சை பாருங்கோ! உங்களுக்கு முந்தியே தங்கச்சி கொழும்பிலை இருந்து வந்துட்டா! எப்ப வந்தனீங்கள்?

மங்:- இப்ப காலமைதான்.

சிங்:- கனகாலத்துக்குப் பிறகு வந்திருக்கிரு; இண்டைக்கு மழையல்லோ வரப்போகுது!

மங்:- தெரியாதே அண்ணை; நேரம் கிடைச்சாத்தானே வர.

சுப்;- என்ன சங்கதி? திடீரெண்டு வந்திருக்கிறியள். ஏதாலும் விசேஷமே?

சிங்:- (கிண்டலாக) உதொரு கேள்வியே? உங்களுக்கு ஒண்டும் விளங்காது! பொம்பிளைப் பிள்ளை பெத்து வைச்சிருக்கிரு. இப்ப மருமேன் சிவில் சேவிஸ் பாஸ் பண்ணியிருக்கிருன். பேந்தென்ன?—— ஆ!—— விளங்கேல்லையே?——

சுப்:- அவ என்ன அலுவலா வந்திருக்கிருவோ? நீங்களேன் திடீரெண்டு, அந்த முடிவுக்கு வாறியள்?

சிங்:- வேறை என்னத்துக்கு வந்திருக்கிரு. இவ்வளவு காலத்துக்குப் பிறகு?—— மாப்பிளை எடுக்கத்தான்! அதுகும் சிவில் சேவிஸ் மாப்பிளை! ம்——

மங்:- சா, நீங்க அப்பிடி நினையாதேங்கோ. கனகாலம் இந்தப் பக்கம் வரேல்லை; அதுதான் சும்மா ஒருக்கா வந்தனான்.

சிங்:- உந்தச் சும்மா வந்த கதையை விடு; உதெல்லாருக்கும் விளங்கும்! காசையும், உத்தியோகத்தையும், பதவியையும் கண்ட உடனை, எட்ட நிக்கிறவை எல்லாம் கிட்டக்கிட்ட வருவினம்! என்னெண்டு கேட்டா "சும்மா வந்தனாங்கள்!"——

சுப்:- ஏன் வீண் கதையைத் துவக்கூறியள்? நாங்க வந்தனுவலை நாங்க பாப்பம்.

சிங்:- இல்லை அம்மான், உங்களுக்குத் தெரியாது! அப்ப அந்தப் பிள்ளை படிக்கவெண்டு கொழும்புக்குப்போக, ஒரு வரியமாவது தன்ரை வீட்டிலை இருந்து படிக்க விடேல்லை; இப்ப வந்துட்டா, கலியாணம்பேசி! ——

மங் .- (கோபமாக) நீ செய்ததும் எங்களுக்குத் தெரியும்! திருநாதன்ரை படிப்புக்கு உதவி செய்யச்சொல்லிச் சின்னண்ணர் வந்து கேட்டதும், நீ ஒண்டும் தரமுடியா தெண்டு சொன்னதும், உங்கை எல்லாருக்கும் தெரியும்! நான் ஒரு மூண்டு மாதமாவது வீட்டிலை இருக்க விட்டன்; நீ ஒரு செப்புச் சல்லி கூடக் குடுக்கேல்லை! உனக்கு மானம், ரோசம், வெட்கம் எண்டு ஏதாவது இருந்தா, மீண்டும் இந்த வீட்டு மண்ணிலை வந்து மிதிப்பியே? வந்து நிக்கிறூ பெரியப்பா எண்டு சொல்லிக்கொண்டு, வெட்க மில்லாமல்!

சின்:- நான் ஏன் வந்தனான், தெரியுமே? அவன் சோதினை பாஸ் பண்ணினதுக்கு ஒரு கூட்டம் கூட்டி, அவனைப் பாராட்ட வேணும், கௌரவிக்க வேணுமெண்டு! உன்னைப்போலை ஆளை மடக்கிக் கொண்டுபோய்ப் பெட்டைக்குக் கட்டிவைக்கவல்ல!

மங்:- உங்கடை பாராட்டுக் கூட்டமெல்லாம் எல்லாருக்கும் விளங்கும்! பொடியனுக்குப் பாராட்டுக் கூட்டமெண்டு சொல்லிப்போட்டு, உன்னைப் பற்றியும் நாலு வார்த்தை பேசப்பண்ணி, உனக்கும் ரண்டு மாலை போடுவிக்கப் பாக்கிறுய்! பொடியன்ரை பேரைச் சொல்லி உனக்குப் புகழ் தேட! ....

சுப்:- முத்துவேலர் வீட்டிலை இல்லைப்போலை கிடக்கு; இன்னும் நிண்டு கதைக்கக் கதைக்க, கதை பெருகும்.

[மணாளன் கையில் சோடாப் போத்திலுடனும் ஒரு பையுடனும் வருகிறுன்.)

மணா:- உந்தச் சண்டையை, நீங்கள் றோட்டிலை கிட்டிலை, அல்லது உங்கடை ஆற்றையன் வீட்டிலை எண்டா என்ன பிடிச்சிருக்கலாமே! இஞ்சை ஏன் வந்தியள்? நாங்கள் அண்ணருடைய படிப்பும் முடிஞ்சுது, கரைச்சலும் நீங்கிப்போச்சு, இனிக் கொஞ்ச நாளைக்கு நிம்மதியாய் இருக்கலாம் எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறம். அதுக்கிடையிலை நீங்கள் வந்திருக்கிறியள் சண்டை பிடிக்க.

சிங்:- ஓ! தம்பியே? அப்பா எங்கை போட்டார்?

மணு:- அவர் பட்டணம் போட்டார்; பின்னேரம் தான் வருவர்.

சுப்:- தம்பி சோடாப் போத்திலோடை வந்திருக்கிறார்; ஆருக்கு?

சிங்:- வேறை ஆருக்கு? உடைதம்பி; குடிப்பம்:

மணு:- சோடாப் போத்திலே உடைக்கிறதல்ல, உங்கடை தலையை உடைக்க வேணும்!

சிங்:- தம்பி நல்ல பகிடியாப் பேசப் பழகியிருக்கிறான். (அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறார்.)

மணு:- ஓ, பகிடிதான்! உங்களை, ஆளைப் பாக்கவே எனக்குப் பெரிய பகிடியாக் கிடக்கு. (கனைத்துச் சிரிக்கிறான்.)

சிங்:- சோடா தரேல்லையா? (கையை நீட்டுகிறார்.)

மணு:- அது மாமிக்கு!

சிங்:- ஏன் மாமீலை அவ்வளவு கரிசினை?

மணு:- அவ ஒரு மூண்டு மாதமாவது, அண்ணரைத் தன்ரை வீட்டிலை இருக்கவிட்டவ. அதுக்கு ஒரு கிளாஸ் சோடாவாவது குடுக்க வேண்டாமே? உங்களுக்குப் பானேலை பச்சைத் தண்ணி இருக்கு! ஊத்தியந்து தரட்டே குடிக்க?

[மணுளன் சோடாவை உடைத்து மங்களத்திடம் கொடுக்கிறான்.]

கொழும்பிலை ஃபிரிஜ்ஜிலை வைச்சுக், கூல் பண்ணீட்டு எடுத்துக் குடிப்பியள்;—— நான் வெய்யிலுக்காலை கொண்டந்து தாறன்!...... கிளாஸ் எடுத்தரட்டே?——

மங்;- வேண்டாம் தம்பி; உப்பிடியே குடிப்பம் (குடிக்கிறாள்.)

சிங்;- என்ன தம்பி வெளீலை அவ்வளவு காணுறேல்லை. இப்ப என்ன செய்யிரு?

மனு:- அண்ணர் சோதினையைப் பாஸ் பண்ணினத்தாலே, எனக்கும் அடிச்சிருக்கு யோகம்! நான் ஒருத்தன் இருக்கிறனே, செத்துப் போனனே எண்டது கூடத் தெரியாமை இருந்தவை எல்லாம், என்னுடைய சுகம் விசாரிக்கினம்! —... நானென்ன சும்மாதான் இருக்கிறன்!

சுப்:- தம்பி, அப்பா வந்தால், நாங்கள் வந்து தேடீட்டுப் போனனுங்கள் என்டு சொல்லுப். (சிங்காரவேலரைப் பார்த்து) வாருங்கோ போவம்!

சிங்:- (கையைக் காட்டி) பொறுங்கோ அம்மான்! பாரன் தம்பி! கொண்ணருக்குக் கலியாணம் பேசி வந்திருக்கிறு, கொழும்பிலே இருந்து; நான் ஒரு லட்சம் ரண்டு லட்சம் எண்டு சீதனம் வாங்கி என்ரை தம்பீன்ரை பிள்ளைக்கு நல்ல பெரிய அந்தஸ்துள்ள இடத்திலே செய்ய வெண்டிருக்கிறன்!... —

மங்:- அப்பதானே ஒடேலை ஒரு கொமிஷன் அடிக்கலாம்! காசு எண்ட உடனே முன்னுக்கு ஓடியந்துடுவா!

சிங்:- சீ! காசுக்காக நான் வரேல்லை; என்ரை தம்பீன்ரை பிள்ளையை நல்லா வைக்க வேணுமெண்டுதான் நான் வந்தது! —... தெரிஞ்சுதே?

மங்:- உனக்குத் தம்பீன்ரை பிள்ளை; எனக்கு அண்ணேன்ரை பிள்ளை. எனக்கும் உன்னளவு கரிசினை இருக்கு!

மனு:— முன்னம் அண்ணருக்கு உதவி தேவையான நேரத்திலே, பணத்துக்குத் தேவை இருக்கேக்கை, ஒருத்தராவது திரும்பிப் பாக்கேல்லை; உதவி செய்யேல்லை! இப்ப வந்து நிண்டு, ''என்ரை அண்ணேன்ரை பிள்ளை'' ''என்ரை தம்பீன்ரை பிள்ளை'' எண்டு சண்டை பிடிக்கிறியள்; உரிமை கொண்டாடுறியள்! ஏன் நானும் முத்துவேலற்றை பிள்ளை தானே? அப்ப எனக்கும் ஒரு கலியாணத்தைப் பேசுங்கோவன்; செய்வம்!

சிங்:- நேற்றும் ஒரு பகுதி வந்து கேட்டுட்டுப் போகுது; ஒரு லட்சம் தாறமெண்டு.

மணு:- (சிரித்து) ஆருக்கு எனக்கோ?

மங்:- இல்லை; அவருக்கு கொமிஷன்!

மணு:- (சிரிக்கிறான்)

சின்:- (மணுவைப் பார்த்து) நானெல்லாம் பாத்துச் சொல்லுறமெண்டிருக்கிறன்.

மங்:- கொமிஷன் எவ்வளவு தரவேணுமெண்டோ?

மணு:- நீங்கள் ஒண்டும் பாக்கவும் வேண்டாம்; மேய்க்கவும் வேண்டாம்! உங்கள் ஒருத்தற்றை தயவுமில்லாமல் படிச்சுட்டார் அண்ணர். இனிக் கலியாணம் செய்ய மட்டும், உங்களுடைய தயவு வேணுமே? அதொண்டும் நீங்க பேசத் தேவையில்லை; போட்டு வாருங்கோ!

சுப்:- தம்பி, நாங்கள் வந்த விஷயத்தைச் சொல்லுறன்; அண்ணர் சிவில் சேவிசிலை எடுபட்டது எங்கள் எல்லாருக்கும் வலு சந்தோஷம்! ஏன், இந்த ஊருக்கே அது பெருமை தானே! அது தான் ஒரு பாராட்டு விழா வைச்சு, அவரை கௌரவிக்க வேணுமெண்டுதான், நானும், பெரியப்பாவும் வந்திருக்கிறம்.

மணு:- என்ன? பாராட்டுவிழா வைக்கப் போறியளா? (ஏளனமாக) பெரிப்பா! உங்களுடைய பேரென்ன! புகழென்ன! செல்வமென்ன! செல்வாக்கென்ன! ஓவசியரெண்ட மகிப்பென்ன! உங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, நாங்கள், இந்த ஏழையள், எந்த மூலைக்கு? பி. டபிள்யு. டி ஓவசியர் எண்ட உங்களுடைய பெருமையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்...... அண்ணர் சாதித்ததென்ன? ஒரு சின்னச் சோதினை பாஸ் பண்ணி இருக்கிறார்! இதுக்கொரு பாராட்டா? அதுவும் நீங்களே முன்னின்று செய்வதா? அந்த அளவுக்கு, உங்களாலை பாராட்டப்படுவதற்கு நாங்கள் பாக்கியம் செய்யவில்லை! எங்களுக்குத் தகுதி காணாது!

மங்:- திருநாதன்ரை பேரைச் சொல்லி, உங்கடை புகழையும் வளர்த்துக் கொள்ளலாம்!

மணு:- (நையாண்டியாக) "பெரிய கொடை வள்ளல்! தரும சீலர்! குணக்குன்று!" என்று உங்களுடை பெயர் தானே, இந்த ஊர் மக்களுடைய நாவெல்லாம் அடிபடுகிறது! அப்படி இருக்கத் "திருநாதனுடைய பெயரைச் சொல்லிச் சிங்காரவேலர் புகழ்தேடப் பாக்கிருர்" என்று சில அறிவிலிகள் கூறினுல் ... அந்த அவதூறைத் தாங்கும் சக்தி எனக்கில்லே! அந்தப் பழிச் சொல்லேப் பொறுக்கமாட்டாது என் உள்ளமே சுக்கு நூருக உடைந்துவிடுமே! அப்படி ஒரு அபகீர்த்தி தங்களுக்கு வரலாமா? ...... ஐயகோ! நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறதே!

சிங்;- இவன் சின்னப்பிள்ளைக்கு என்ன தெரியும்? நாங்கள் பிறகு வந்து முத்துவேலரோடை கதைப்பம்.

மணு:- அப்பா, இப்ப உங்களோடை கதைக்கத்தான் வலு ஆவலாயிருக்கிருர். சும்மா போங்கோவன் அவரிட்டை பேச்சு வாங்காமல்!

சிங்:- நாங்க போறது இருக்கட்டு; இவவின்ரை பாடு என்ன முற்று?

மங்:- (கோபமாக) என்னுடைய அலுவலைப் பாக்க எனக்குத் தெரியும்; நீர் உம்முடைய அலுவலேப் பாத்துக் கொண்டு போம்!

மணு:- அம்மான்! உங்களுக்கு ஊரிலே கொஞ்சம் நல்ல பேரிருக்கு, பொது அலுவல்களிலே ஈடுபடுற மனிசனெண்டு! இப்ப இந்த நாடகக் காறரோடை நீங்களும் சேந்தியளெண்டா, உங்களுடைய நல்ல பேரும் கெட்டுப்போம். நீங்க போட்டுவாருங்கோ! அவை நிண்டு, அப்பாவிட்டை பேச்சு வாங்கிக்கொண்டு போகட்டும்.

சுப்;- நீ சொன்னது சரி தம்பி! நான் வாறன். எனக்கேன் வீண்பேர்? (போகிருர்.)

சிங்:- அம்மான் அம்மான்!, போகாதேங்கோ! நில்லுங்கோ! (சுப்பரம்மானுக்குப் பின்னுல் ஓடுகிருர்.)

மணு:- மாமி! சென்றதற்கழுது பயனில்லை. நடந்து முடிந்ததை இனி மாற்றியமைக்க முடியாது!...... (குரலை மாற்றி) நீங்கள் நிண்டு, அப்பாவைக் கண்டும் சுகமில்லை! இனி நீங்கள் அவரிட்டைப் பேச்சு வாங்கிறத்தையும் நான் விரும்பேல்லை! எனவே, மரியாதையாக இப்பொழுதே போய்விடுவது நல்லது! கொஞ்ச மரியாதையாவது மிஞ்சும்! இப்ப போய்ச் சந்திலை பஸ் எடுத்தியளெண்டா, யாழ் தேவியைப் பிடிச்சுடலாம். ராச் சாப்பாட்டுக்கு வீட்டை போயிடலாம், கொழும்புக்கு. அப்ப போட்டு வாறியளா?

[மணுளன் கரம் கூப்புகிருன். மங்களம் எழுந்து சூட்கேஸையும் தூக்கிக்கொண்டு நடையைக் கட்டுகிருள்.]

திரை

# உறுப்பு V

## காட்சி 1

இடம்: யாழ்ப்பாணம், சுப்பரம்மான் வீடு.

[மலர் ஒரு வாங்கில் இருந்து சட்டை தைத்துக் கொண்டிருக்கிறாள். திருநாதன் வருகிறான். அவனைக் கண்டதும் அவள் எழுந்து நிற்கிறாள். அவன் அவளை ஏற இறங்கப் பார்த்துப் புன் முறுவல் பூத்தபடி நிற்கிறான்.]

மல:- என்ன, அப்பிடிப் பாக்கிறியள்?

திரு:- அப்பா! எவ்வளவு மாறிட்டாய்!

மல:- என்ன மாற்றம்? நான் இருந்த மாதிரியேதான் இருக்கிறன்.

திரு:- நான் வாசிற்றிக்குப் போற பொழுது, பாவாடை தாவணிலை பார்த்த சின்னப்பெண்ணோ இது?

மல:- சின்னப்பெண் இல்லாமல், பெரிய கிழவியா?

திரு:- பாட்டியா? ஐயையோ! அதுக்கின்னும் எவ்வளவு காலம் இருக்கு!

மல:- ஏன் வாசிற்றிக்குப் போகேக்கை இருந்த தோற்றத்தோடை ஒப்பிடுறியள்? அதுக்குப்பிறகு எத்தினை முறை வந்திருக்கிறியள்!

திரு:- ஆக, இரண்டே ரண்டுமுறை! அதெல்லாம் அவசரத்திலை வந்து போனது. ஆறஅமர நிக்கப், பாக்கப் பேச எங்கை நேரம்?

மல:- பி. எஸ். ஸி. பட்டம் எடுத்த பிறகுதான் என்னைக் கண்ணிலை தெரியுதாக்கும்!

திரு:- இப்ப உன்னைப் பார்க்க! — —

மல:- எப்பிடியிருக்கு?

திரு:- சாட்சாத் சரஸ்வதிதேவி மாதிரியே இருக்கு!

மல:- சரஸ்வதியெண்டாக் கையிலை வீணை இருக்கும்; என்னுடைய கையிலை அகப்பைதான் அதிகம் இருக்கிறது (சிரிக்கிருள்.)

திரு:- வீணை இல்லாட்டா என்ன? வீணையின் இனிமைதான் குரலிலை சொட்டுதே!

மல:- சாதாரண மனிதர்களைத் தெய்வங்களோடை ஒப்பிடக்கூடாது.

திரு:- கடவுளுடைய உருவங்கள்கூட, மனிதனது கற்பனைதானே!

மல:- அதுக்காக, மனிதரையும் கடவுளையும் ஒன்ருக்கிவிட முடியாது!

திரு:- அழகாகப் பேசுறியே!

மல:- பல்கலைக் கழகத்துக்குப் போனுத்தான் அழகான பேச்சு வருமா?

திரு:- அடுப்படியிலை இருந்தும் பேசிப் பழகலாம் எண்டு சொல்லுருய்! நிறைய வாசிச்சிருக்கிருபோலை.

மல:- ஏதோ ஆப்பிட்டதை வாசிப்பன்.

திரு:- அப்பிடி வாசிக்கக்கூடாது! சும்மா கண்டது நிண்டதெல்லாத்தையும் வாசிக்க. எங்களுடைய வாணுள் காணுது தெரிவு செய்து வாசிக்க வேணும்!

மல:- எனக்குப் புத்தகங்களே கிடையாது! கிடைக்கிற புத்தகங்களையும், யார் தெரிவு செய்து தாறது? இனிமேல் நீங்கள் தெரிவு செய்து தாருங்கோ; நான் வாசிக்கிறன். (சிரிக்கிருள்.)

திரு:- ஏன் சிரிக்கிருய்? இனிமேல், புத்தகம் வாசிக்க எங்கை நேரம் கிடைக்கப் போகுதெண்டா?

[இருவரும் சிரிக்கின்றனர்.]

மல: என்னிலை இவ்வளவு மாறுதல் எண்டு சொல்லுறியள்; ஆனு, உங்களிலை ஒரு மாற்றமும் எனக்குத் தெரியேல்லை!

திரு:- என்ன, எவ்வளவு படிப்புப் படிச்சு, எந்தப் பெரிய பட்டமெல்லாம் பெற்று வந்திருக்கிறன்! என்னிலை மாற்றமில்லையா?

மல:- படிப்பெல்லாம் மூளேலை; பட்டமெல்லாம் கடுதாசிலை; ஆளிலை ஒரு வித்தியாசமும் இல்லை! மீசை மட்டும்தான் கொஞ்சம் கறுத்திருக்கு. (சிரிக்கிருள்.)

திரு:- நான் பெரிய சாதனையைச் சாதிச்சிட்டதாகவும், அதுக்கொரு விழா வைக்கவேணு மெண்டும்; ஊரிலை பெரிய ஆயத்தமெல்லாம் நடக்குது; நீ உப்பிடிச் சொல்லுறியே!

மல:- ஊரிலை உள்ளவைக்கு அந்தப் படிப்புகளும், பட்டங்களும், பதவியளும் பெரிசா இருக்கலாம்; ஆனு, எனக்கு நீங்கள்தான் பெரிசு! வெறும் திருநாதன்!

திரு:- அப்ப, என்னுடைய படிப்புகள் பட்டங்களாலும் ஒரு சுகமும் இல்லை! ...

மல:- என்னைப் பொறுத்தவரேலை அதுகள் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப் போறதில்லை. ஏனெண்டா, நான் காதலிச்சது ஒரு சாதாரண பள்ளிமாணவனை! இப்பவும் அவரைத்தான் காதலிக்கிறன்!

திரு:- (முகத்தைச் சுழித்து) ஆ! அப்பிடியானு இந்தச் சிவில் சேவன்ரினுடைய கதி?......

மல:- எனக்கு முன்னுலை வரேக்கை, உந்தப் பட்டம் பதவியள் எல்லாத்தையும் மறந்திடவேணும்!

திரு:- (குறும்பாக) அப்பதான் காதலிப்பியா?

[இருவரும் சிரிக்கின்றனர்.]

மல:- அதிருக்க, உங்களுடைய பாராட்டு விழாவைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கோ!

திரு:- ஊரிலை ஒருசிலர் சேர்ந்து இந்த விழாவுக்கு ஆய்த்தப் படுத்திச்சினம். பெரியப்பாதான் முழு மூச்சா முன்னுக்கு நிண்டார். நான் எனக்கொரு பாராட்டு விழாவும் வேண்டாமெண்டுட்டன்.

மல.- பெரிய பெரிய ஆக்களெல்லாம் ஈடுபட்டு விழா ஒழுங்கு செய்யினம்; அதை நீங்கள் வேண்டாமெண்டு சொல்லலாமா?

திரு:- உனக்குத் தெரியாது மலர்; இது கண்மூடி உலகம்! ஒரு கஷ்டப்படுறவனுக்கு, ஏழைக்கு உதவி செய்ய ஒருத்தனும் வரான்; பணம் உள்ளவன், வசதி உள்ளவனுக்கு உதவ ஆயிரம்பேர் முந்துவங்கள். அவங்களுக்குள்ள வசதியள், இன்பங்கள் போதாதெண்டு, வரவேற்பு, பாராட்டுக்களும் ஒழுங்கு செய்வங்கள்!

மல:- அதுக்கு நீங்கள் என்ன செய்யப்போறியளாம்? உலகத்தைத் திருத்தப் போறியளாக்கும்.

திரு:- இப்பிடியான போலி வேஷக்காறர் ஏற்பாடு செய்யிற பாராட்டை ஏற்க மறுத்தாலாவது, அவங்களுக்குக் கொஞ்சம் கண் திறக்கும்.

மல:- (கொஞ்சலாக) சும்மா கண் திறக்கிறத்தையும், ' நிறத்தையும் விட்டுட்டு, பேசாமைப் போங்கோ கூட்டத்துக்கு; கல்லுப் பிள்ளையார் மாதிரிக் கதிரேலை இருங்கோ. ரண்டு மூண்டு மாலையளைப் போடுவங்கள். ரண்டொருத்தர் உங்களைச் ''சந்திரன், இந்திரன்'' எண்டு புகழ்ந்து பேசுவினம் எல்லாத்தையும் ஏற்றுக் கொண்டு, கூட்டம் முடிய எழும்பி வீட்டை போங்கோ!

திரு:- உவங்களை எல்லாம் ஏன்? என்னை நீ ஒருத்தி மட்டும் பாராட்டினுல் போதாதா? .....

மல;- அதென்ன, நான் அவ்வளவு பெரிய ஆளா?

திரு:- (புன்முறுவல் பூத்து, கனிவாக) மலர்! என்னுடைய வாழ்க்கேலை யாருக்கும் கொடுக்காத முக்கியத்துவம் உனக்குத்தானே குடுக்கப் போறன்! நீதானே என் வருங்கால வாழ்க்கைத் துணைவி!

திரை

காட்சி 2

இடம்: யாழ்ப்பாணம், முத்துவேலர் வீடு.

[வீட்டுத் தலைவாசலில் முத்துவேலர், திருநாதன், மணிவண்ணன் மூவரும் பேசிக் கொண்டிருக்கின்றனர்.]

முத்:- என்னுடைய கனவு நனவாயிட்டுது! நான் கஷ்டப்பட்டாலும், என்னுடைய பிள்ளை, ஒரு நல்ல நிலைக்கு வந்திடவேணும் எண்டு பாடுபட்டன். என்னுடைய முயற்சி பூரண வெற்றி! இனி என்ன? இவன் தம்பி மனோன்ரை கவலை தானே.

திரு:- அவனைப் பற்றி ஏன் கவலைப்படுறியள்? அவன் ஒரு தொழிலிலை இறங்கீட்டான்.

முத்:- உத்தியோகம் தேவையில்லைத் தம்பி. சீவியத்துக்கு ஒரு தொழில் சான் தேவை! இஞ்சை நான் மண்ணைத்தானே கொத்தினன். உந்த உத்தியோகத்தரவேன்ரை பிள்ளையளெல்லாம் இருக்க, என்ரை பிள்ளை சிவில் சேவண்டா வரேல்லையே? — —

மணி:- ஓ! நல்லாக் கமம் செய்யலாம். ஆனா, இந்தக் காலத்துப் பொடியளுக்குக் கமம் செய்யிற தெண்டா வெட்கமாகக் கிடக்கு.

முத்:- மனோன் அப்பிடியில்லை; அவன் இப்ப எந்தத் தொழிலும் செய்யத் தயார்!

மணி:- பேந்தென்ன உங்களுக்குக் கவலை? பேசாமைக் கண்ணை மூட வேண்டியது தானே!

முத்:- இன்னும் ஒண்டு தம்பி. கண்ணை மூடுறத்துக்கு முன்னம் செய்ய, இன்னும் ஒரு அலுவல் இருக்கு.

மணி:- அதென்ன?

முத்:- தம்பிக்கு ஒரு கலியாணத்தைச் செய்து, அந்தச் சிறப்பையும் பாத்துக் கொண்டு தான் கண்ணை மூட வேணும்!

திரு:- அந்தக் கவலை மட்டும் உங்களுக்கு வேண்டா மப்பா!

முத்:- ஏன்ரா அப்பிடிச் சொல்லுறு? உங்கை எத் தினை பகுதி கேட்டுக் கொண்டு திரியுது! உன்ரை பெரி யப்பாவும் ஒரு பக்கம் ஓடித் திரியிருர். "ஒரு லட்சம் சீதணம் வாங்கித் தாறன்", "ரண்டு லட்சம் வாங்கித் தாறன்" எண்டு. உன்ரை மாமி ஒரு பக்கம் ஓடித் திரியிரு. உவையளை எல்லாம் நான் இனி ஒரு பொருட்டா மதிக் கப் போறதில்லை! அதெல்லாம் எனக்குச் செய்யத் தெரி யும்; நல்ல இடமாய் பாத்துச் செய்து வைப்பன்!

திரு:- நான் தானே சொன்னனப்பா, நீங்கள் இந்த விஷயத்திலை தலையிட வேண்டா மெண்டு.

மணி:- நல்ல கதை! அவர் பேசாமை, வேறை ஆர் பேசூறது?

முத்:- நான் உன்னை வளத்துப் படிப்பிச்சு ஆளாக்கி, விட்டிருக்கிறன்; என்னைப் பேச வேண்டாமெண்டு சொல் லூறியே!

திரு:- அதுக்குச் சொல்லேல்லை அப்பா. நீங்கள் இவ் வளவு கஷ்டப்பட்டு என்னைப் படிக்க வைச்சியள்; உங்க ளுடைய இயல்புக்கும் மேலாலை கடன்பட்டு, எனக்காகத் தியாகம் செய்திருக்கிறியள்! உங்களுக்கு நான் இதுவரை தந்த கஷ்டம் போதும்; இந்தக் கலியாணம் பேசூற கஷ் டத்தையும் தரேல்லை!

முத்: அப்பிடி எண்டா, நீயே எங்கையோ பாத்து வைச்சிருக்கிறியோ பொம்பிளையை!

திரு:- (புன்முறுவல் பூத்து) அப்பிடி எண்டே வைச்சுக் கொள்ளுங்கோவன்!

மணி;- (ஆச்சரியப்பட்டு) என்ன திரு? பெரிய குண்டாத் தூக்கிப் போடுறுய்! எனக்குக் கூடத் தெரியாதே! என்னேடை மூண்டு வரியம் இருந்திருக்கிறுய்; ஒரு நாள் இது பற்றி ஒரு வார்த்தை சொல்லேல்லை! — —

முத்:- ஆரடா அது? சொல்லு, சொல்லு! நாங்களும் அறிவம்.

திரு:- (மணிவண்ணனின் தோளில் கை வைத்து) இவர் தானப்பா, உங்களுடைய சம்பந்தி!

மணி:- (திகைப்படைந்து) திரு! என்ன சொல்லுறாய்? நீ சொல்லுறது எனக்கு விளங்கேல்லை!

திரு:- (புன்முறுவலுடன்) இன்னும் விளக்கமாகச் சொல்ல வேணுமா? மணி! உன்னுடைய தங்கை மலரைத்தான், நான் கலியாணம் செய்யப் போறன்.

மணி:- (சங்கடப்பட்டு, எழுந்து நின்று திருநாதனைப் பார்த்து) திரு! நல்லா யோசிச்சுத் தானா, இந்த முடிவுக்கு வந்திருக்கிறாய்? உன்னுடைய படிப்பென்ன? உத்தியோகம் என்ன? ...... உனக்குப் பெண் தாறத்துக்கு எத்தினை பேர் போட்டி போடுறாங்கள்! ஒரு லட்சம், ரண்டு லட்சம் எண்டு சீதனங்கள் காத்துக்கிடக்கு!...... அதைவிட, உன்னுடைய அப்பா உனக்கு நிறையச் சீதனம் வாங்கிப், பெரிய இடத்திலை கலியாணம் செய்துவைக்கவேணுமெண்டிருக்கிறார்! ......

முத்:- (எழுந்து மணிவண்ணனுக்குக் கிட்டச் சென்று) அப்பிடிச் சொல்லாதை தம்பி! நான் சீதனத்தைப் பற்றிக் கவலைப்படேல்லை; என்ரை பிள்ளை படிச்சு, ஒரு மேல் நிலைக்கு வரவேணும் எண்டதுதான் என்ரை ஒரே ஆசை! அது நிறைவேறிப் போச்சு. உந்தக் கஞ்சற் சீதனங்களைப் பற்றி, நான் கவலைப்படமாட்டன்! இனி, தம்பி தானே விருப்பப்பட்டு, ஒரு பெண்ணைக் கட்டப் போறனெண்டா, நான் குறுக்கை நிக்க மாட்டன்!

திரு:- (உணர்ச்சிவசப்பட்டு) மணி! பணத்தை ஏன்? பதவியை ஏன்? மனிசரைத் தான் எனக்குத் தேவை! முன்னம் நான் படிக்கேக்கை, ஒரு சதம் கூட உதவி செய்ய முடியாதெண்டவை தான், இண்டைக்குக் "கலியாணம் கட்டடா" எண்டு கலைச்சுத் திரியினம்; காலைப் பிடிக்

கினம்! எனக்கு உதவி தேவையா இருக்கேக்கை உதவின வன், நீ ஒருத்தன் தான்! உன்னை மட்டும் தான் நான் ஒரு மனிசனு மதிக்கிறன்!

மணி:- நானென்ன அப்பிடிப் பெரிய உதவியைச் செய்துபோட்டன்? ஏதா இடைக்கிடை ஐஞ்சோ பத்தோ தந்திருப்பன்; அதுகும் அநேகமா நீ திருப்பித் தந்திருப்பா. அந்தச் சின்ன உதவிக்காக...... நீ ....

திரு:- மணி! பணம் தொகேலை ஒண்டுமில்லை. உதவி செய்ய வேணுமெண்ட மனம் தான் பெரிசு! ஒரு லட்சாதி பதிக்கு ஆயிரம் ரூபா பெரிய காசில்லை; அன்றைக்கே உழைச்சு, அன்றைக்கே சாப்பிடுகிறவனுக்கு, ஐஞ்சு ரூபா பெரிய காசு!

மணி;- திரு! நான் ஒரு நண்பனுக்கு என்னாலை இயன்ற உதவியைச் செய்யிறன் எண்டு நினைச்சு உதவி னனே தவிர, நீ என்னுடைய தங்கையைக் கட்டவேணு மெண்டு, கனவிலும் நினைக்கேல்லை!

திரு:- எனக்கு உதவி செய்யக்கூடிய நிலேலையா நீ இருந்தாய்? உன்னுடைய சம்பளமென்ன? உன்னுடைய வீட்டு நிலை என்ன? ...... எல்லாக் கஷ்டத்துக்குள்ளும் எனக் கும் உதவி செய்திருக்கிருய். நீ செய்த உதவிக்கு நான் என்ன செய்தாலும் கைமாருகாது!

மணி:- கல்யாண மெண்டது வாழ்க்கேல்லை ஒரு முக் கியமான கட்டம்; ஒருவருடைய பிற்கால வாழ்க்கையே அதிலை தான் தங்கி இருக்கு! ஒருக்காச் செய்தாப், பேந்து திருப்பி அதை மாத்தேலாது!

திரு:- அப்ப என்ன? நான் உனக்கு மச்சானு வாறது உனக்கு விருப்பமில்லையா?

மணி:- அதுக்குச் சொல்லேல்லை திரு! (உணர்ச்சி வசப்பட்டு) நீ இண்டைக்குச் சிவில் சேவன்ரா வராட் டாக்கூட, என்னுடைய தங்கையை உனக்குத் தரத் தயார்! ஆனு, கலியாணம் செய்யேக்கை, ஒன்று, தாய் தகப்பன் விரும்பிப் பேசுற இடத்திலை செய்யவேணும்; அல்லது

தான் மனதார விரும்பூற பெண்ணைக் கட்ட வேணும்! அதை விட்டுட்டு,...... ஏதோ நான் செய்த சின்ன உதவிக்காக, நீ இந்தக் கலியாணத்தைச் செய்தா......... அது பெரிய தியாகம்! தியாகம் செய்யலாம்,....– ஆனா...., பின்னுக்குச் சந்தோஷமா இருப்பியா எண்டது தான் கேள்வி!

திரு:- அந்தக் கவலையே உனக்கு வேண்டாம்! நான் இப்ப உன்னுடைய தங்கையை விருப்பமில்லாமற் கல்யாணம் செய்யப்போறன் எண்டு, உனக்கெப்பிடித் தெரியும்?

மணி;- (வியப்புக்குறி தோன்ற) அப்பிடியானா........ என்ன கருத்து?

திரு:- (புன்சிரிப்புடன்) நான் மலரை பூரண விருப்பத்தோடை தான் கலியாணம் செய்யப் போறன்! வேணுமெண்டா, உன்னுடைய தங்கையையே கேட்டுப் பார், நான் அவளை விருப்பமாக் கட்டுறனா இல்லையா எண்டு. இதுக்கு மேலே விளக்கமாச் சொல்லேலாது.......

மணி:- (சிறிது யோசித்து விட்டு, மெதுவாகச் சிரித்து) ஓஹோ! அப்பிடியா சங்கதி? எனக்குக் கூடத் தெரியாமற் போச்சே, இவ்வளவு காலமும்!...... அவள் கள்ளி! அவள் கூடச் சொல்லேல்லை!

திரு:- அதெல்லாம் எப்பவோ, பள்ளிக்கூடத்திலை படிக்கிற காலத்திலை தீர்மானிக்கப்பட்ட விஷயம். நான், எங்களுடைய பேர் ஏன் வீணா அடிபடுவான் எண்டு ஒருத்தருக்கும் பேசேல்லை!

மணி:- இப்பதானே எனக்கும் விளங்குது, படிக்கிற காலத்திலை நீ ஏன் அடிக்கடி எங்க வீட்டுப்பக்கம் வாறனி எண்டு. (சிரித்து) நானும் ஏதோ என்னைக் காணத்தான் வாறியாக்கு மெண்டிருந்தன்!

திரு:- போடா! அதைத் தவறா விளங்காதை. நான் அப்ப வரத் தொடங்கினது உண்மையா உன்னைச் சந்திக்கத்தான். ஆனா, அப்பிடி அடிக்கடி வந்ததாலை தான், இது இப்பிடியாப் போச்சு.

014001



முத்:- நான், இவ்வளவு காலமும், என்னுடை பிள்ளை படிப்பிலை மட்டும்தான் கெட்டிக்காறன் எண்டிருந்தன். (சிரித்து) இப்ப பாத்தா, அவன் இந்த விஷயங்களிலும் கெட்டிக்காறனுத்தான் இருந்திருக்கிறுன். (மணிவண்ணனைப் பார்த்து) இதைத் தான் தம்பி சொல்லூறது. "பழம் நழுவிப் பாலிலை விழுந்ததெண்டு"!

[முத்துவேலர், மணிவண்ணன் இருவரும் வாய்விட்டுச் சிரிக்கின்றனர். திருநாதன் உதட்டில் புன்னகை தவழ நிற்கிறுன்.]

திரை

முற்றும்.

அராலி தெற்கு V. சிற்றம்பலம் அவர்களால், யாழ்ப்பாணம் 541, கே. கே. எஸ். வீதியில் இருக்கும் நாமகள் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட ட்டது.

[illegible] 39/7
11/10/86 [illegible] 086
4/11/86 [illegible] D005
1/1 [illegible] 66
5.10 [illegible] B283
16.12.4 B229

...AYACA... LIB...
...PALALAI WEST
CHUNNAKAM

# இந்நூல் ஆசிரியர்



'திரு. ... சுந்... பிள்ளை ... இலங்கைப் ... கழகப் பேரா... வளாகத்தி... காலத்தில் ஆர்வ... துடிப்பும் ... இளைஞராகத் ... இனங் ... கொண்டவர் ... மேடைகளில் அ... கேட்டோரை... பேச்சாள... தோன்றினர்.

காலஞ் சென்ற பேராசிரியர் க. கண... பதிப்பிள்ளை அவர்களினல் எழுதப்பட்டு எம்மால் தயாரிக்கப்பட்ட 'சுந்தரம் எங்கே', 'துரோகிகள்' ஆகிய நாடகங்களில் அவர் பங்கேற்ற வேளையில் அவரது நடிப்புத்திறனைக் கண்டு மகிழ்ந்தோம். பள்ளிப்பருவ முதற் கொண்டே அவர் தமிழ் நாடகத் துறையில் ஈடுபாடுள்ளவராக இருந்து வந்திருக்கின்றார். அவ்வார்வம் இன்றும் அருகிவிடாதிருப்பது எமக்குப் பேருவகையினை அளிக்கிறது.

......நாடகக் கலையார்வத்துடனும் சமூக நோக்குடனும் நாடகங்களை ஆக்கும் திரு. சுந்தரம்பிள்ளை பாராட்டுக்குரியவர். அக்காரணத்தினலேதான் நாடகத் துறையில் தாம் கொண்ட ஆர்வத்தைத் திரு. சுந்தரம் பிள்ளை துறந்து விடாது தொடர்ந்து பல நாடகங்களை எழுதி அரங்கேற்றி வருகிறார்.......'

அணிந்துரையில்

பேராசியர் கலாநிதி சு. வித்தியானந்தன்